Registered as a Newspaper

# உதயன் சஞ்சீவி

சுடர் : 37
கதிர் : 303

ஞாயிற்றுக்கிழமை
25 செப்ரெம்பர் 2022

புரட்டாதி 08 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2053

பக்கங்கள்: 16+08

விலை: 60/=

## யானை தாக்கி ஒருவர் மரணம்

*மடுவில் சம்பவம்*

மன்னார், செப். 25
மன்னார், மடுப்பகுதியிலுள்ள காட்டுக்குள் விறகு வெட்டச் சென்றவர் யானை தாக்கி உயிரிழந்தார். நேற்றுமுன்தினம் மாலை இந்த துயரச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மடு பிரதேச செயலகப் பிரிவிலுள்ள சின்னப் பண்டிவிரிச்சான் பகுதியில் வசித்து வந்த ஐந்து பிள்ளைகளின் தந்தையான கிறிஸ்தோப்பர் ஸ்ரான்லி (வயது - 54) என்பவரே உயிரிழந்தவராவார். காட்டுக்குள் சென்றவரைக் காணவில்லை என்று அயலவர்களின் உதவியுடன் அவரைத் தேடியபோதே மேற்படி நபர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

(அ-ம-60)

*அதியுயர் பாதுகாப்பு வலயம் அறிவிப்பு*

# அரசாங்கத்துக்கு எதிராக கொழும்பில் போராட்டம்!

### பெருமளவானோருக்கு அடி, உதை; பொலிஸ் அராஜகம் அரங்கேற்றம்



கொழும்பு, செப். 25
கொழும்பு மாவட்டத்தில் அதியுயர் பாதுகாப்பு வலயங்களைப் பிரகடனப்படுத்தி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பிறப்பித்த உத்தரவுக்கு எதிராக மருதானை - டீன்ஸ் வீதியில் நேற்று ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

போராட்டக்காரர்களைக் கலைக்கப் பொலிஸார் கண்ணீர்ப்புகை மற்றும் நீர்த்தாரைப் பிரயோகத்தையும் வன்முறைகளையும் கையாண்டதால் அங்கு பதற்றமான சூழ்நிலை ஏற்பட்டது. மேலும், இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டவர்களில் சுமார் 25 பேர் கைதுசெய்யப்பட்டனர். நாடாளுமன்ற வளாகம், உயர் நீதிமன்றம், மேல்நீதிமன்றம், கொழும்பிலுள்ள நீதிவான் நீதிமன்றங்கள், ஜனாதிபதி செயலகம், ஜனாதிபதி 15 ▶

**முச்சந்தி முரளி**



"அப்ப திரும்பவும் கொழும்பில பிரளயம் தொடங்கப் போகுது கண்டியளோ"

*உயிர்கொல்லிப் போதை*

## ஹெரோய்னை பாவித்த ஒருவர் நேற்று இறப்பு!

யாழ்ப்பாணம், செப். 25
உயிர்கொல்லிப்போதைப்பொருளானஹெரோய்னை எடுத்துக்கொண்ட மற்றொருவர் நேற்று அதிகாலை உயிரிழந்துள்ளார். இளவாலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியைச் சேர்ந்த 29 வயதுடைய நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். 15 ▶

*போதைக்கு எதிரான*

# சிகிச்சை மையம் வடக்கில் தேவை

**யாழ்ப்பாணம், செப்ரெம்பர் 25**

**போதைப் பொருளுக்கு எதிரான சிகிச்சை மையங்கள் வடக்கு - கிழக்கில் இல்லை. இந்தக் குறை உடனடியாக நிவர்த்திசெய்யப்பட வேண்டும் - இவ்வாறு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் அண்மையில் இடம்பெற்ற போதைப்பொருளுக்கு எதிரான கலந்துரையாடலில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.** 15 ▶

*போதைக்கு அடிமையான நிலையில்*

## உளவள சிகிச்சைகளுக்கு வாராந்தம் 30 மாணவர்கள்

யாழ்ப்பாணம், செப். 25
யாழ். மாவட்டத்தில் ஒவ்வொரு வாரமும் சராசரியாக 30 மாணவர்கள் போதைப் பொருளுக்கு அடிமையான நிலையில், சாவகச்சேரியில் இடம்பெறுகின்ற உளவள 15 ▶

*பிரபல யாழ். பாடசாலையின்*

## மாணவர்கள் நால்வர் போதையுடன் கைது!

யாழ்ப்பாணம், செப். 25
யாழ்ப்பாணத்தில் பிரபல பாடசாலை ஒன்றில் பயிலும் மாணவர்கள் நால்வர் மதுபானம் மற்றும் மாவா போதைப் பொருளுடன் நேற்றுக் கைது செய்யப்பட்டனர் என்றும், நால்வரும் கடுமையாக எச்சரிக்கப்பட்ட பின்னர் பெற்றோரிடம் 15 ▶

## இலங்கையில் அனைவருக்கும் சம உரிமையாம்

### ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

கொழும்பு, செப். 25
இலங்கை ஜனநாயக நாடு. இங்கு வாழும் சகல இனத்தவர்களுக்கும், அனைத்து மதத்தவர்களுக்கும் சம உரிமைகள் 15 ▶

*நாளைய தினத்தில்*

## திலீபனை அஞ்சலிப்பதற்காக கடற்றொழிலைத் தவிர்க்குக!

யாழ்ப்பாணம், செப். 25
தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் வாரத்தின் இறுதிநாள் நிகழ்வுக்கு ஆதரவளிக்கும் வகையிலும் திலீபனை அஞ்சலிக்கும் வகையிலும் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் நாளை கடற்றொழிலுக் 15 ▶

## நாடாளுமன்றைக் கலைக்க ஜனாதிபதி ரணில் திட்டம்!

### வாசுதேவ நாணயக்கார தெரிவிப்பு

கொழும்பு, செப். 25
நாடாளுமன்றத்தைக் கலைத்து பொதுத்தேர்தலை நடத்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவதானம் செலுத்தியுள்ளார். 15 ▶

*அரச எதிர்ப்புப் போராட்ட எதிரொலி*

## பட்டத்தை நிறைவுசெய்யாமல் காலத்தை இழுத்தடிப்போர் யார்?

### பல்கலை மாணவர்களின் விவரங்களை கோருகின்றது பாதுகாப்பு அமைச்சு

கொழும்பு, செப். 25
அரசாங்கத்துக்கு எதிராகப் பல்கலைக்கழகங்களில் போராட்டங்கள் தீவிரமாகியுள்ள நிலையில், பல்கலைக் கழகங்களில் உள்வாரி மாணவர்களாகப் பதிவு செய்து விட்டு, உரிய காலத்தினுள் பட்டம் பெற்று வெளியேறாமல், திரும்பத் 15 ▶

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விற்பனை, விநியோகத்தை தடுப்பதே போதைப்பாவனையை கட்டுப்படுத்தும்

## பேராசிரியர் சிவயோகன் தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், செப்.25**

**போதைப்பொருள் பாவனையைக் கட்டுப்படுத்துவதற்குப் போதைப்பொருள் விற்பனை, விநியோக மார்க்கங்களைக் கட்டுப்படுத்துவதே முதன்மையானது. போதைப்பொருளுக்கு அடிமையானவர்கள் புனர்வாழ்வளிக்கப்பட்டு வெளியே வந்ததும் மீண்டும் போதைப்பாவனைக்கு அடிமையாகும் சூழலே தற்போதுள்ளது.**

இவ்வாறு பேராசிரியர் சிவயோகன் தெரிவித்தார். அண்மையில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் போதைப் பாவனையைக் கட்டுப்படுத்துவது தொடர்பாகக் கலந்துரையாடலில் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

போதைப்பொருள் பாவனையால் ஒரு தனிமனிதனிடம் உடல், உளம் சார்ந்த பல்வேறுபட்ட பிரச்சினைகள் தோற்றம் பெறுகின்றன.

யாழ்ப்பாணத்தில் 5 ஆண்டுகளுக்கு முன்னர் இருந்த போதைப் பொருள் பாவனைத் தரவுகளை தற்போதைய நிலைமையுடன் ஒப்பிடும்போது, தற்போது போதைப் பொருள் பாவனை தீவிரம் பெற்றுள்ளமையைக் காண முடிகின்றது.

போதைப்பொருளுக்கு அடிமையானவர்களுக்கு வழங்கப்படும் புனர்வாழ்வைக் குறிப்பிட்ட காலத்துக்கு போதைப்பாவனையைக் கட்டுப்படுத்தும் ஒன்றாகவே கருதமுடியும். புனர்வாழ்வு பெற்று வெளியே வந்த பின்னர், மீண்டும் போதைப்பழக்கத்துக்கு அடிமையாகும் நிலைமையே காணப்படுகின்றது.

இந்தப் பிரச்சினைக்கான முழுமையான தீர்வாகப் போதைப்பொருள் விற்பனை, போதைப் பொருள் விநியோகம் என்பவற்றைக் கட்டுப்படுத்த வேண்டும் - என்றார். (எ-125)



# திலீபன் வழியில் வருகிறோம் ஊர்திப் பவனி வடமராட்சியில்

யாழ்ப்பாணம், செப்.25

தியாக தீபம் திலீபனின் 35 ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு 'திலீபன் வழியில் வருகிறோம்' என்ற தொனிப்பொருளுடன் முன்னெடுக்கப்படும் ஊர்தி பவனி நேற்று வடமராட்சிக்குள் பிரவேசித்தது.

தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் இளைஞர் அணியின் ஏற்பாட்டில் கிழக்கு மாகாணத்தின் பொத்துவிலில் ஆரம்பித்த ஊர்தி பவனி, தியாக தீபம் திலீபனின் திருவுருவப்படம் தாங்கியவாறு பருத்தித்துறை நகருக்குள் நேற்றுக்காலை பயணித்தது.

தியாக தீபம் திலீபனின் உருவப்படத்திற்கு பலரும் அஞ்சலி செலுத்தினர். பருத்தித்துறையில் அமைந்துள்ள தியாகதீபம் திலீபனின் தூபியடியில் அஞ்சலி நிகழ்வும் இடம்பெற்றது.

இந்த ஊர்திப் பவனி யாழ். மாவட்டத்தின் பல்வேறு பகுதி களுக்கும் பயணிக்கவுள்ளதுடன் எதிர்வரும் 26 ஆம் திகதி நல்லூரில் அமைந்துள்ள தியாக தீபம் திலீபனின் நினைவாலயத்தை வந்தடையும். (எ-26.20)

# சிறுமி மாயம் பொலிஸில் முறைப்பாடு

யாழ்ப்பாணம், செப்.25

17 வயதுச் சிறுமி ஒருவரைக் காணவில்லை என்று வட்டுக்கோட்டைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தச் சிறுமி நாடகமும், அரங்கியலும் செயன்முறைப் பரீட்சைக்காக கடந்த புதன்கிழமை பாடசாலை சென்ற நிலையில், வீடு திரும்பவில்லை என்று முறைப்பாட்டில் தெரிக்கப்பட்டுள்ளது. முறைப்பாட்டுக்கு அமைய வட்டுக்கோட்டைப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (எ-125)

# கஞ்சா ஏற்றுமதிச் சட்டம் விரைவில் அமைச்சரவைக்கு

கொழும்பு, செப்.25

ஔடத பயன்பாட்டுக்கான கஞ்சா மூலிகையை ஏற்றுமதி செய்வதற்கான சட்டம் அமைச்சரவையின் அனுமதிக்காக சமர்ப்பிக்கப் படவுள்ளது என்று தேசிய மருத்துவ, இராஜாங்க அமைச்சர் சிசிர ஜயகொடி தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்ததாவது:

எதிர்வரும் 5 ஆம் திகதிக்கு முன்னதாக அதற்கான அடிப்படை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும். மருத்துவ தேவைக்கான கஞ்சா மூலிகையை உற்பத்தி செய்வதன் ஊடாக நாட்டுக்கு அதிகளவான ஏற்றுமதி வருமானத்தை ஈட்டிக் கொள்ள முடியும்.

உள்ளூர் மருத்துவம் மற்றும் ஆயுள்வேத்தை ஊக்குவிப்பதன் மூலம் மட்டுமே 3 பில்லியன் டொலர் அந்நியச் செலாவணியைப் பெற முடியும். நாங்கள் பெரும் வளத்தின் மீது வாழ்கிறோம். அந்த வெற்றிகளை இன்னும் எமது நாட்டுக்கு வழங்க முடியாமல் உள்ளது.

இது தொடர்பாக உள்ள தடைகள் குறித்து கடந்த சில நாள்களாக நாடாளுமன்றத்திலும் வெளியேயும் நீண்ட விவாதம் இடம்பெற்று வருகின்றது. மருத்துவ குணம் கொண்ட கஞ்சா பற்றியும், அதன் ஏற்றுமதி சாத்தியம் பற்றியும் மிகவும் வலுவான விவாதம் நடைபெற்று வருகின்றது.

குறிப்பாக, கஞ்சா மூலிகையின் ஏற்றுமதி பிரதிபலனை எதிர்வரும் காலங்களில் நாட்டுக்கு வழங்க முடியும். சர்வதேச சந்தையில் மருத்துவ கஞ்சாவுக்கு 4 ரில்லியன் டொலருக்கும் அதிகமான கேள்வி உள்ளது. இவை ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக பாரம்பரிய மருத்துவத்தில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

மேற்கத்தைய ஆங்கிலேயப் பேரசு காலத்தில் இந்த மருத்துவ செயற்பாடுகள் கட்டுப்படுத்தப்பட்டன.

அந்தப் பாரம்பரிய மருத்துவத்துடனேயே மருத்துவக் குணம் கொண்ட கஞ்சா பற்றிய விவாதம் எழுந்தது- என்றார். (எ-இ)

# ருமேனியா ஊடாகத் தப்பிக்க முயன்ற இலங்கையர்கள் கைது

கொழும்பு, செப்.25

இலங்கையர்கள் உட்பட 70க்கும் மேற்பட்டவர்கள், ருமேனியாவில் இருந்து ஐரோப்பிய நாடுகளுக்கு செல்லும் நோக்குடன் தப்பிச் செல்கையில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொருள்களை ஏற்றிச்சென்ற மூன்று பாரவூர்திகளில் மறைந்து பயணித்தபோதே அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்ட 70 பேரில் 37 இலங்கையர்கள் உள்ளடங்கியிருந்தனர். அவர்கள், இலங்கையின் எந்த பிரதேசத்தை சேர்ந்தவர்கள் என்பது தொடர்பான தகவல் வெளியாகவில்லை.

முதலாவது சம்பவத்தில், இத்தாலிக்கு குளிர்சாதனப் பெட்டிகளை ஏற்றிச் சென்ற பாரவூர்தியில் இருந்து 35 பேர் கைதுசெய்யப்பட்டனர். ஹங்கேரி மேற்கு எல்லையில் வைத்து அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அதேநேரம் போலந்துக்கு குளிர்சாதனப் பெட்டிகளை ஏற்றிச்சென்ற இரண்டாவது பாரவூர்தியில் மறைந்திருந்த நிலையில் 20 துருக்கியர்கள் கைது செய்யப்பட்டனர். மூன்றாவது பாரவூர்தி, வாகன உதிரிபாகங்களை ஏற்றிக்கொண்டு இத்தாலிக்கு பயணித்த நிலையில் அதில் இருந்து 15 பங்களாதேஷ் மற்றும் எத்தியோப்பியர்கள் கைது செய்யப்பட்டனர். (எ-இ)

# திரிபோஷா நிறுவனத்தின் அறிவிப்பு

நிர்ணயிக்கப்பட்ட நியமங்களுக்கு அமைய உற்பத்தி செய்யப்படும் திரிபோஷா சுகாதார மருத்துவ அதிகாரிகளின் அலுவலகங்களுக்கு தொடர்ச்சியாக விநியோகிக்கப்படும் என சிலோன் திரிபோஷா நிறுவனம் அறிவித்துள்ளது.

அந்தத் தயாரிப்புகளுடன், திரிபோஷா உற்பத்திக்காகப் பயன்படுத்தப்படும் சோளக் கையிருப்பிலுள்ள அப்லாடொக்சின் சதவீதம் தொடர்பான அறிக்கையும் அனுப்பி வைக்கப்படும் என்று அதன் தலைவர் தீப்தி குலரத்ன தெரிவித்தார். சுகாதார அமைச்சின் பரிந்துரைக்கப்பட்ட சதவீதங்களின்படி, தற்போதைய சூழ்நிலையில் திரிபோஷா உற்பத்திக்கான சோளத்தைக் கண்டுபிடிப்பதில் சிரமம் உள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, திரிபோஷா கையிருப்பில் அப்லாடொக்சின் சதவீதம் உரிய அளவை விட அதிகமாக இருப்பதாக வெளியான தகவல் தொடர்பாக சுகாதார அமைச்சு தலைமையிலான விசாரணை தற்போதும் தொடர்கின்றது. (எ-இ)

# ரணிலின் அறிவிப்புக்கு எதிராக விரைவில் சட்ட நடவடிக்கை

## சட்டத்தரணிகள் சம்மேளனம் தெரிவிப்பு

கொழும்பு, செப்.25

கொழும்பு மாவட்டத்தில் அதியுயர் பாதுகாப்பு வலயங்களைப் பிரகடனப்படுத்தி ஜனாதிபதி பிறப்பித்த உத்தரவு தொடர்பில் மக்களின் அடிப்படை உரிமைகளை பாதுகாக்க உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று இலங்கை சட்டத்தரணிகள் சம்மேளனம் தெரிவித்துள்ளது.

நாடாளுமன்ற வளாகம், உயர்நீதிமன்றம், மேல் நீதிமன்றம், கொழும்பில் உள்ள நீதவான் நீதிமன்றங்கள், ஜனாதிபதி செயலகம், ஜனாதிபதி மாளிகை, அலரிமாளிகை, பிரதமர் அலுவலகம், இலங்கை இராணுவம், கடற்படை, வான் படை மற்றும் பொலிஸ் தலைமையகம் போன்ற இடங்களை கொழும்பு மாவட்டத்தில் உயர் பாதுகாப்பு வலயங்களாகப் பிரகடனப்படுத்தும் வர்த்தமானியை ஜனாதிபதி நேற்றுமுன்தினம் வெளியிட்டார்.

அதன்படி பொலிஸ் மா அதிபரின் அனுமதியின்றி, அத்தகைய உயர் பாதுகாப்பு வலயங்களுக்குள் அமைந்துள்ள வீதி, மைதானம், கரை அல்லது ஏனைய திறந்தவெளி பிரதேசங்களில் பொதுக் கூட்டங்கள் அல்லது ஊர்வலங்கள் யாவும் தடை செய்யப்படுகின்றன.

தகுதிவாய்ந்த அதிகாரசபை அல்லது பாதுகாப்பு அமைச்சின் செயலாளரது அனுமதியின் கீழ் மாத்திரமே இந்த பிரதேசங்களில் வாகனங்களை நிறுத்த முடியும். இந்தநிலையில் ஜனாதிபதியின் இந்த உத்தரவு, அதை மீறுவோரை காவலில் வைப்பதற்கும், கருத்துச் சுதந்திரத்தை மீறுவதற்கும், அமைதியாக ஒன்றுகூடுவதற்கான சுதந்திரத்துக்கும் கடுமையான விதிகளை கொண்டுள்ளது என்று சட்டத்தரணிகள் சம்மேளனம் குறிப்பிட்டுள்ளது. (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதுகில் குத்தியோரை தூக்கி எறிகிறது சு.க?

சுதந்திரக் கட்சியின் மத்திய குழுத் தீர்மானத்தை மீறி, அரசாங்கத்தில் இணைந்த உறுப்பினர்கள் அனைவரும் அவர்கள் வகித்த சகல பதவிகளிலிருந்தும் நீக்கப்பட்டுள்ள நிலையில், அவர்களை கட்சியில் இருந்தும் நீக்குவதற்கு சுதந்திரக் கட்சியின் மத்திய குழு அவதானம் செலுத்தி யுள்ளது என்று பேராசிரியர் ரோஹண லக்ஷ்மன் பியதாஸ தெரிவித்தார்.

நிமல் சிறிபால டி சில்வா, மஹிந்த அமரவீர, லசந்த அழகியவன்ன, ரஞ்சித் சியம்பலாப்பிட்டி, ஜகத் புஷ்பகுமார, சாமர சம்பத் தசநாயக்க ஆகியோரையே கட்சியில் இருந்து நீக்கவும் பரிசீலிக்கப் படுகின்றது என்று தெரியவருகின்றது.

அரசாங்கத்துடன் இணைந்தமை தொடர்பில் விளக்கமளிக்கு மாறு மேற்படி நபர்களை கட்சியின் ஒழுக்காற்றுக் குழு கோரி, அதற்காக அவகாசமும் வழங்கியுள்ளது. இந்த அவகாசத்துக்குள் அவர்கள் தமது தரப்பு நியாயத்தை முன்வைக்கத் தவறும் பட்சத்தில் அல்லது அவர்களின் நியாயப்பாடுகள் திருப்தியற்ற விதமாக இருக்கும் பட்சத்தில் அவர்கள் கட்சியில் இருந்து நீக்கப்படுவதற்குத் தீவிரமாகப் பரிசீலிக்கப்படுவார்கள் என்றும் பேராசிரியர் ரோஹண லக் ஷ்மன் பியதாஸ தெரிவித்துள்ளார். (அ-ம)


## இலவச ஆங்கில கணினி வகுப்புக்கள்

பிரிவு 41

புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன

- Diploma in English
- Diploma in ICT
- Diploma in Singalam
- Diploma in Political Science
- Diploma in Psychology & Counseiling
- IELTS, LIFE SKILLS (A1, B1), டொச் மொழி வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன.
- O/L, A/L வகுப்புக்களுக்கான English, ICT Paper Class வகுப்புக்கள் நடைபெறுகின்றன.
- LLB Entrance வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன.

ஆரம்பம் : 1, 2 /10/2022 10.00 AM

- காலம் : 03 மாதங்கள்
- சான்றிதழ் பிரிவுகள்

குறிப்பு: க.பொ.த (உ/த) பரீட்சைக்கு தோற்றி பெறுபேறு பெற்ற மாணவர்கள் இணைந்துகொள்ள முடியும்

IPS To Your Future திருநெல்வேலி

மேலதிக விபரங்களுக்கு 021 424 0229 076 685 2529

## வேலையாட்கள் தேவை

எமது தளபாட நிலையத்திற்கு தச்சு வேலையாட்கள், வாகன சாரதி, கூலிவேலையாட்கள் தேவை. தொடர்ச்சியான வேலையும் தங்குமிட வசதியும் உண்டு.

தொடர்பு-

ஆர்க் தளபாட நிலையம்
35, கொட்டைக்காடு ஒழுங்கை,
கோண்டாவில் கிழக்கு.
(பஸ் டிப்போ அருகாமை)

T.P 0212219909
0773001763

## சொத்துக்கள் விற்பனைக்கு

- மருதனார்மடத்தில் 20 பரப்பு ( பிரித்துக் கொடுக்கப்படும்.)
- மல்லாகத்தில் 1¾, 3½ பரப்பு
- கோண்டாவில் 1½ பரப்பு
- புன்னாலைக்கட்டுவன் அச்செழு வீதியில் 1½ பரப்புக்காணி
- மருதனார்மடம் உரும்பிராய் வீதியில் 1½ பரப்பு
- தாவடி சுதுமலை வீதியில் 1½ பரப்பு காணி
- வடமாகாணத்தில் சொத்துக்கள் வாங்க, விற்க அழையுங்கள் (N.R Realstate)

077 104 8865, 076 707 0743


## இலங்கை வங்கியின் புதிய கிளை திறப்பு

சங்கானை, மல்லாகம் சந்தியில் இலங்கை வங்கியின் புதிய கிளை ஒன்று கடந்த செவ்வாய்க்கிழமை திறந்து வைக்கப்பட்டது. புதிய வங்கிக் கிளையில் உத்தியோகபூர்வமாக வங்கிச் சேவைகள் ஆரம்பிக்கும் முகமாக கடன் வழங்கல், வைப்புக்களை ஏற்றல் ஆகிய நிகழ்வுகள் இடம்பெற்றன. அதனைத்தொடர்ந்து கல்வியில் சிறந்த மாணவர்கள், நீண்டகால வாடிக்கையாளர்கள் ஆகியோர் கௌரவிக்கப் பட்டனர்.

நிகழ்வில் பிரதம அதிதியாக வடக்கு மாகாண பிராந்திய முகாமையாளர் சிவாஞ்சன், இலங்கை வங்கி யாழ். முகாமையாளர், சங்கானை பிரதேச செயலர், வலி.மேற்குப் பிரதேசசபைத் தவிசாளர், மானிப்பாய் பொலிஸ் உதவிப் பொறுப்பதிகாரி உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (ஒ-14,27)

*பொலிஸாருக்கு பயந்து*

## தப்பியோடிய சாரதியால் தூக்கி வீசப்பட்டார் மாணவி

யாழ்ப்பாணம், செப். 25


திருநெல்வேலி பிரதான வீதியில் நடந்து சென்ற பல்கலைக்கழக மாணவி ஒருவரை மோட்டார் சைக் கிளில் வந்தவர் மோதியதில் படுகாயமடைந்த நிலையில் குறித்த மாணவி யாழ்.போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித் துள்ளனர்.

இந்தச் சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றுள்ளது. யாழ்.பல்கலைக்கழகத்தில் கற்கும் திருகோணமலையைச் சேர்ந்த மாணவியே காயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். விபத்தை ஏற்படுத்திய இளைஞரை பொலிஸார் கைதுசெய்து விசாரணை மேற்கொண்டபோது குறித்த நபர் 17 வயதுடையவர் எனவும் சாரதி அனுமதிப் பத்திரமின்றி வாகனத்தைச் செலுத்தி யுள்ளார் எனவும் தெரியவந்துள்ளது.

பொலிஸார் வீதிச் சோதனை நடவடிக்கையை முன்னெடுத்திருந்தபோது, மேற்படி இளைஞனை மறித்துள்ளனர். பொலிஸாரின் அறிவுறுத்தலுக்கு அமைவாக வாகனத்தை நிறுத்தாது தப்பியோடிய போதே அவர் மாணவி மீது மோதினார் என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சந்தேகநபருக்கு எதிராக வழக்குப் பதிவு செய்து நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது என யாழ்ப்பாணம் பொலிஸார் தெரிவித்தனர். (ச-125)

## மரண அறிவித்தல்



### நடராசா விமலச்சந்திரன்

வியாபாரி மூலையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமர்கவும் கொண்ட சிதம்பரப்பிள்ளை நடராசா விமலச்சந்திரன் கடந்த (23.09.2022) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராசா, மங்கையற்கரசி அவர்களின் மகனும், காலஞ்சென்றவர்களான அந்தோனி இராசையா மேரி இராசையா அவர்களின் மருமகனும், சுவேந்தியின் அன்புக் கணவரும், கிஷான், தீபா ஆகியோரின் தந்தையும், பிரியா, சிம்மை ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்ற தேவாம்பிகை மற்றும் இராமச்சந்திரன், பாலச்சந்திரன், செல்வச்சந்திரன், நீலாம்பிகை, வேதாம்பிகை, யசோதாம்பிகை ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்ற E.P. இராசையா மற்றும் நவரட்ணம், ஜெயகுமார், சுரேஸ், அஜித்குமார் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.09.2022) ஞாயிற்றுக்கிழமை கனடாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
S.N இராமச்சந்திரன்
393/17, கோயில் வீதி,
நல்லூர்.
021 222 6461, 077 031 6712 (CS 20951) (3/6)

## மரண அறிவித்தல்

### வள்ளிநாயகி அரியரத்தினம்

தோற்றம் -31.07.1944 மறைவு-26.09.2022



அளவெட்டி பெருமாற்கடவையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட வள்ளிநாயகி அரியரத்தினம் நேற்று(24.09.2022) சனிக்கிழமை காலமானார். அன்னார் காலஞ்சென்றவர்களான கணவதிப்பிள்ளை நாகம்மா தம்பதியரின் அன்பு மகளும் அரியரத்தினத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான அன்னபூரணி, பரிபூரணி, தனலக்ஷ்மி, சரவணபவன் மற்றும் தவமணி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.09.2022) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தம்பளை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்

தொடர்புகளுக்கு
சரவணபவன் பிரணவன் (மருமகன்)-0779582315

## மரண அறிவித்தல்

### நாகரெட்ணம் சிவகுமார்



யாழ். கொட்டடியைப் பிறப்பிடமாகவும் வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட நாகரெட்ணம் சிவகுமார் கடந்த (22.09.2022) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகரெட்ணம் கனகேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும், கனடாவில் வசிக்கும் ஜெயக்குமார், விஜயமாலினி, சுரேஸ்குமார், சூரியகுமார், சந்திரகுமார் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (27.09.2022) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் வவுனியா பூந்தோட்ட இந்து மயான மண்டபத்தில் நடைபெற்று பின் தகனக்கிரியை இடம்பெறும் இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வல்லிபுர ஆழ்வார் திருவிழா கொடியேற்றத்துடன் ஆரம்பம்





வடமராட்சி, செப்.25

வரலாற்றுச் சிறப்பு மிக்க வடமராட்சி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய வருடாந்தத் திருவிழா நேற்றுக் கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

நேற்றுச் சனிக்கிழமை காலை 5.15 மணியளவில் பூசைகள் ஆரம்பிக்கப்பட்டு காலை 8.45 மணியளவில் கொடியேற்றம் இடம்பெற்றது.

17 தினங்கள் நடைபெறும் வருடாந்த பெரும் திருவிழா எதிர்வரும் 10ஆம் திகதி திங்கட்கிழமை நிறைவடையவுள்ளது. பெருந்திருவிழாக்களுக்கான வசதிகள் அனைத்தும் ஆலய நிர்வாகம், பருத்தித்துறை பிரதேசசபை, வடமராட்சி வடக்கு பிரதேச செயலகம், பருத்தித்துறை காவல் நிலையம் ஆகியவற்றால் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

ஆலயத்துக்கு வரும் பக்தர்கள் கலாசார உடை அணிந்து, தங்க ஆபரணங்களைத் தவிர்த்து, ஆசார சீலர்களாக வர வேண்டும் என்று ஆலய நிர்வாகம் கோரியுள்ளது. (எ-இ)

# இரணைமடுக் குளத்தின் கீழ் நூறு வீத சிறுபோகச் செய்கை

கிளிநொச்சி, செப்.25

**இரணைமடுக் குளத்தின் கீழ் இம்முறை நூறுவீத சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. சிறுபோகச் செய்கையின் பின்னரும் மேலதிகமாக 22 ஆயிரத்து 200 ஏக்கர் கன அடி நீர் எஞ்சியுள்ளது.**

இவ்வாறு இரணைமடு நீர்ப்பாசனப் பொறியியலாளர் எஸ்.செந்தில்குமரன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இரணைமடுக் குளத்தின் கீழ் இந்த ஆண்டு நூறுவீத சிறுபோகச் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலதிகமாகச் சில இடங்களும் பரீட்சார்த்தமாக உள்வாங்கப்பட்டு சிறுபோகம் செய்யப்பட்டது. சிறுபோகச் செய்கையின் பின்னரும் இரணைமடுக்குளத்தின் மொத்த நீர் கொள்ளளவின் அரைவாசிக்கும் கூடுதலான நீர் குளத்தில் உள்ளது.

குளத்தில் தற்போதுள்ள 31 ஆயிரத்து 700 கன அடித் தண்ணீரில் 9 ஆயிரத்து 500 கன அடி நீரை குடிதண்ணீர் மற்றும் ஏனைய தேவைகளுக்கு ஒதுக்கினாலும் 22 ஆயிரத்து 200 ஏக்கர் கன அடி நீர் எஞ்சியுள்ளது. என்று தெரிவித்தார்.

அதேவேளை, சிறுபோகச் செய்கைக்குள் புதிதாக உள்வாங்கப்பட்ட கோரக்கன்கட்டுப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சுமார் 700 ஏக்கர் விவசாயச் செய்கை போதிய நீர் வழங்கப்படாததால் கைவிடப்பட்டது என்று விவசாயிகள் குற்றஞ்சாட்டியுள்ளனர். குளத்தில் நீர் இருந்தும் தங்களுக்கு விவசாய நடவடிக்கைகளுக்கான நீர் வழங்கப்படவில்லை என்றும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (எ-113)



# சட்டவிரோத மரக்கடத்தல் வவுனியாவில் முறியடிப்பு

## சந்தேகநபர் தப்பியோட்டம்

வவுனியா, செப். 25

வவுனியா பூவரசங்குளம் பகுதியில் சட்டவிரோதமாக வெட்டப்பட்டு கடத்திச் செல்லப்பட்ட முதிரை மரக்குற்றிகள் பூவரசங்குளம் பொலிஸாரால் நேற்று கைப்பற்றப்பட்டுள்ளன.

தம்பனைப் பகுதியில் இருந்து வவுனியா நகரப் பகுதிக்கு கப்ரக வாகனமொன்றில் மரக்கடத்தல் இடம்பெறுகிறது எனப் பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கமைய இந்த மரக்கடத்தல் சம்பவம் முறியடிக்கப்பட்டுள்ளது.

அந்த வாகனத்தை பொலிஸார் மடக்கிப் பிடித்து சோதனையிட்டபோது அதிலிருந்து 6 முதிரை மரக்குற்றிகள் மீட்கப்பட்டன.

வாகனத்தின் சாரதி தப்பிச் சென்றுள்ள நிலையில் அவரைக் கைது செய்வதற்கான மேலதிக விசாரணைகள் இடம்பெறுகின்றன என பூவரசங்குளம் பொலிஸார் தெரிவித்தனர். (ச-100)

# கசிப்பு காய்ச்சுமிடம் முற்றுகை 545 லீற்றர் கோடா கைப்பற்றல்

யாழ்ப்பாணம், செப். 25

பலாலி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மயிலிட்டிப் பகுதியிலுள்ள பற்றைக்காட்டுக்குள் கடந்த வியாழக்கிழமை கசிப்பு காய்ச்சும் இடம் முற்றுகையிடப்பட்டு 545 லீற்றர் கோடா மீட்கப்பட்டுள்ளது என பலாலி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பலாலி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஜே/246 மயிலிட்டி கிராம அலுவலர் பிரிவில் கசிப்பு காய்ச்சப்படுகிறது எனக் கிடைத்த இரகசிய தகவலுக்கமைய சோதனை மேற்கொண்டபோதே 545 லீற்றர் கோடா மீட்கப்பட்டுள்ளது. அத்துடன், அவற்றுக்குப் பயன்படுத்தப்பட்ட உபகரணங்களையும் பொலிஸார் கைப்பற்றினர்.

கசிப்பு காய்ச்சும் நடவடிக்கையில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டில் சந்தேகநபர் ஒருவரும் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார். சந்தேகநபரை மல்லாகம் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்தனர். (ச-125)

# அனுமதிக்கு முரணாக மணல் ஏற்றியோர் கைது

கிளிநொச்சி, செப். 25

தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புளியம்பொக்கணை, கல்மடு, கல்லாறு போன்ற பகுதிகளில் அனுமதிப்பத்திரத்துக்கு முரணாக மணல் ஏற்றிய 5 நபர்கள் கைது செய்யப்பட்டனர் என்று தருமபுரம் பொலிஸார் நேற்றுமுன்தினம் தெரிவித்துள்ளனர்.

இந்தப் பகுதியில் அனுமதிப்பத்திரத்துக்கு முரணாக நபர்கள் மணல் அகழ்வில் ஈடுபடுகின்றனர் என்று தருமபுரம் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலுக்கமைய, 5 டிப்பர்களுடன் சாரதிகள் 5 பேர் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்கள் விசாரணைகளின் பின்னர் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டனர் என்று தருமபுரம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார். (எ-14,113)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அனுமதிப் பத்திரமின்றி மணலேற்றியோர் கைது

யாழ்ப்பாணம், செப்.25

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கோப்பாய் சந்திப் பகுதியில் அனுமதிப்பத்திரமின்றி மணல் ஏற்றிச் சென்ற குற்றச்சாட்டில் 4 டிப்பர்களுடன் சாரதிகள் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளனர் எனக் கோப்பாய் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கோப்பாய் சந்திக்கு அண்மையில் உள்ள பகுதியில் போக்குவரத்துப் பொலிஸார் கடமையில் ஈடுபட்டபோது குறித்த 4 டிப்பர்களை வழிமறித்து சோதனையிட்டனர்.

அதன்போது அனுமதிப்பத்திரமின்றி மணல் ஏற்றி வந்தமை கண்டறியப்பட்டது. அதனையடுத்து கிளிநொச்சி மற்றும் விசுவமடு பகுதியைச் சேர்ந்த சாரதிகள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்களை மேலதிக விசாரணைகளின் பின்னர் யாழ். நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்தனர். (ச-125)

## அவகாசம் துர்க்கனவே

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 51 ஆவது அமர்வில் இம்முறை இலங்கைக்குக் கடும் அழுத்தம் வழங்கப்படும் என்றே எதிர்பார்க்கப்பட்டது. இறுதிப்போரின்போது இடம்பெற்றதாகச் சொல்லப்படும் இனப்படுகொலைக் குற்றச்சாட்டுகளுக்கு மேலதிகமாக இந்த வருடத்தில் இலங்கை அரசாங்கத்தின் மீது 'பொருளாதாரப் படுகொலை' குற்றச்சாட்டுகளும் சுமத்தப்பட்டிருந்தன. இது இலங்கை அரசாங்கத்துக்கு எதிராக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் பிடி இறுகும் என்ற எதிர்பார்ப்பு மிகைந்திருக்கக் காரணமாக இருந்தது. ஆனால், ஒட்டுமொத்த எதிர்பார்ப்பையும் சல்லடையாக்கும் வகையில், இலங்கை அரசாங்கத்துக்கு வழக்கம்போல இரண்டு வருடகால அவகாசத்தை வழங்கியுள்ளது ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை.

இன்னும் வெளிப்படையாகச் சொல்வதாயின், மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடர் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட முன்னெடுப்புக்களுக்கும் காட்டப்பட்ட பூச்சாண்டி வேலைகளுக்கும் ஏற்ற, எந்தத் தாக்கமான நடவடிக்கைகளும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையால் இறுதிவரை முன்னெடுக்கப்படவேயில்லை. 'இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை ஊக்குவித்தல்' என்ற புதிய வரைவின் கீழ், இலங்கையின் பொருளாதாரக் குற்றங்களைக் கண்காணிக்கும் 'மேலதிக' வலியுறுத்தலுடன் முடிவுக்கு வந்திருக்கின்றது இந்த அவகாச அமர்வு.

இனி, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 53 ஆவது மற்றும் 55 ஆவது அமர்வில் வாய்மொழி மூலமான புதுப்பித்தலையும், 54 ஆவது அமர்வில் எழுத்து மூலப் புதுப்பித்தலையும் 'இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை ஊக்குவித்தல்' தொடர்பில் கொழும்பு வழங்க வேண்டும். 2024 ஆம் ஆண்டு இடம்பெறும் அமர்வில்தான் இலங்கை தொடர்பில் தீர்க்கமான தீர்மானங்கள் எடுக்கப்படலாம். அதுவும் சந்தேகமே. ஆக மொத்தத்தில் சர்வதேசப் பிடிமானத்தில் இருந்து இலங்கைக்கு ஒரு நீண்ட விலக்கை, இந்தப் புதிய தீர்மானம் வழங்கியிருக்கின்றது.

இலங்கையின் தற்போதைய பொருளாதார நலிவு நிலைக்கு தமிழர்கள் ஓரங்கட்டப்பட்டமையும் தீர்க்கமான தீர்வொன்று இந்த நாட்டில் நிலைப்படுத்தப்படவில்லை என்பதும் தற்போதைய ஜனாதிபதி ரணில், பிரதமர் தினேஷ் குணவர்த்தன உள்ளிட்ட பலரும் பகிரங்கமாக ஏற்றுக்கொண்ட விடயங்கள்தான். ஆதலால், இந்தப் பொருளாதார நலிவுநிலையை தகுந்த பணயமாக்கி, பொறுப்புக்கூறலுக்கு இலங்கை அரசாங்கத்தை வலுவாக நிலைநிறுத்த சர்வதேசத்துக்கு ஓர் அரிய வாய்ப்பு இருக்கவே செய்தது. அந்த 'வரலாற்று வாய்ப்பைக்கூட' தற்போது தூக்கித் தூர எறிந்திருக்கின்றது மனித உரிமைகள் பேரவை.


2024ஆம் ஆண்டில் இலங்கையின் பொருளாதாரம் இவ்வாறு இருக்கும் என்றல்ல. சர்வதேச நாணய நிதியத்தின் உதவிகள் இன்னபல விடயங்களை படர்கொம்பாக வைத்து இலங்கை மீண்டு வரக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. ஆதலால், இப்போது இருக்கும் இந்தச் சந்தர்ப்பவாதம் 2024 ஆம் ஆண்டில் சர்வதேசத்துக்குக் கிட்டும் என்றும் கிடையாது. எனவே, 2024 ஆம் ஆண்டு இலங்கையின் பொறுப்புக்கூறலை எதை அடிப்படையாக வைத்து சர்வதேசம் கண்டடையப்போகின்றது என்பது மனித உரிமைகள் பேரவைக்கே வெளிச்சம்.

எல்லாவற்றுக்கும் மேல், சர்வதேசத்திடம் நீதியைக் கோரி 2009ஆம் ஆண்டுமுதல் போராடிய எத்தனையோ உறவுகள் இன்று உயிருடன் இல்லை. இவ்வாறிருக்கையில், 2024ஆம் ஆண்டுவரையுள்ள நீண்ட அவகாசம் நீதியின் தேடலுக்கான துர்க்கனவாகவே அமைந்திருக்கின்றதே அன்றி வேறில்லை. தாமதிக்கப்பட்ட நீதி மறுக்கப்பட்ட நீதிக்குச் சமானம் என்பர். நீதி மறுக்கப்படுவதற்கும் மழுங்கடிக்கப்படுவதற்கும் அவகாசங்கள் காரணமாக இருக்கின்றன என்றால் அதனால் என்ன பயன்? அதை வழங்கும் அமைப்புகளால் என்ன பயன்?

நாளொரு நல்வார்த்தை

"வெற்றி என்பது நீங்கள் ஒவ்வொரு நாளும் செய்யும் சிறு சிறு முயற்சிகளின் கூட்டுத்தொகையாகும்"

**றொபேர்ட் கோலியர்**



# மார்ச் மாதத்தின் பின்னர் திடீரென பொதுத்தேர்தல்

## அரச உள்ளகத் தரப்புகள் தகவல்

**கொழும்பு, செப்.25**

**அடுத்தாண்டு மார்ச் மாதத்துக்குப் பின்னர் எந்த நேரத்தில் வேண்டுமானாலும் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு, அவசர பொதுத் தேர்தலொன்று நடத்தப்படலாம் என தெரியவருகின்றது.**

அரசாங்க உள்ளகத் தகவல்களை மேற்கோள் காட்டி, சிங்கள வார இதழொன்று இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது.

அரசமைப்பின் 20 ஆவது திருத்தச் சட்டத்தின்படி, முதலாவது நாடாளுமன்ற கூட்டத்தொடர் நடைபெற்ற திகதியில் இருந்து இரண்டரை வருடங்களுக்கு பின்னர் நாடாளுமன்றத்தைக் கலைக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ளது. உத்தேச 22 ஆவது திருத்தச்சட்ட மூலத்திலும் அந்த ஏற்பாடு மாற்றப்படவில்லை.

2023 ஆம் ஆண்டு மார்ச் மாதத்துக்குப் பின்னர் நாடாளுமன்றத்தைக் கலைக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு கிட்டும். அந்த அதிகாரத்தை பயன்படுத்தியே ஜனாதிபதி, அவசர பொதுத்தேர்தலொன்றுக்கு செல்வாரென நம்பப்படுகின்றது.

அதேவேளை, முன்கூட்டிய நாடாளுமன்றத் தேர்தலுக்கு சிறிலங்கா பொதுஜன பெரமுன கட்சி கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளது. ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாக்குவதற்கு மொட்டுக் கட்சி முன்வைத்த நிபந்தனைகளுள், நாடாளுமன்றம் முன்கூட்டியே கலைக்கப்படக்கூடாது என்பது பிரதானமானதாகும்.

ஆனால், சர்வகட்சி அரசாங்கம் அமைக்கும் முயற்சி தோல்வியில் முடிந்துள்ள நிலையில், அரசியல் ஸ்தீரமற்ற தன்மையும் ஏற்பட்டுள்ளது. அதனால் அவசர தேர்தல் நடத்தப்படலாம் எனத் தகவல் வெளியாகியுள்ளது. (எ-44)

# வெளிநாட்டுப் பயணங்களுக்கு கட்டுப்பாடுகள் விதித்த ரணில்

கொழும்பு, செப்.25

அமைச்சர்கள் மற்றும் இராஜாங்க அமைச்சர்களின் வெளிநாட்டுப் பயணங்களை மட்டுப்படுத்துவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நடவடிக்கை எடுத்துள்ளார்.

இதுதொடர்பில் ஜனாதிபதியால் முன் வைக்கப்பட்ட யோசனைக்கு, அமைச்சரவை இணக்கம் தெரிவித்துள்ளது.

நாட்டில் ஏற்பட்டுள்ள மோசமான பொருளாதார நெருக்கடி நிலைமையை கருத்திற்கொண்டு, அரச செலவுகளைக் குறைக்கும் நோக்கிலேயே இதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அமைச்சரவை அமைச்சர்கள் மற்றும் இராஜாங்க அமைச்சர்களின் வெளிநாட்டுப் பயணங்களை அத்தியாவசியப் பணிகளுக்காக மாத்திரம் மட்டுப்படுத்துவதற்கும், அவ்வாறான சுற்றுப்பயணங்களுக்கு அவசியமான அலுவலர் அல்லது அந்த சுற்றுப்பயணக் கடமைகளுக்கு அத்தியாவசியமான ஒரு சிலரை மாத்திரம் பங்கேற்கச் செய்தல் வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. (எ-44)

நாளை

**26.09.2022**
**திங்கட்கிழமை**
**புரட்டாதி - 09**

சுபநேரம் : 12.02 - 01.32
ராகுகாலம்: 07.32 - 09.02

**நவராத்திரி விரதாரம்பம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டின் அபிவிருத்திக்கு பங்காற்றும் மன்னார் - புத்தளம் வீதியை திறக்குக

*ஜனாதிபதிக்கு கடிதம்*

**மன்னார், செப்.25**

**நாட்டின் அபிவிருத்திக்கு பெரும் பங்களிப்பை வழங்கும் மன்னார் - புத்தளம் வீதி மக்கள் பாவனைக்குத் திறக்கப்பட வேண்டும் என மன்னார் மாவட்ட முசலி பிரதேசசபை ஜனாதிபதிக்குக் கடிதம் ஒன்றை அனுப்பி கோரிக்கை விடுத்துள்ளது.**

மன்னார் மாவட்டத்தில் முசலிப் பிரதேசசபைக் கூட்டம் கடந்த புதன்கிழமை தவிசாளர் ஏ.எச். சுபிஹான் தலைமையில் நடைபெற்றது.

நல்லாட்சிக்கான தேசிய முன்னணியின் முசலி பிரதேசசபை உறுப்பினர் பி.எம். முஜிபுர் றஹ்மான் இது தொடர்பில் பிரேரணை ஒன்றை முன்வைத்தார்.

இந்தப் பிரேரணைக்கு முசலிப் பிரதேசசபை உறுப்பினர்கள் அனைவரும் ஆதரவளித்த நிலையில் கடிதம் ஜனாதிபதிக்கு அனுப்பிவைக்கப்படவுள்ளது.

ஜனாதிபதிக்கு அனுப்பிவைக்கப்படவுள்ள கடிதத்தில் மேலும் உள்ளதாவது:

நாட்டின் வளர்ச்சிக்கும் சமூக மறுமலர்ச்சிக்கும் பொருளாதார மேம்பாட்டுக்கும் சிறந்த பாதைகள் பெரும் பங்காற்றுகின்றன.

2001 ஆம் ஆண்டு போர் நிறுத்த ஒப்பந்தத்தின்போது புத்தளம் - மன்னார் பாதை மற்றும் தலைமன்னார் தனுஷ்கோடி கப்பல் சேவை திறப்பது தொடர்பில் இந்தியாவுடன் பல கட்டப் பேச்சுக்கள் மேற்கொள்ளப்பட்டன.

புத்தளம் - மன்னார் வீதியை திறந்து மக்கள் பாவனைக்கு விடுவது தங்களின் கடமையாகும். மன்னார் மாவட்டம் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கான அரிசி உற்பத்தியில் பெரும் பங்களிப்பை வழங்குகின்றது. மீன்உற்பத்தியில் குறிப்பாக உலர் மீன் உற்பத்தியில் பங்காற்றுகின்றது. அத்துடன் பனைமரத்தால் உற்பத்தி செய்யப்படும் பல பொருள்கள் சுற்றுலாவிகளால் விரும்பப்படுகின்றன. சுற்றுலாவிகளது முக்கியமான தலங்களான மடுதேவாலயம், திருக்கேதீச்சரம் மற்றும் கோட்டைகள், பறவைகள் சரணாலயம் ஆகியவை மன்னார் மாவட்டத்தில் அமைந்துள்ளன.

மன்னார் மாவட்டத்துக்கான போக்குவரத்து வசதிகள் குறைபாடாகவே காணப்படுகின்றன.

நாட்டின் அபிவிருத்திக்கும் சமூக மறுமலர்ச்சிக்கும் பெருமளவில் பங்களிப்பை வழங்கும் புத்தளம் - மன்னார் வீதியை அபிவிருத்தி செய்து திறந்துவிட வேண்டியது முக்கியமாக நோக்கப்படவேண்டும் - என்றுள்ளது. (ச-60)

# போதைப் பாவனையில் சிக்கியிருக்கும் சமூகத்தை மீட்டெடுப்பதற்காக பாகுபாடின்றித் திரளவேண்டும்!

*யாழ். பல்கலை விஞ்ஞான பீட ஒன்றியம் வேண்டுகோள்*

யாழ்ப்பாணம், செப்.25

யாழ்ப்பாணத்தில் இளைஞர்களிடையே உயிர் கொல்லி ஹெரோய்ன் போதைப்பொருள் பாவனை அதிகரித்துள்ளது. இதைக் கட்டுப்படுத்த அனைவரும் பாகுபாடு இன்றி ஒன்றிணையவேண்டும்.

இவ்வாறு யாழ்ப்பாணம் பல்கலைக்கழக விஞ்ஞான பீட மாணவர் ஒன்றியத் தலைவர் சி.வினுஜன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது:-

யாழ். குடாநாட்டில் போதைப் பொருள் நுகர்வோரின் எண்ணிக்கை அதிகமாக உள்ளது. அதற்காக பணத்தை எங்கிருந்து பெறுகின்றனர்?

பாடசாலை மாணவர்கள் தொடக்கம் பல்கலைக்கழக மாணவர்கள் வரை இதன் பாவனை அதிகமாக காணப்படுகின்றது. மாணவர்களே விற்பனையாளர்களாக மாறியிருப்பதும் வேதனை அளிக்கின்றது.

பாடசாலை மாணவர்கள் முதல் பல்கலைக்கழக மாணவர்கள் வரை போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாகியுள்ளனர். மாணவர்களே விற்பனையாளர்களாக மாறியிருப்பது வேதனையளிக்கின்றது.

போதைப்பொருள் பாவனையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும். அனைவரும் பாகுபாடின்றி எமது சமூகத்தை மீட்டெடுக்க முன்வர வேண்டும். இந்தச் செயற்பாடுகளில் பங்கெடுக்க விஞ்ஞான பீட மாணவர் ஒன்றியமும் தயாராக இருக்கின்றது - என்றார். (எ-125)

# சிறுவர்களின் வளர்ச்சியை மதிப்பிடுவதற்குத் திட்டம்!

*விசேட மருத்துவர் சித்ரமாலி டி சில்வா தெரிவிப்பு*



கொழும்பு, செப்.25

நாட்டில் போஷாக்கு வேலைத்திட்டத்தை மிகவும் வலுவுள்ளதாக முன்னெடுக்கும் நோக்கில் முழு நாட்டையும் உள்ளடக்கிய 5 வயதுக்கு குறைந்த பிள்ளைகளின் எடை மற்றும் உயரம் ஆகிய இரண்டுக்கும் அமைவாக வளர்ச்சியை மதிப்பீடு செய்வதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்படும் என்று குடும்ப சுகாதார அலுவலகத்தின் பணிப்பாளர் விசேட மருத்துவர் சித்ரமாலி டி சில்வா தெரிவித்தார்.

சுகாதார மேம்பாட்டு பணியகத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற போஷாக்கு மாதம் தொடர்பில் தெளிவுபடுத்தும் விசேட ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்ததாவது:-

இந்த முறை தேசிய போஷாக்கு மாதத்தின் தொனிப்பொருள் குறைந்த செலவில் போஷாக்கை பாதுகாப்போம். தெளிவை ஏற்படுத்திக் கொள்வோம். முன் மாதிரியாக செயற்படுவோம். உற்பத்தியை மேற்கொள்வோம் பகிர்ந்து கொள்வோம் என்பதாகும்.

விசேடமாக தற்பொழுது பிள்ளைகளின் போஷாக்கு குறைபாடு தொடர்பில் கலந்துரையாடல்கள் இடம் பெற்று வருகின்றன. 5 வயதுக்கு குறைவான பிள்ளைகளின் வளர்ச்சியை மதிப்பீடு செய்வது தொடர்பாக அனைத்து மாவட்டத்திலும் உள்ள சுகாதார மருத்துவ அலுவலக ஊழியர்களுக்கும் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

அடுத்த மாதம் தமது பிரதேசத்தில் எடையை மதிப்பீடு செய்யும் நிலையத்திற்கு அல்லது குடும்ப சுகாதார சேவை அதிகாரியுடன் கலந்துரையாடி எடையை அளவீடு செய்யும் பிரதேசத்தில் சம்பந்தப்பட்ட நிலையத்துக்கு தமது பிள்ளைகளை அழைத்து சென்று வளர்ச்சி நிலையை அறிந்து கொள்வதற்கு பெற்றோர் ஆர்வம் காட்டவேண்டும் - என்றார். (எ-இ)



# தொல்காப்பியர் சிலை திறப்பு

வவுனியா, செப்.25

வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரியில் தொல்காப்பியர் சிலை நேற்றுத் திறக்கப்பட்டது.

பாடசாலை அதிபர் பா.கமலேஸ்வரி தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக வலயக் கல்விப் பணிப்பாளர் சு.அன்னமலர் கலந்து கொண்டார்.

நிகழ்வில் தொல்காப்பியர் சிலைக்கு ஆசிரியர் சு.சிவச்சந்திரன் மாலை அணிவித்து திறந்தார். (ச-110)

# கொரோனாத் தடுப்பூசி ஏற்றல் யாழ். செயலகத்தில் உரையாடல்

யாழ்ப்பாணம், செப். 25

கொரோனாத் தடுப்பூசி ஏற்றல் தொடர்பான கலந்துரையாடல் மாவட்டச் செயலர் க.மகேசன் தலைமையில் யாழ்.மாவட்டச் செயலகக் கேட்போர் கூடத்தில் கடந்த புதன்கிழமை இடம்பெற்றது.

நாட்டில் மீண்டும் கொரோனாத் தொற்று தீவிரமடைந்துவரும் நிலையில் 60 வயதுக்கு மேற்பட்டவர்கள் கட்டாயமாக மூன்றாவது மற்றும் நான்காவது தடுப்பூசிகள் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

இதுதொடர்பில் மக்களுக்கு விழிப்புணர்வு அறிவுறுத்தல்களை பிரதேச செயலர்கள் வழங்கவேண்டுமென யாழ். மாவட்டச் செயலர் அறிவுறுத்தினார்.

கலந்துரையாடலில் யாழ்ப்பாண மாவட்ட செயலர் க.மகேசன், யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன், சமுதாய மருத்துவர் நிபுணர் சு.சிவகணேஷ் மற்றும் பிரதேச செயலர்கள், சுகாதார மருத்துவ அதிகாரிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ச-20)

# அரசாங்கச் செலவுகள் 190 வீதமாக அதிகரிப்பு

*நிதி இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு*

கொழும்பு, செப்.25

அரசாங்கத்தின் வருமானத்தைவிட செலவுகள் நூற்றுக்கு 190 வீதமாக அதிகரித்துள்ளன.

இந்த நிலைமையில் ஊழல் மோசடிகளை இல்லாதொழித்து அரசாங்கத்தின் வருமானத்தை அதிகரிக்கவேண்டியது அனைவரினதும் பொறுப்பாகும் என நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க நாடாளுமன்றத்தில் கடந்த வியாழக்கிழமை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டில் பொருளாதார, நிதி நெருக்கடி இன்னும் நிவர்த்தி செய்யப்படவில்லை. அதனால் அரச வருமானத்தை அதிகரித்துக் கொள்வதற்காக ஜனாதிபதியும் அரசாங்கத்தினரும் பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

எத்தகைய நெருக்கடிகளை எதிர்கொள்ள நேர்ந்தாலும் நாட்டின் எதிர்காலம் தொடர்பில் நம்பிக்கையும் எதிர்பார்ப்பும் எமக்கு இருக்கின்றது. கடன் முகாமைத்துவம் தொடர்பில் தெளிவுடைய எவரும் அதுதொடர்பான அரசாங்கத்தின் செயற்பாடுகளை எதிர்க்கமாட்டார்கள் - என்றார். (ம)

# குருதிக்கொடை முகாம் இன்று

யாழ்ப்பாணம், செப். 25

யாழ்ப்பாணம் சத்தியசாயி சேவா நிலையத்தின் ஏற்பாட்டில் குருதிக்கொடை முகாம் இடம்பெறவுள்ளது.

சேர். பொன். இராமநாதன் வீதியிலுள்ள சத்தியசாயி நிலையத்தில் இன்று 25ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து நண்பகல் 12.30 மணிவரை குருதிக்கொடை இடம்பெறவுள்ளது. (ச)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



மு.வே.யோ.வாஞ்சிநாதன்

# திலீபனுடன்

## பதினோராம் நாள்...





### 25.09.1987

இன்று திலீபனின் உடல் நிலையை எழுத முடியாத வாறு என் கை நடுங்குகிறது. அவரது உடலின் சகல உறுப்புகளும் உணர்ச்சியின்றிக் காணப்பட்டன. கை, கால்கள் சில சமயம் தானாகவே அசைகின்றன. அவர் இன்னும் உயிரோடு இருக்கிறார் என்பதை இதன் மூலம்தான் அறியமுடிகிறது.

'கோமா'வுக்கு முந்திய நிலையில் ஒரு நோயாளி எவ் வளவு கஷ்டப்படுவாரோ அதைப்போல். அவர் உடல் அவரை அறியாமலே அங்குமிங்கும் புரளத் தொடங்கி யது. அவர் படுத்திருந்தது சிறிய கட்டில். ஆகையால், தேவரிடம் சொல்லி, பெரிய கட்டிலொன்று கொண்டு வரச் செய்து, அதில் திலீபனைப் படுக்க வைத்தோம். அப்போதுதான் அவர் கட்டிலில் ஏற்கனவே சிறுநீர் கழித்திருந்ததைக் காணமுடிந்தது. மாறன், நவீனன், தேவர் ஆகியோர் மிகக் கஷ்டப்பட்டு அவரது ஆடைகளை மாற்றி, புத்தாடை அணிவித்தனர். அவர் சுயநினைவோடு இருக்கும் போது புது ஆடைகளை அணியும்படி பலமுறை நான் கேட்டபோது, பிடிவாதமாக மறுத்துவிட்டார்.

“சாகப் போகிறவனுக்கு எதுக்கு வாஞ்சி அண்ணை புது உடுப்பு?” என்று, தனக்கேயுரிய சிரிப்புடன் கேட்டார். அதை இப்போது நினைத்துப் பார்க்கிறேன். பிற்பகல் 4 மணியளவில் திலீபனின் உடல்நிலை மிகவும் மோசமான நிலைக்கு வந்தது. ஆம், அவர் முழுமையான கோமா நிலைக்குச் சென்றுவிட்டார். மைதானத்தில் கூடியிருந்த சனக் கூட்டத்தினர் திலீபனின் நிலைகண்டு மிகவும் வருந்தினர். ஒவ்வொருவர் முகத்திலும் சோகத்திரை படர்ந்திருந்தது.

காலையிலிருந்து இலட்சக்கணக்கான மக்கள் நாட்டின் பல பாகங்களிலும் இருந்து வந்து குவிந்து கொண்டிருந் தனர். லொறிகள், பஸ்கள், வான்கள், கார்கள், ஏன்? மாட்டு வண்டிகளில் கூட அவர்கள் சாரி, சாரியாக வந்து நிறையத் தொடங்கினர். யாழ்ப்பாணத்திலோ அல்லது இலங்கையின் எந்தப் பகுதியிலே இதுவரை எந்த நிகழ்ச் சிக்கும் இப்படி மக்கள் வெள்ளம் போல் நிறைந்ததாகச் சரித்திரமே இல்லை . வட்டுக்கோட்டையில் இருந்து மட்டும் 50 மாட்டு வண்டிகள் புலிக்கொடிகளை ஏந்தியவாறு, மக்களை நிறைத்துக்கொண்டு வரிசையாக வந்து சேர்ந் தன. இன்று பிற்பகல் 1.30 மணியுடன் முல்லைத்தீவில் உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்த திருசெல்வம் என்ற விடுதலைப் புலி உறுப்பினர், 60 மணித்தியாலங் களை வெற்றிகரமாகத் தாண்டிவிட்டார். மட்டுநகரில் மதன் என்ற விடுதலைப்புலி இன்று காலை 10.40 மணிக்கு, சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தைத் திலீபனுக்கு ஆதரவாக ஆரம்பித்திருக்கிறார். அதேபோல் திருகோண மலையிலும் கிருபா என்ற போராளி இன்று மாலை ஆரம் பித்துவிட்டார். திருகோணமலை, முல்லைத்தீவு, மட்டுநகர் ஆகிய மாவட்டங்களில் தான் கடந்த 10 ஆண்டுகளாக, சிறிலங்கா அரசு திட்டமிட்டவாறு சிங்கள மக்களைக் குடி யேற்றி வருகிறது. 1983 ஆம் ஆண்டு கொழும்பு வெலிக் கடைச் சிறைச்சாலையிலே படுகொலை செய்யப்பட்ட தமிழர்களில் தங்கத்துரை, குட்டிமணி போன்றோர் மிக முக்கியமானவர்கள். சிறையிலிருந்த சிங்களக் கைதி களைத் தூண்டிவிட்டு 52 பேர்களைக் கொல்வதற்குத் திட்டம் வகுத்துக்கொடுத்தது வேறு யாருமல்ல ஜே.ஆர் ஜெயவர்த்தனதான். 52 பேர்களைத் திட்டமிட்டபடி கொலை செய்த நூற்றுக்கணக்கான சிங்கள ஆயுள் தண்டனைக் கைதிகளுக்கு என்ன பரிசு அளிப்பதென்று ஜே.ஆர். ஒரு வருடமாக மண்டையைப் போட்டு உடைத் தார். கடைசியில் அனைவரையும் அவர்களின் குடும் பங்களுடன் முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள டொலர் பாம், கென்ற் பாம் ஆகிய இடங்களில் நவீன வீடுகளைக் கட்டிக்கொடுத்து, குடி அமர்த்தினர்.

ஒவ்வொரு குடும்பத்துக்கு 5 ஆயிரம் ரூபா பணமும், 2 ஏக்கர் நிலமும், குடியிருக்க வீடும் வழங்கப்பட்டன. அது மட்டுமா? கொலைகாரர்களின் பிள்ளைகள் படிப்பதற்கு பாடசாலைகளும் ஏற்படுத்தப்பட்டன. இது நடந்த உண்மை. உலக வரலாற்றில் எந்த நாட்டிலா வது இப்படி நடந்ததாகக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? அப்படிப்பட்ட ஜே.ஆர். என்ன சொல்கிறார் தெரியுமா? தான் உண்மையான “காந்தியவாதி” என்று கூறுகிறார். என்ன கேலிக்கூத்து இது! காந்தீயம் அத்தனை மலி வானதா இத்தனை இனத்துவேசியான ஜே.ஆருடன் தமிழர் நலம் காப்பது என்ற பெயரில் ஓர் ஒப்பந்தம் செய்வதென்றால், அது நடைபெறக்கூடிய காரியமா? அல்லது நடக்கத்தான் விடுவாரா அந்தக் குள்ளநரி?

ஒப்பந்தம் சரிவர நடைமுறைப்படுத்த வேண்டும் என் பதற்காகத்தான். அந்த ஒப்பந்தத்தில் கூறப்பட்டுள்ள ஐந்து கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டு திலீபன் சாகும்வரை உண்ணாவிரதப் போராட் டத்தை ஆரம்பித்தார். அவர் “தமிழீத்தைப் பிரித்து தா” என்று கேட்டு உண்ணாவிரதமிருந்தால் அதை எதிர்ப் பதில் நியாயம் உண்டு; இதை ஏன் எதிர்க்கிறார்கள்? புரியவேயில்லை !

நீங்கள் இருவரும் கையெழுத்துப் போட்ட ஒப்பந்தத்தை ஒரு திலீபன் சரிவர நிறைவேற்றும்படி கேட்கிறான். இது நியாயமான கோரிக்கையா இல்லையா?. இதைத் தமிழ் மக்களே முடிவு செய்யட்டும். இன்று (25.09.87) இலங் கைக் கொம்யூனிஸ்ட் கட்சியின் வடபிராந்தியக் குழு “இந்திய இராணுவத்தின் அத்துமீறலைக் கண்டிக்கிறோம்” என்ற தலைப்பில் ஓர் அறிக் கையைப் பத்திரிகைகள் வெளியிட்டிருந்தன. வடக்கும் கிழக்கும் இணைந்த பிரதேச சுயாட்சி யையும், நியாயபூர்வமான சகல உரிமைகளை யும் வழங்க முன்வரவேண்டுமென்று அது தன் அறிக்கையில் சுட்டிக்காட்டியிருந்தது.

இன்று திருகோணமலையில் விறகு ஏற்றிச் சென்ற எட்டு அப்பாவித் தமிழர்கள் சிங்களக் குடியேற்ற வாசிகளால் வெட்டிக் கொல்லப்பட்டனர் என்று பத்திரிகைகளில் செய்தி வெளியாகியிருந்தது. நாளை முதல் யாழ். மாவட்டத்திலுள்ள அனைத்து அரச அலுவலகங்களும், தனியார் நிறுவனங்களும், போக்குவரத்துச் சேவை ஊழியர்களும் திலீபனுக்கு ஆதரவாக உண்ணா விரதமும் மறியலும் செய்து, தமது வேலைகளைப் பகிஷ்கரிக்கப் போகின்றன என்று சகல பத்திரிகைகளிலும் செய்திகள் வெளியாகி இருந்தன.

தமிழீழ விடுதலைப் புலிகள் “நிதர்சனம்” தொலைக்காட் சிச் சேவை கடந்த 10 நாள்களாக தினமும் இரவு 7 மணி முதல் விசேட நிகழ்ச்சிகளை ஒளிபரப்பி வருகின்றது. இரவு திலீபனின் உடல்நிலை மேலும் மோசமடையத் தொடங்கியது. அவர் சுவாசிப்பதற்கு மிகவும் கஷ்டப்பட் டுக் கொண்டிருக்கிறார்.

திலீபன் சுயநினைவுடன் இருந்தபோது அவரால் விரும் பிக் கேட்கப்படும் பாடல் ஒன்றை, இன்றிரவு மேடையில் ஒலிபரப்பினார்கள். அந்தப் பாடல் எனக்கு மட்டுமன்றி, திலீபன் இருந்த அந்த நிலையில் அனைவரினது கண் களில் இருந்தும் கண்ணீரை வரவழைத்துவிட்டது.

**ஓ... மரணித்த வீரனே உன்**
**ஆயுதங்களை எனக்குத் தா...**
**உன்**
**சீருடைகளை எனக்குத் தா...**
**உன்**
**பாதணிகளை எனக்குத் தா!**
**(ஓ... மரணித்த)**

கூட்டத்திலே சில பெண்கள் இந்தப் பாடலைக் கேட்டதும் விம்மி விம்மி அழத் தொடங்கினர். அந்த வேதனை மிக்க இரவு சிறிது சிறிதாக மறைந்து கொண்டிருக்கிறது. இரவே! நீ ஏன் இரக்கமில்லாமல் எமை விட்டு மறைந்து கொண்டிருக்கிறாய்?

“திலீபனின் தியாகம் இந்திய மாயையைக் கலைத்து தமிழீழத் தேசிய உணர்வைத் தட்டியெழுப்பியது. இந் தத் தேசிய எழுச்சியின் வெகுசன வடிவமாக அன்னை பூபதியின் அறப்போர் அமைந்தது.”

## இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** பணவரவு அதிகரிக்கும். குடும்பத் தேவைகளை நிறைவேற்று வீர்கள். நம்பிக்கையுடன் நினைத்த செயலில் முன்னேற்றம் காண்பீர்கள். முயற்சியில் வெற்றி உண்டாகும்.

**இடபம்:** உத்தியோகத்தில் இருந்து வந்த பிரச்சினை நீங்கும். நிம்மதி உண்டாகும். விருந்தினர் வருகையால் குடும்பத்தில் மகிழ்ச்சி ஏற்படும். இலா பம் ஏற்படும். பணவரவு உண்டு.

**மிதுனம்:** முக்கியமான செயல்களில் ஈடுபட்டு வெற்றி பெறுவீர்கள். தாயாரின் உடல்நிலையில் கவனம் தேவை. அலைச்சல் அதிகரிக்கும். எதிர்பார்ப்பு நிறைவேறும்.

**கடகம்:** ஆதாயம் அதிகரிக்கும். வீட்டுக்குரிய நவீன சாதனங்களை வாங்குவீர்கள். லாபம் காண்பீர்கள். எதிர்கால நலன்கருதி திட்டமிடுவீர்கள். உத்தியோகத்தில் நெருக்கடி விலகும்.

**சிம்மம்:** எதிர்பார்த்த செய்தி வீடு தேடி வரும். தொழிலில் வெற்றி உண்டாகும். புதிய செயல்களுக்கு முயற்சிப்பீர்கள். பேச்சில் கவனம் தேவை. எதிர்பாராத லாபம் கிடைக்கும். ஆதரவு உண்டாகும்.

**கன்னி:** குழப்பங்கள் உண்டாகி திட்டமிட்ட செயல் முடியாமல் போகும். ஒருசிலரின் செயல்பாட்டால் மன அழுத்தம் அடைவீர்கள். கவனம் [illegible]

**துலாம்:** திடீர்ச் செலவு ஏற்படும். வாகனப்பயணத்தில் எச்சரிக்கை தேவை. அலைச்சல் அதிகரிக்கும். செலவு செய்து சில வேலைகளை முடிப்பீர்கள். உடல் நிலையில் கவனம் தேவை.

**விருச்சிகம்:** தொழிலில் வெற்றி காண்பீர்கள். பணவரவால் குடும்பத் தில் மகிழ்ச்சி ஏற்படும். உங்கள் திட் டங்கள் நிறைவேறும். உத்தியோ கத்தில் யோகமான நாள். உடல்நிலை சீராகும்.

**தனுசு:** நேற்றைய செயல் ஒன்று இன்று நிறைவேறும். நண்பர்கள் அறி முகமாவார்கள். தொழிலில் திட்டமிட்ட செயல் ஒன்று வெற்றியாகும். பிள்ளை களின் முயற்சிகளுக்கு ஆதரவளிப்பீர்.

**மகரம்:** நேற்றுவரை இருந்த நெருக்கடி யிலிருந்து மீள்வீர்கள். புதிய பாதையில் பயணிப்பீர்கள். எதிர்பார்த்த இடங்க ளில் இருந்து உதவி கிடைக்கும் நாள். தடைப்பட்டிருந்த வேலைகள் முடியும்.

**கும்பம்:** எதிர்பார்க்காத செயலில் பிரச்சினை தலைதூக்கும். அமைதி தேவை. பணியிடத்தில் சங்கடம் தோன்றி மறையும். நட்புவட்டம் பெருகும். விழிப்பு ணர்வுடன் செயற்படுவீர்கள்

**மீனம்:** தொழிலில் இன்று நம்பிக்கையுடன் செயற்பட்டு வெற்றி காண்பீர்கள். வீட்டுக்கான தேவைகளைப் பூர்த்தி செய்வீர்கள். யோகமான நாள். உங்கள் திறமை வெளிப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*விகாரைகளுக்கு மின்கட்டண உயர்வு*

# மகாநாயக்க தேரர்கள் ஜனாதிபதிக்குக் கடிதம்

கொழும்பு, செப். 25

மதவழிபாட்டுத் தலங்களுக்கான புதிய மின்கட்டண திருத்தம் காரணமாக மதவழிபாட்டுத் தலங்கள் எதிர்நோக்கும் சிரமங்கள் குறித்து மகாநாயக்க தேரர்கள் ஜனாதிபதிக்கு கடிதம் ஒன்று அனுப்பிவைத்துள்ளனர். அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

விகாரைகளுக்கான மின்கட்டணங்கள் ஐந்து முதல் ஆறு மடங்காக அதிகரிக்கப்பட்டுள்ளது. சிறப்பு வழிபாடுகள் நடைபெறவுள்ள நிலையில் மத வழிபாட்டுத் தலங்களுக்கு இவ்வாறு அதிக மின் கட்டணம் விதிப்பது முறைகேடான செயலாகும்.

அத்துடன், இதுவரை வழிபாட்டுத் தலங்களுக்கு மானிய விலையில் மின்சாரம் வழங்கப்பட்டு வந்த நடைமுறை இரத்து செய்யப்பட்டுள்ளது. இதனால் சமூகத்தில் பாதகமான விளைவுகள் ஏற்படலாம்.

புத்தசாசனத்தைப் போசித்து பாதுகாப்பதாக அரசமைப்பின் ஊடாக உறுதியளித்துள்ள அரசாங்கம், மதவழிபாட்டுத்தலங்களை நிதி ஈட்டும் தொழிற்சாலைகளாகக் கருதுவது நன்றன்று - என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (ச-இ)

*மாகாண சபைகளுக்கான*

# முழுமையான அதிகாரப்பகிர்வுக்கு நேரடி அழுத்தம் வழங்கவேண்டும்

*இந்தியாவைக் கோருகின்றார் சுரேஷ் பிரேமச்சந்திரன்*

**யாழ்ப்பாணம், செப். 25**

**இந்தியா அண்மையில் ஐ.நா. மனித உரிமைகள் ஆணைய கூட்டத்தொடரில் இலங்கை தொடர்பான தனது கரிசனைகளை வெளியிட்டுள்ளதுடன், 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தவேண்டும் என்றும் தெரிவித்துள்ளது. இதனை வரவேற்றுள்ள ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் க.பிரேமச்சந்திரன் இந்தியா, நின்று விடாமல், இலங்கை அரசுடன் நேரடியாக உரையாடல்களை மேற்கொண்டு 13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என்றும் கோரியுள்ளார்.**

இதுகுறித்து அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் உள்ளதாவது:-

2022ஆம் வருடத்தின் ஆரம்பகாலகட்டத்தில் இலங்கைத் தமிழரசுக் கட்சி, தமிழீழ விடுதலை இயக்கம், ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம், தமிழ் மக்கள் கூட்டணி, தமிழ்த் தேசியக் கட்சி ஆகியவை ஒன்றிணைந்து 13 ஆவது திருத்தத்தை முழுமையாக நிறைவேற்ற இந்தியா உதவவேண்டும் என்று கோரியிருந்தோம். அதனை ஏற்றுக்கொண்டு இந்திய அரசும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையினூடாக மிகத் தெளிவாக சில விடயங்களைக் கூறியுள்ளது.

பொருளாதாரப் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டு முன்னேற்றம் காணப்படவேண்டுமாக இருந்தால் தமிழ்த் தேசிய இனப்பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் என்று இந்திய அரசாங்கம் இலங்கை அரசாங்கத்துக்கு மிகத் தெளிவாக சுட்டிக்காட்டியுள்ளது.

இலங்கை - இந்தியாவின் அண்டை நாடு மற்றும் நட்பு நாடென்ற அடிப்படையில், இலங்கை அரசுக்கு



எதிராக கிளர்ச்சிகள் ஏற்பட்ட சமயங்களிலும் சுனாமி போன்ற பேரிடர் ஏற்பட்ட சமயங்களிலும் இந்திய அரசாங்கம் இலங்கை அரசாங்கத்தைப் பாதுகாத்ததுடன் மிகப்பெரும் உதவிகளையும் செய்துவந்துள்ளது. இன்று பொருளாதார ரீதியாக இலங்கை அரசாங்கம் அதலபாதாளத்தில் வீழ்ந்திருக்கும் சமயத்திலும் ஏறத்தாழ 4 பில்லியன் அமெரிக்க டொலரைக் கொடுத்து இலங்கைக்கு உதவிகரமாக இந்தியா செயற்பட்டு வருகின்றது.

அதேசமயம், இலங்கையில் ஒரு நிரந்தரமான அமைதி, சமாதானம் ஏற்பட வேண்டுமாக இருந்தால், ஈழத் தமிழர் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் என்பதிலும் இந்தியா கரிசனையுடன் செயற்பட்டு வருகின்றது.

எமது தேசிய இன விடுதலைப் போராட்டத்துடன் சம்பந்தமில்லாதவர்களும் போராட்டத்தின் உண்மையானதும் முழுமையானதுமான வரலாறு தெரியாதவர்களும், பிராந்திய உலக அரசியலை சரியாகவும் முழுமையாகவும் புரிந்துகொள்ளாதவர்களும் இந்தியாவை குற்றம் சாட்டுவதும் இந்தியா தமிழ் மக்களுக்கு விரோதமாக நடக்கின்றது என்று பேசுவதும் அர்த்தமற்ற, பொறுப்பற்ற, விஷமத்தனமான குற்றச்சாட்டுகளாகும்.

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட 13ஆம் திருத்தச் சட்டத்தை அது உருவாகியபோது உள்ளடக்கப்பட்டிருந்த விடயங்களை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கு இந்தியா நேரடியாக இலங்கையுடன் பேசி ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று ஈழத் தமிழர்களின் சார்பாக வலியுறுத்துகின்றோம் - என்றுள்ளது. (ம)

**டிசெம்பர் வரை**

# லிட்ரோ சிலிண்டர்களின் விநியோகம் இல்லை!

கொழும்பு, செப். 25

உள்நாட்டுச் சந்தையில் புதிய லிட்ரோ எரிவாயு சிலிண்டர்கள், எதிர்வரும் டிசெம்பர் மாதம் வரை விநியோகிக்கப்படமாட்டாது என்று லிட்ரோ எரிவாயு நிறுவனம் தெரிவித்துள்ளது.

வெளிநாட்டில் வசிக்கும் இலங்கையர்களுக்காக, நாட்டிலுள்ள அவர்களது உறவினர்கள் சார்பாக டொலரை செலுத்தி எரிவாயு சிலிண்டர்களை வழங்கும் வகையில் செயற்றிட்டம் ஒன்றை லிட்ரோ எரிவாயு நிறுவனம் அறிமுகப்படுத்தியுள்ளது.

இதன் காரணமாக புதிதாக சிலிண்டர்களை இடை நிறுத்தப்பட்டுள்ளது என்று லிட்ரோ நிறுவனம் அறிவித்துள்ளது. (ம-14-இ)

# பழைய உலோகங்களை விற்க சர்வதேச விலைமனுக் கோரல்

கொழும்பு, செப். 25

நெருக்கடிக்கு மத்தியில் அந்நியச் செலாவணியை ஈட்டுவதற்காக பழைய இரும்பு தண்டவாளங்களை விற்பனை செய்வதற்கான சர்வதேச விலைமனுக் கோரலை இலங்கை ரயில்வே திணைக்களம் மேற்கொள்ளும் என்று போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

அண்மையில் நாடாளுமன்றத்தில் உரையாற்றிய அமைச்சர் மேலும் தெரிவிக்கையில்;

பழைய தண்டவாளங்கள் மற்றும் பிற உலோகக் கழிவுகள் விற்பனைக் காகச் சேகரிக்கப்படுகின்றன.

இரண்டு வருடங்களாக வட்டி வீதங்களை நசுக்கி பணத்தை அச்சடித்ததன் பின்னர் வரலாற்றில் மிக மோசமான நாணயநெருக்கடியின் பிடியில் இலங்கை சிக்கியுள்ளது.

நாட்டில் ரயில்வே திணைக்களத்திலும் தண்டவாளங்கள் பற்றாக்குறையாக இருந்தது. எனினும், தண்டவாளங்களை இறக்குமதி செய்ய முடியவில்லை. இதற்காக அநுராதபுரத்துக்கு வடக்கே ஒரு பாதையில் இருந்து அகற்றப்பட்ட சில தண்டவாளங்கள் பயன்படுத்தப்படலாம்- என்றார். (ம-14,இ)

# அரச அலுவலர்களது ஆடை: புதிய சுற்றறிக்கை விரைவில்

கொழும்பு, செப். 25

அரசாங்க ஊழியர்களின் ஆடை தொடர்பில் புதிய சுற்றறிக்கை ஒன்றை வெளியிட பொதுநிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு தீர்மானித்துள்ளது. இதுதொடர்பில் அமைச்சின் செயலாளர் பிரியந்த மாயாதுன்ன தெரிவிக்கையில்;

அரச அலுவலர்கள் அலுவலகத்துக்கு வரும்போது பொருத்த மான அலுவலக உடைகளை அணிவது கட்டாயம். இதுதொடர்பான சுற்றறிக்கையைத் தயாரிப்பதற்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

பெண்கள் அலுவலகங்களுக்குச் செல்லும்போது புடைவை, ஒசரி அல்லது அலுவலகத்துக்கு ஏற்ற உடை அணியலாம் என்று ஏற்கனவே சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

எனினும் சிலர் சுற்றறிக்கையின் முதல் பகுதியை மாத்திரம் நடைமுறைப்படுத்துகின்றனர். எனவே, தகுந்த அலுவலக உடையை நடைமுறைப்படுத்தும் வகையில் புதிய சுற்றறிக்கை வெளியிட முடிவு செய்யப்பட்டுள்ளது.

அதன்படி விரைவில் இந்தச் சுற்றறிக்கை வெளியாகும் - என்றார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மின் கட்டண உயர்வுக்கு எதிராக விரைவில் போர்!

*எதிர்க்கட்சித் தலைவர் தெரிவிப்பு*

கொழும்பு, செப். 25

பல வருடங்களாக இடம்பெற்ற ஊழல் மோசடிகளின் விளைவுதான் தற்போதைய மின்கட்டண உயர்வு என்று தெரிவித்துள்ள எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, இந்த மின்கட்டண உயர்வுக்கு எதிராக விரைவில் போராட்டம் முன்னெடுக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் இடம்பெற்றுவரும் பொருளாதார மறுசீரமைப்பு வேலைத்திட்டத்தால் சங்கடமானதும் அசௌகரியமானதுமான சூழ்நிலையை எதிர்கொள்ள வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு மக்களும் பிக்குகளும் தள்ளப்பட்டுள்ளனர். பல வருடங்களாக இடம்பெற்ற ஊழல் மோசடியின் விளைவாகத் தற்போது அதிகரிக்கப்பட்டிருக்கும் மின்கட்டண உயர்வை எதிர்க்கட்சியாக ஐக்கிய மக்கள் சக்தி தொடர்ந்து எதிர்க்கின்றது. இந்த அரசாங்கம் சமூகப் பாதுகாப்பு திட்டமொன்றையேனும் கூட முறையாக செயற்படுத்துவதாக இல்லை. இதற்கெதிராக ஐக்கிய மக்கள் சக்தி தனது முழுமையான எதிர்ப்பு நடவடிக்கைகளை நாடாளுமன்றத்திலும் நாடாளுமன்றத்துக்கு வெளியிலும் முழுமூச்சுடன் மேற்கொள்ளும் - என்றார். (ம)

# பொருளாதார நெருக்கடியால் கல்வியை இழக்கும் சிறார்கள்

## இலங்கை முன்பள்ளி ஆசிரியர் சங்கம் தெரிவிப்பு

**கொழும்பு, செப். 25**

**தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடியில் முன்பள்ளிக் கட்டணத்தைச் செலுத்த முடியாத காரணத்தால் முன்பள்ளிகளுக்குச் செல்லும் குழந்தைகளின் எண்ணிக்கை கணிசமான அளவு குறைவடைந்துள்ளது என்று இலங்கை முன்பள்ளி ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.**

இது தொடர்பில் இலங்கை முன் பள்ளி ஆசிரியர் சங்கத் தலைவர் அசங்க ஸ்ரீநாத் தெரிவித்ததாவது:-

பல பெற்றோர் தங்கள் வருமான ஆதாரங்களை இழந்துள்ளதால், சிறுவர்களின் முன்பள்ளிக் கல்விக் கட்டணத்தைச் செலுத்துவதில் சிரமப்படுகின்றனர். நகர்ப்புறங்களை விட கிராமப்புறங்களில் இந்த நிலைமை அதிகமாகக் காணப்படுகின்றது.

கட்டணத்தைச் செலுத்தாத மாணவர்களிடம் முன்பள்ளி ஆசிரியர்கள் உரிய கட்டணத்தைக் கோரவில்லை என்றாலும், ஆசிரியர்களை எதிர்கொள்ளத் தயங்கி மாணவர்கள் முன்பள்ளிக்குச் செல்வதில்லை எனச் செய்திகள் வந்துள்ளன. இந்த நிலை தொடரும் பட்சத்தில் கல்வித்துறையில் சிக்கல் நிலை உருவாகும் - என்றார்.

(எ-14,இ)

# டலஸ் அணியை விரைவில் கட்சியிலிருந்து தூக்குவோம்

## விமலவீர திஸாநாயக்க தெரிவிப்பு

கொழும்பு, செப். 25

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியிலிருந்து விரைவில் டலஸ் அழகப்பெரும தலைமையிலான அணி விரட்டப்படும் என மொட்டுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் விமலவீர திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

மொட்டுக் கட்சியின் ஊடக சந்திப்பு கடந்த வியாழக்கிழமை கட்சித் தலைமையகத்தில் நடைபெற்றபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

டலஸ் அழகப்பெரும தலைமையிலான அணி எமக்கு சவால் விடுத்துள்ளது. ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தவிசாளர் பதவியில் இருந்தும், உறுப்புரிமையில் இருந்தும் முடிந்தால் தன்னை நீக்கிக்காட்டுமாறு பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் சவால் விடுத்துள்ளார்.

உடனடியாக நாம் பதவிநீக்கமாட்டோம். சுதந்திரக்கட்சியில் இருந்துகொண்டே மைத்திரியை விமர்சித்தோம். அவர் அவசரப்படவில்லை.

எனினும், அடுத்த கட்சி சம்மேளனத்தின்போது புதிய தவிசாளர் நியமிக்கப்படுவார், அந்தப்பதவியில் இருந்து பீரிஸ் நீக்கப்படுவார்- என்றார். (ச-44)



# சக்கோட்டைக் கடற்கரையில் ஒதுங்கிய கேரளகஞ்சா மீட்பு

யாழ்ப்பாணம், செப்.25

பருத்தித்துறை - சக்கோட்டை கடற்கரைப்பகுதியில் கரையொதுங்கிய 42 கிலோகிராம் கேரளக்ஞ்சா பொதிகள் மீட்கப்பட்டுள்ளன.

இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் இந்தக் கஞ்சா பொதிகள் மீட்கப்பட்டுள்ளன.

கேரளக்கஞ்சா கடத்தல் தொடர்பில் கிடைத்த தகவலையடுத்து நேற்றுமுன்தினம் அதிகாலை அங்கு சென்ற இராணுவத்தினர் கரையொதுங்கியிருந்த கஞ்சாப் பொதிகளை மீட்டுள்ளனர்.

மீட்கப்பட்ட கஞ்சா மதுவரித் திணைக்களத்தினரிடம் கையளிக்கப்பட்டுள்ளது என்றும் அவற்றை மதுவரித் திணைக்களத்தினர் பருத்தித்துறை நீதிமன்றில் ஒப்படைக்க நடவடிக்கை எடுத்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (எ-26-27)

# உறுப்பினர்களை அகற்றினால் சு.கவின் எதிர்காலமே அழியும்

## மஹிந்த அமரவீர எச்சரிக்கை

கொழும்பு, செப். 25

மக்கள் ஆசியுடன் நாடாளுமன்றம் தெரிவான சிரேஷ்ட உறுப்பினர்களை விரட்டினால், எதிர்காலத்தில் சிறிலங்கா சுதந்திரக்கட்சி காணாமல் போய்விடும் என்று எச்சரித்துள்ளார் அமைச்சர் மஹிந்த அமரவீர.

கட்சியின் தீர்மானத்தை மீறி இராஜாங்க மற்றும் அமைச்சுப் பதவிகளை பெற்றுக்கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர்களை கட்சியில் வகித்த அனைத்துப் பதவிகளில் இருந்து சிறிலங்கா சுதந்திரக்கட்சி நீக்கியது. இது தொடர்பில் வினவியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

கட்சியின் முடிவு தொடர்பில் எமக்கு இன்னும் அறிவிக்கப்படவில்லை. நான் இன்னமும் சுதந்திரக்கட்சியில் தான் இருக்கின்றேன். வேறு எங்கும் செல்லும் எண்ணம் இல்லை. சர்வகட்சி அரசாங்கம் என்ற யோசனையை சுதந்திரக்கட்சியே முன்வைத்தது. எனவே, நாட்டின் நலன்கருதியே நாம் அமைச்சரானோம்.

மக்கள் வாக்குகளைப் பெற்று நாடாளுமன்றம் தெரிவான உறுப்பினர்களை நீக்கினால், சுதந்திரக் கட்சிக்கு எதிர்காலம் இருக்காது - என்றார். (எ-14,44)

# மத ஸ்தலங்களின் மின்பாவனை: அரசாங்கம் தலையிடவேண்டும்

## பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு தலைவர் தெரிவிப்பு

கொழும்பு, செப். 25

மத ஸ்தலங்களின் மின்பாவனை விடயத்தில் அரசாங்கம் தலையிடவேண்டும் என்று பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவின் தலைவர் ஜானக ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

கொழும்பிலுள்ள ஒரு விகாரையில் ஒரு மாதத்தில் 8 ஆயிரத்து 500 யுனிட் மின்சாரம் பயன்படுத்தப்பட்டதால் ஐந்தரை லட்சம் ரூபா மின்கட்டணம் வந்துள்ளது.

கடந்த மாதம் குறித்த விகாரையின் மின்கட்டணம் 80 ஆயிரம் ரூபா எனத் தெரிவிக்கப்பட்டது. இவ்வாறு அதிகளவு நுகர்வு உள்ள இடங்களுக்கு 5 லட்சத்துக்கு மேல் மின்கட்டணம் பெறுவதைத் தடுக்க முடியாது. விகாரைகளுக்கு மானியம் வழங்குவது அரசாங்கத்தின் விவகாரமாகும்.

முழு நாட்டிலும் உள்ள 48 ஆயிரத்து 500 மத வழிபாட்டுத்தலங்களில் 75 வீதமானவை 180 யுனிட்டுக்கும் குறைவான மின்சார பாவனையைக் கொண்டுள்ளது. எஞ்சிய 25 வீதமான மத ஸ்தலங்களுக்கே மின்கட்டண அதிகரிப்பு பிரச்சினையாக மாறியுள்ளது. எனவே இந்த விடயத்தில் அரசாங்கம் தலையிட வேண்டும் - என்றார். (எ-14,இ)

# சாரணர் சங்கத்தினரால் தேசிய கபோறி பாசறை

யாழ்ப்பாணம், செப். 25

இலங்கை சாரணர் சங்கத்தால் ஒழுங்கமைக்கப்பட்ட 13ஆவது 'தேசிய கபோறி' பாசறை கடந்த 16ஆம் திகதி தொடக்கம் 18ஆம் திகதிவரை யாழ்.மாவட்டத்தில் நடைபெற்றது.

இந்தப் பாசறையில் யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை, புனித பரியோவான் கல்லூரி, யாழ்.கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை, யாழ்.மத்திய கல்லூரி, புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம் ஆகியவற்றிலிருந்து 500 க்கும் மேற்பட்ட குருளைச் சாரணர்கள் பங்குபற்றினர். (ச)

# தமிழகத்துக்கு செல்ல முயன்ற 12 பேர் மன்னாரில் கைது

சட்டவிரோதமான முறையில் படகு மூலம் தமிழகம் செல்ல முயன்ற 12பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று கடற்படையினர் தெரிவித்தனர்,

மன்னார், கீரி கடற்படையினரால் இவர்கள் ஓலைத்தொடுவாய் பகுதியில் வைத்துக் கைது செய்யப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. கைது செய்யப்பட்டவர்கள் மன்னார், விடத்தல்தீவைச் சேர்ந்தவர்களாவர். கைது செய்யப்பட்டவர்கள் மன்னார் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர் என்று கடற்படையினர் தெரிவித்தனர். (எ-243)

# கோணேஸ்வரம் சென்று ஆராயவுள்ளாராம் விதுர

திருகோணமலை, செப். 25

திருக்கோணேஸ்வரம் ஆலயம் தொடர்பான பிரச்சினைகளை நேரில் ஆராய அங்கு விரைவில் தனிப்பட்ட பயணம் மேற்கொள்ளவுள்ளார் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க.

நாடாளுமன்றத்தில் கடந்த வியாழக்கிழமை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரனால் முன்வைக்கப்பட்ட திருக்கோணேஸ்வர ஆலய ஆக்கிரமிப்பு தொடர்பான சபை ஒத்திவைப்புவேளை பிரேரணைக்குப் பதிலளித்து உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்; வரலாறுகள் தொடர்பில் நான் பேச விரும்பவில்லை. அகழ்வாராய்ச்சிகளில் பௌத்த, இந்து புராதன அடையாளங்கள் மீட்கப்பட்டுள்ளன. வரலாற்றை நீங்கள் திரிபுபடுத்தக்கூடாது.

தொல்லியல் சட்டங்கள் மாற்றப்படும் வரை அதைக் கடைப்பிடிப்பதே எமக்குள்ள தெரிவு. திருக்கோணேஸ்வர ஆலயம் தொடர்பான பிரச்சினைகளை நேரில் ஆராய அங்கு விரைவில் தனிப்பட்ட பயணம் மேற்கொண்டு ஆலய நிர்வாகத்தினருடன் கலந்துரையாடவுள்ளேன் - என்றார்.



(எ-14-22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொக்குவில் கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் புதுக்கோவில்

## நிர்வாக சபை தெரிவுக்கான விசேட பொதுக் கூட்டம்.

சங்க சட்டத்தின் பிரகாரம் பதிவு இல. S.149 / 30.11.1962 இணைப்புப் பதிவு இல. 2253/ 06.11.2013 பரிபாலன சபைப் பிரமாணங்கள் 3ஆம் பக்கம் 8ஆம் பந்தியில் கூறப்பட்டதற்கு அமைவாக கிருபாகர கந்தனின் அருள் கொண்டு 08.10.2022 சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நிர்வாக சபை தெரிவுக்கான விசேட பொதுக்கூட்டம் ஆலய மண்டபத்தில் நடைபெறும் என்பதனை பொதுச் சபை உறுப்பினர்களுக்கு அறியத்தருகிறேன்.

செயலாளர்
ந. ஸ்ரீறஞ்சன்

(CS 20958) (3/6)



ஏராளமான அனுகூலங்களுடன்
வாழ்க்கையை வெற்றி கொள்வதற்கு எம்முடன் இணையுங்கள்

பல தசாப்த கால அனுபவத்துடன், சர்வதேச மற்றும் தேசிய மட்டத்தில் வியாபார குழுமமாக திகழ்வதுடன், பல விருதுகளை சுவீகரித்துள்ள, சிறந்த வியாபார வலையமைப்பில் ஜொலித்திடும் நட்சத்திரமாகத் திகழ்வதற்கு உங்களுக்கான அழைப்பு!

- வரையறைகளற்ற வருமானம்
- சுதந்தரமாக பணியாற்றுவதற்கு பொருத்தமான சூழல்
- பதவியில் உயர்ந்த நிலைக்கு செல்லக்கூடிய தொழில் வழிகாட்டல்
- வெளிநாட்டு சுற்றுப் பணயங்கள்

LOLC LIFE ASSURANCE
(CS 20952) (3/6)
077 560 2579
பலாலி வீதி, கோண்டாவில்

## UK / CANADA குடி பெயர்வதற்கான வாய்ப்பு!!!

குடும்பத்துடன் UK / Canadaவில் குடிபெயர்வதற்கான விசா

நீங்கள் 30 வயதிற்கு மேற்பட்ட திருமணமானவராயின், உங்களுக்கு உங்களது குடும்பத்தினருடன் ஐக்கிய இராச்சியத்திற்கு மற்றும் கனடாவிற்கு சட்டபூர்வமாக சென்று குடிபெயர்வதற்கான ஓர் வாய்ப்பு!!!

**நீங்கள் J B P VISA SOLUTION ஐ தெரிவு செய்வது ஏன்?**

- 100% சரியான தகவல்களை வழங்குதல் மற்றும் சரியான வழிகாட்டுதல்
- எந்தவொரு தரகரும் இன்றி, 15 வருடங்கள் ஐரோப்பாவில் தங்கியுள்ள இலங்கை Consultant உடன் நேரடியாக தொடர்பு கொள்ள கூடிய வாய்ப்பு
- குறைந்த பட்ச சேவை கட்டணத்தில் ஆரம்பித்து மிகுதி பணத்தை தங்களது தேவை பூர்த்தியானதன் பின் செலுத்தக்கூடிய வாய்ப்பு
- ஐரோப்பிய ஒன்றியத்தின் எந்நவொரு நாட்டிலும், அல்லது இங்கிலாந்து மற்றும் கனடாவில் ஏற்படும் எவ்வித பிரச்சனைகளுக்கும் தீர்வு பெற்று கொடுப்பது தொடர்பில் Solicitorsகளின் ஒத்துழைப்பு.

தொடர்புகளுக்கு: 0772 281 085
E-Mail அனுப்புதல் : info@thevisasolution.com
J B P VISA SOLUTIONS (PVT) LTD
(Registered as a limited liability company in Sri Lanka PV 00203433)
www.thevisasolution.com

## நாகபூஷணி திருமண சேவை

நீங்கள் விரும்பும் அரச உயர்தொழில், தனியார்துறை, உள்நாட்டு, வெளிநாட்டு அனைத்து மணமக்கள் ஏராளமாக உள்ளனர்.
நீங்கள் விரும்பும் மணமக்கள் ஜாதகங்கள் மிகப் பொருத்தமாக உடன் தரப்படும்.

264, ஆடியபாதம் வீதி, கொக்குவில் கிழக்கு.
(யா/ கொக்குவில் இந்துக் கல்லூரிக்கு அண்மையில்)
021 222 9306, 077 138 7596, 071 999 9306

## மணமகள் தேவை

வெளிநாட்டில் வசிக்கும் டாக்டர் (MBBS) மணமகனுக்கு அழகிய நற்குணமுள்ள படித்த பட்டதாரி மணமகள் தேவை. படம் போட்டோ சாதகம் டிகிரி முடித்த சான்றிதழ் அனுப்பி வைக்கவும் (CS 20936) (3/6)

தொடர்பு கொள்ளவும் மணமகனின் தாய்
Emaildino.Fisk@hotmail.com
Whatup Veiber: 004560675291

## காணி விற்பனைக்குண்டு

புன்னாலைக்கட்டுவனில் இருந்து சுன்னாகம் செல்லும் வீதியில் 2 ஆம் காணியும் (5 1/2 பரப்பு) புன்னாலைக்கட்டுவன் ஆயக்கடவை பிள்ளையார் கோவிலுக்கு அண்மித்த பகுதியில் 21 பரப்புக் காணியும் விற்பனைக்குண்டு.

(cs 20950) (2.6) 074 348 8086



## கங்குமட்டைகள் தேவை

ரவி இன்டஸ்ரியல் லிமிட்டட் புலோப்பளை கிழக்கு, பளை எனும் முகவரியில் இயங்கும் நிறுவனத்திற்கு கங்கு மட்டைகள் தேவை விலைக்கு வாங்கப்படும் தொடர்புகளுக்கு

076 105 8754 (cs 20907) (2.6)

### மின்சாரம் துண்டித்து விட்டதா? மின்சார கட்டணங்களும் பில் ஏறிவிட்டதா?

இதோ இதற்கான தீர்வை நாங்கள் பெற்றுத் தருகிறோம்

சகல விதமான மின்சாரப் பொருள்கள் பாவிக்க கூடியவாறு SOLAR INVERTER மிகவும் மலிவான விலையில் பொருத்தி தரப்படும். மின்சார கட்டணமும் சேமிக்கப்படும் மற்றும் CCTV கேமராக்கள் பொருத்தி தரப்படும்

J.J GROUP
No. 603, K.K.S, Road, Jaffna
021 222 8854
077 555 5100
(CS 20204)(3/6)

## உடல் எடை குறைய வேண்டுமா?

◎ எடை கூடுகிறதா?
◎ வயிறு, மார்பு குறைய வேண்டுமா?
◎ உடல் எடை குறைகிறதேயில்லை என்கின்ற கவலையா?

**பால்மா குளிசை** - வயிறு, மார்பு குறைக்கும் கிறீம் 15 நாள்களில் அற்புத மாற்றத்தை உணர்வீர்கள்.

### தலைமுடி நீளமாக வளர வேண்டுமா?

தலைமுடி வளரவேண்டுமா? பேன், பொடுகு தொல்லையா?
➤முடிகொட்டுகிறதா? ➤இளநரையா? ➤தலையிடியா? முடி அடர்த்தி இல்லையா?➤புதிதாக முடி முளைக்க வேண்டுமா?
➤பொன்னாங்காணி? கரிசலாங்காணி, இலாமிச்சை வேர், கருவேப்பிலை, வல்லாரை, நெல்லி சேர்த்துக்காய்ச்சிய எண்ணெய் குளிசை
இந்த எண்ணையைப்பாவித்து பயனடைய

CS 38443

### உடல் எடை இலகுவாக கூட வேண்டுமா

எடை கூட வேண்டுமா?, கணச்சூடா?, பலகீனமா?, ஒட்டிய கன்னங்கள் குண்டுக்கன்னங்களாக மாற வேண்டுமா?, மார்பு கூட வேண்டுமா?, உடல் குறைபாடுகளா?

**குளிசை, பால்மா என்பன விற்பனைக்குண்டு**

கருமை நிறம் நீங்க வேண்டுமா?

077 210 6155 221, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.

## இடமாற்ற அறிவித்தல்

இலக்கம் 110, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணத்தில் இயங்கி வந்த வடமாகாணத்தின் முதன்மை நீர் சுத்திகரிப்பு இயந்திர இறக்குமதி, மற்றும் விற்பனையாளர்களான VENUS LANKA HI TEL (PVT) LTD (வீனஸ் என்ர பிறைசஸ்) நிறுவனம் தற்போது இலக்கம் 170, பொற்பதி வீதி கோண்டாவில் எனும் முகவரியில் இயங்கி வருகிறது என்பதனை வாடிக்கையாளர்கள் கொள்வனவாளர்கள் அனைவருக்கும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**VENUS LANKA HI TEL (PVT) LTD.**
வீனஸ் என்ரபிறைசஸ்
இலக்கம் 170, பொற்பதி வீதி,
கோண்டாவில்
021 221 7744, 076 759 6668

(CS 20946)(9/6)

## புரட்டாதிச் சனி விரத வழிபாடுகள்

யாழ்ப்பாணம், செப். 25

இணுவில் தெற்கு, ஞானாம்பிகை உடனாய ஞானலிங்கேச்சுரர் திருக்கோயிலில் புரட்டாதிச் சனி விரத வழிபாடுகள் நேற்று தொடக்கம் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 15 ஆம் திகதி சனிக்கிழமை வரை இடம்பெறவுள்ளன.

அதற்கமைய ஒவ்வொரு புரட்டாதிச் சனிக்கிழமைகளிலும் காலை 6.45 மணிக்கு வழிபாடு ஆரம்பமாகி தொடர்ந்து விசேட திருமஞ்சனம், அபிஷேக சமர்ப்பணங்கள் இடம்பெற்று 8 மணிக்கு வசந்த மண்டப வழிபாட்டைத் தொடர்ந்து சனீஸ்வரப் பெருமான் திருவீதியுலா வருவார் என ஆலய வைசநெறிக்கூடம் அறிவித்துள்ளது. (ஓ-14)

## பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், செப். 25

யாழ்ப்பாணம் நடேஸ்வராக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு கல்லூரியின் பிரதான மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. இதன்போது புதிய நிர்வாகத் தெரிவும் மேலும் பல விடயங்களும் கலந்துரையாடப்படவுள்ளன.

எனவே கல்லூரியின் அனைத்துப் பழைய மாணவர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு கல்லூரி அதிபர் கேட்டுக்கொண்டுள்ளார். (ஓ-14)

## விற்பனையாளர் தேவை

பான்சிக் கடைக்கு விற்பனையாளர் தேவை.

077 041 1742

## நாய்க்குட்டி விற்பனைக்கு

55 நாள்கள் நிரம்பிய அழகிய German Shepherd (Policedog) நாய்க் குட்டிகள் விற்பனைக்குண்டு.

(cs 20949) (2.6) 077 869 5005

## வாடகைக்கு

யாழ். உரும்பிராய் மானிப்பாய் வீதியில் 1100 சதுர அடிகளை உடைய புத்தம் புதிய கட்டடம் வாடகைக்கு உண்டு. கடைக் களாகவோ, களஞ்சியசாலையாகவோ உபயோகிக்க முடியும். வாகன தரிப்பிட வசதி உண்டு. (ACO 19775) (3/6)

தொடர்பு: 077 886 1855

## வீடு வாடகைக்கு

மருதனார்மடம் சந்திக்கு அருகாமையில் (ஏறக்குறைய 500 யார் தூரத்தில்) உடுவில் வீதியில் 4 பரப்புடன் கூடிய மேல்மாடி வீடு வாடகைக்கு விடப்படும் மேல் மாடியில் 4 அறைகள், விறாந்தை, Hall, சமையல் அறை என்பனவும், கீழ் கட்டடத்தில் 3 அறைகள் Hall, விறாந்தை சமையல் அறை என்பனவும் மற்றும் வாகனத்தரிப்பிடமும் காணப்படுகின்றது. 4 அட்டாச் பாத்ரூம், வெளி பாத்ரூம், மேல் மாடிக்கும் தனியான பாதையுண்டு வங்கிகள் தனியார் நிறுவனங்கள் அரச திணைக்களங்கள் தொடர்பு கொள்ளவும்.

வை. மிராளன்
077 244 4162 (CS 20954) (3/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துப்புரவுப் பணியாளர்கள் தேவை

யாழ்ப்பாணம் மற்றும் மானிப்பாய் பகுதிகளில் இயங்கும் சர்வதேசப் பாடசாலைக்கு துப்புரவுப் பணியாளர்கள் தேவை. வயதெல்லை: ஆண்கள் 55. பெண்கள் - 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

**077 844 8020**

(cs.20910) (2.6)

## வாடகைக்கு

நெடுங்குளம் றோட் அருளம்பலம் லேன், அரியாலையில் 3 Bedroom, Hall, kitchen, 2bathroom, 2 balcany உடனான மாடி வீட்டின் மேல் தளம் வாடகைக்கு உண்டு. (CS 20898) (3/6)

**074 216 8717, 074 223 6815**

## வேலை வாய்ப்பு

நாரஹேன்பிட்டியவிலுள்ள ரெஸ்ரோண்ட் இற்கு யாழ்ப்பாண பாரம் பரிய உணவுகள் சமைக்கத் தெரிந்த சமையற்காரர்கள் தேவை.

**077 773 1371** (ACO 19774) (3/6)

## கட்டடம் வாடகைக்கு

சாவகச்சேரி நகரில் A9- வீதியில் பிரதேச செயலகத்திற்கு முன்பாக 2500 சதுர அடி கொண்ட 3 மாடி கட்டடம் வாடகைக்கு உண்டு. (வங்கி. நிறுவனங்கள். காரியாலயங்கள். தனியார் மருத்துவ நிலையங்கள் நடத்துவதற்கு உகந்தது.

**மேலதிக விபரங்களுக்கு:**

**0044 754 383 7830**

(cs.20878) (2.6)

## East Europe இல் கல்வி தொழில் புரிய அரிய வாய்ப்பு

குறைந்த செலவில் அடிப்படைக் கல்வி தகைமைகளுடன் அசர்பைசான் (Azerbaijan) நாட்டில் வேலைவாய்ப்பு மற்றும் மொழி சம்மந்தமான (Language Courses) கற்கை நெறிகள் உண்டு. மேலதிக விபரங்களுக்கு

**European Academic Centre**
வத்தளை, கொழும்பு .
ராஜ் :076 710 7864 (CR 338139) (3/6)

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம்-பலாலி பிரதான வீதியில் ஊரெழு அம்மன் ஆலயத்திற்கு அண்மையில் இருந்து பொக்கனை வீதியில் சுமார் 400 மீற்றர் தூரத்தில் 30 பரப்பு காணி விற்பனைக்குள்ளது. (10X3) 10 பரப்பாக பிரித்தும் கொடுக்கப்படும். முன் பக்கமதிலுடன் சுற்றுவேலி பாதுகாப்புடன் உள்ளதும் 60 காய்க்கும் தென்னை உட்பட பல பயன்தரும் மரங்களுடன் தற்பொழுது தோட்ட செய்கையில் உள்ளது. தரகர் தேவையில்லை. விலை நேரில் பேசித் தீர்மானிக்கலாம்.

தொடர்புகளுக்கு: **074 367 9206, 074 330 9895**

## TP Hunt ஞாபகார்த்த ஓவியக் கூடம்

**தென்மராட்சி சாவகச்சேரியில் மிளிர்ந்துள்ள T.P Hunt ஞாபகார்த்த ஓவியக் கூடமானது கடந்த 5 வருடமாக திருமதி யோகமணி அழகரத்தினம் அவர்களின் தன்னலமற்ற சேவை மனப்பாண்மையுடன் ஓவியக்கலையை வளர்த்து வருகிறது**

- இங்கு +4 வயது - தரம் 13 வகுப்பு மாணவர்வரை ஓவிய ஊடக உபகரணங்கள் வழங்கி வகுப்புகள் நடத்தப்படுகிறது.
- அத்துடன் ஓவிய உபகரணங்கள் தரமானதும் மலிவு விலையிலும் விற்பனை செய்யப்படுகிறது.
- எமது கண்காட்சி கூடம் தினமும் காலை 8.00 மணியிலிருந்து பார்வைக்கு விடப்படும். (மாணவர்களின் ஓவியத்திறனை வெளிக்கொணரப்படுகிறது)
- சித்திரக் கற்கை நெறிகளும் நடத்தப்படுகிறது.
- இக் கலை ஆர்வத்தினை வளர்க்க ஆர்வமுள்ளவர்கள் TP Hunt ஓவியக் கூடத்துடன் இணைந்து பயன்பெறுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தொடர்புகளுக்கு:
முகவரி: **T.P Hunt Art Gallery**
**27, ஆலய வீதி, சாவகச்சேரி**
தொலை பேசி: **074 313 6077**
மின்னஞ்சல் : huntartgallery18@gmail.com

(cs.38052) (2.6)

## மூளாய் கூட்டுறவு வைத்தியசாலைச் சங்கம் (வ-து) மூளாய்

## பதவி வெற்றிடங்கள்

01. வைத்திய உத்தியோகத்தர் (Medical Officer)
02. தாதிய பரிபாலகர் (Matron) ஆண் / பெண் இருபாலாரும்
03. தாதிய உத்தியோகத்தர் (Nursing Officer) ஆண் / பெண் இருபாலாரும்
04. தாதிய உதவியாளர் (Nursing Assistant) ஆண் / பெண் இருபாலாரும்
05. தாதிய பயிற்சியாளர் (Nursing Trainee) ஆண் / பெண் இருபாலாரும்
06. மருந்தாளர் (Pharmacist) ஆண் / பெண் இருபாலாரும்
07. மருந்தக உதவியாளர் (Pharmacist Assistant) ஆண் / பெண் இருபாலாரும்
08. சுகாதார உதவியாளர் / பரிசாரகர் (Healts Assistant / Attendant) ஆண் / பெண் இருபாலாரும்
09. முதியோர் பராமரிப்பாளர் (Bystander) ஆண் / பெண் இருபாலாரும்
10. பாதுகாப்பு உத்தியோகத்தர் (Security Guard)

குறித்த பதவிக்கு பொருத்தமான தகைமையுடையோர் விண்ணப்பிக்க முடியும். ஓய்வு நிலையில் உள்ளோரும் விண்ணப்பிக்கலாம். தகைமை மற்றும் அனுபவம் என்பவற்றை கருத்திற் கொண்டு சம்பளம் தீர்மானிக்கப்படும்.

**விண்ணப்ப முடிவுதிகதி : 05.10.2022**

விண்ணப்பங்களை பதிவுத்தபால் மூலமாகவோ. நேரடியாகவோ அல்லது மின்னஞ்சல் மூலமாகவோ (E-mail) அனுப்பிவைக்கவும். நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டு தெரிவு இடம்பெறும்.

**தலைவர்,**
**கூட்டுறவு வைத்தியசாலை சங்கம் (வ-து)**
**மூளாய், சுழிபுரம்,**
E -mail: - moolaii@yahoo.com

தொடர்புகளுக்கு: **021 225 0441**




MICRO PC SYSTEMS

## சோலர் மட்டுமே நிரந்தர தீர்வு!

**1kW - 395,000**
**1.32kW - 495,000**

- 10 வருடம், 25 வருட உத்தரவாதம்
- மின்சார சபையுடன் 20 வருட ஒப்பந்தம்

150 Units - 1 kW
180 - 200 Units - 1.32 kW
240 Units - 2 kW
350 Units - 3 kW
480 Units - 4 kW
600 Units - 5 kW

solis FOX MIPAQ JA SOLAR ENVERTECH



முதல் 30, 60 அலகுகளை மின்சார சபையில் பாவிப்பதன் மூலம் சிறந்த முதலீட்டிற்கான வருமானத்தை (ROI < 5Years ) பெறமுடியும்

218, Hospital Road, Jaffna.
021 222 5893, 077 396 3280, 077 742 5973, 077 396 3284
Head Office : 115C, W.A. Silva Mw, Colombo - 06. 011 401 3235
www.solarpowerlk.com MicroPcSystemsPvtLtd
Colombo : 077 301 3043 / 071 396 3281 / 070 664 5125
Batticaloa : 071 035 6072 / 071 035 6069
Vavuniya : 077 396 3278 / 077 776 3373
Kilinochchi : 077 742 5973 / 077 396 3280

## சேவை நலன் பாராட்டு

யா/ நாவாந்துறை றோமன் கத்தோலிக்க வித்தியாலயத்தில் சேவையாற்றி ஓய்வுபெறும் எங்கள் ஆசிரியை

### திருமதி திரிபுராம்பாள் ருத்திரலிங்கம்
### (வர்த்தகம் SLTS - I)




**சேவை விபரம்**

**ஆசிரிய பணியில் - 1990.03.20 - 2022.09.25**

- யா / நயினாதீவு ஸ்ரீ கணேச கனிஷ்ட மகாவித்தியாலயம் - 1990.03.20 - 1997.02.04
- பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை - 1997.02.05 - 1998.12.31
- யா / நயினாதீவு ஸ்ரீ கணேசகனிஷ்ட மகா வித்தியாலயம் - 1999.01.01 - 2010.02.14
- யா / நாவாந்துறை றோ.க.வித்தியாலயம் - 2010.02.15 - 2022.09.25

**தனது 60 ஆவது வயதில் ஆசிரிய பணியிலிருந்து ஓய்வுபெறுகின்ற ஆசிரியையின் அர்ப்பணிப்பான** சேவையைப் பாராட்டுவதுடன் ஓய்வுக்காலம் மேலும் சிறப்புற மனமுவந்து வாழ்த்துகின்றோம்.


வாழ்த்துவோர்:
**ஆசிரியர் நலன்புரிச் சங்கம்**
**யா/ நாவாந்துறை றோமன் கத்தோலிக்க வித்தியாலயம்.**

(cs.46682) (2.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் ஆண்டு விழிநீர் அஞ்சலி

மண்ணக வாழ்வில் 25 . 02 . 1981



விண்ணக வாழ்வில் 06 . 10 . 2021

யாழ்ப்பாணம் தொல்புரம் மேற்கைப் பிறப்பிடமாகவும்
மன்னார் நானாட்டானை வசிப்பிடமாகவும் கொண்ட

## அமரர் வைத்தியக் கலாநிதி
## சக்திவடிவேல் சக்திபாலன்

**(மாவட்ட இணைப்பாளர் உளநலம் (Mental Health) மற்றும் தொற்றா நோயியல் (NCD) பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, மன்னார்)**

ஆண்டொன்று சென்றாலும்
ஆறாது உன் நினைவு என்றும்
பார் போற்றும் உத்தமராய் வாழ்ந்து - எம்மை
பரிதவிக்க விட்டுச் சென்ற மாயந்தான் என்னே!
ஊர் போற்ற நீ செய்த கொடைகள் - என்றும்
சீர் போற்றி நிற்கின்றது உலகில்
உன்னை போன்று எவருமில்லை எமக்கு
உன் அன்பு பாசத்திற்கு நிகரில்லை இங்கு
பார்க்கும் இடமெங்கும் உன் முகமே
எந்நாளும் உயிர் வாழும்
மண்விட்டு மறைந்து சென்றாலும்
கண்விட்டு மறையாமல் காலத்தால் இருப்பீர் !
ஆண்டொன்று கடந்தாலும் ஆறாத்துயருடன்
ஆண்டவனின் அடி போற்றி - உங்கள்
ஆத்மா சாந்தியடைய அனுதினமும் பிரார்த்திப்போம்.
ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!

(cs.20881) (2:6) **குடும்பத்தினர்**

# முதலாம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம் 16 - 12 - 1938



மறைவு 06 - 10 - 2021

## அமரர் திரு. வெலிகம
## K.S. பொன்னம்பலம்

**(All Island JP) (Weligama Stores Colombo -11)**

Money Changer Colombo - 11. Westerm Union Colombo-11, People Park Colombo -11, Vasantha Jewellery Colombo - 11. Weligama Trade Centre Colombo -11, Anosh Marketing Pvt LTD Colombo -11 Vasantha Liquor shop Kaithady, Lanka Filling Station Kaithady, Kaithady Ps Foodcity Kaithady, Vasantha Agency Post Office Kaithady, Tyre Shop Kaithady, KCCS Fuel Mart Sevanapitiya, Pollanaruva, KKS Cement Contract Dealer, Suganthan Rice Mill Paranthan, Sumathy Rice Mill Kaithady, Kurunagal Rice Mill, Kanakarayankulam Rice Mill Kanakarayankulam, Colombo Moter Stores Jaffna, Weligama wine Store's Sevanapitiya, Manampitiya Rice Mill

**Owner of the Business**

**திதி : 25.09.2022**

ஆண்டு ஒன்று ஆனபோதும்
ஆறவில்லை எம்துயரம் அப்பா!
எத்தனை ஆண்டுகள் சென்றிடினும்
அப்பா உங்கள் நினைவுகள் என்றும்
எம்மனங்களில் நீங்காது நிலைத்திருக்கும்.

**பிள்ளைகள் : சுமதி, வசந்தி, சுகந்தன்.**

(CS 20944) (3/6)

# மரண அறிவித்தல்

மலர்வு 03 - 04 - 1944



உதிர்வு 21 - 09 - 2022

## அமரர் திருமதி இராசரத்தினம் சின்னத்தங்கம்

ஆதிமயிலிட்டியைப் பிறப்பிடமாகவும் ஓவசியர் வீதி, தெல்லிப்பளையை வசிப்பிடமாகவும் கொண்ட இராசரத்தினம் சின்னத்தங்கம் அவர்கள் கடந்த (21.09.2022) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா பொன்னுப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை செல்லாச்சிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற இராசரத்தினத்தின் அன்பு மனைவியும் பவானி, ஜெயபவான் (சுவிஸ்), தயாளினி (சுவிஸ்), ரஞ்சினி (சுவிஸ்), சுகந்தினி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும், ஆனந்தராசா (பிரதேசசபை வலி. வடக்கு), சசிச்செல்வி (சுவிஸ்), ஞானவேல் (சுவிஸ்), கேதீஸ்வரன் (சுவிஸ்), பரமேஸ்வரன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியாரும், மதுமிதன் (இலங்கை), ஜெனிஷா (சுவிஸ்), ஜானுசன் (சுவிஸ்), ஜெருஷா (சுவிஸ்), கீர்த்தனா (சுவிஸ்), கீர்த்திகா (சுவிஸ்), தனுசன் (சுவிஸ்), மதுசன் (சுவிஸ்), ஷாலினி (சுவிஸ்), றவீனா (சுவிஸ்), சைனிகா (ஜேர்மனி), தரணிகா (ஜேர்மனி), கணேசகுமார் (சுவிஸ்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், அஷ்விதாவின் பாசமிகு பூட்டியும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் , பரமேஸ்வரி மற்றும் முருகையா, மல்லிகாதேவி, துரை (லண்டன்), புவனேஸ்வரி, அண்ணாத்துரை (பிரான்ஸ்) ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்றவர்களான பத்மாவதி, அன்னராசா, கிருஷ்ணமூர்த்தி, நவரத்தினம் மற்றும் தவமணி, ஜெயகௌரி (லண்டன்) வதனி (பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனியும், காலஞ்சென்றவர்களான நடராஜா விசாலாட்சிப்பிள்ளை, இராசேந்திரம், அன்னலட்சுமி, குருசாமி, விமலாதேவி மற்றும் சிவயோகம் ஆகியோரின் மைத்துனியும், காலஞ்சென்றவர்களான செந்தூரன், தனலக்ஷ்மி மற்றும் மயூரன், முரளிதரன் (பிரான்ஸ்), சிறிதரன், கேசவன், தனுஷா (அமெரிக்கா), மதுரா (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு பெரியம்மாவும், பகிதரன் (சுவிஸ்), தயாபரன், மோகனா, தாரனா (பிரான்ஸ்), பிரசாந்தி (லண்டன்), மதுசாந்தி (லண்டன்), புகழோஜினி (லண்டன்), திவ்யா (பிரான்ஸ்), துசியா (பிரான்ஸ்), தனுசா (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மாமியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.09.2022) ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக மயிலிட்டி கொட்டுப்புலம் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**ஓவசியர் வீதி, தெல்லிப்பளை**

**தொலைபேசி 0212059205, 0041787180222**

**தகவல்: குடும்பத்தினர்**

(CS 20942) (3/6)

# மரண அறிவித்தல்

மலர்வு 11 - 03 - 1943



உதிர்வு 20 - 09 - 2022

## திருமதி சிவப்பிரகாசம் யோகாம்பிகை

யாழ் நயினாதீவைப் பிறப்பிடமாகவும பிரம்படி வீதி, கொக்குவில். மற்றும் மெல்பேர்ன், அவுஸ்திரேலியாவை வதிவிடமாகவும் கொண்ட திருமதி சிவப்பிரகாசம் யோகாம்பிகை அவர்கள் கடந்த (20.09.2022) செவ்வாய்க்கிழமை இறையடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வேலாயுதம், வைரிப்பிள்ளை தம்பதிகளின் புத்திரியும், காலஞ்சென்ற சின்னத்துரை, தங்கம்மா (நயினாதீவு) தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சிவப்பிரகாசம் அவர்களின் பாசமிகு மனைவியும், ஜெயக்குமரன், நந்தகுமரன், அனுரகுமரன், விஜேயகுமரன் ஆகியோரின் அன்புத் தாயாரும், சுசித்திரா, சுதர்சினி, எழிலினி, கல்பனா ஆகியோரின் பாசமிகு மாமியாரும், மாதங்கி, சாங்கரி, புருஷோத், லோகப்பிரியன், நிவேனி, ரக்ஷன், அபூர்வா, ஆதிரன், அகரன், நியந்திரி, நிஷ்கலன், ஆகியோரின் பாசமிகு அப்பம்மாவும், காலஞ்சென்றவர்களான முத்தம்மா, செல்லம்மா, பரமநாதன், சபாரத்தினம் மற்றும் பரமேஷ்வரி (நயினாதீவு) ஆகியோரின் அன்புச் சகோதரியும் மற்றும் வரலெட்சுமி, நாகலட்சுமி, குணலட்சுமி, ஞானப்பிரகாசம் (ஓய்வுபெற்ற அதிபர் - வவுனியா) ஆகியோரின் அன்பு மைத்துனியும், ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (27.09.2022) செவ்வாக்கிழமை அன்று மதியம் 11.00 am தொடக்கம் 01.15 am வரை "Boyd Chape" Springvale Botanical Cemetery, 600 Prines HWY Springvale Vic 3171 Australia வில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

**தகவல்: குடும்பத்தினர்**

**தொடர்புகள்:**

**திரு.சி.ஜெயக்குமரன் +61410381559, திரு.சி.நந்தகுமரன் +94774220276**
**Dr.சி.அனுரகுமரன் +61434352256, திரு.சி.விஜயகுமரன் +61470689158**

(CS 20953) (3/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# முட்டை,பாலுக்கு நாட்டில் ஏற்படவுள்ளது தட்டுப்பாடு!

## மஹிந்த அமரவீர எச்சரிக்கை

**கொழும்பு, செப்.25**

**விலங்குத் தீவன பற்றாக்குறையால் பால் மற்றும் முட்டை, கோழி இறைச்சி தொழிற்துறை வீழ்ச்சியடைந்துள்ளது. எதிர்வரும் நாள்களில் பால், முட்டை ஆகியவற்றுக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்படும் என விவசாயத்துறை மற்றும் வனஜீவராசிகள் பாதுகாப்பு அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.**



பேராதனை விலங்கு உணவு உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தின் முன்னேற்றம் தொடர்பிலான மீளாய்வுக் கூட்டத்தில் கலந்து கொண்டதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

கோழி மற்றும் இறைச்சி உற்பத்தியில் நாடு தன்னிறைவடைந்திருந்தது. தற்போது அந்தத் தொழிற்துறை முழுமையாக வீழ்ச்சியடையும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

விலங்கு மற்றும் கோழிகளுக்கான தீவன இறக்குமதி மட்டுப்படுத்தப்பட்டதால் மோசமான பாதிப்பை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

கடந்த காலங்களில் மாதம் 80 ஆயிரம் கோழிகள் சந்தைக்கு விநியோகிக்கப்பட்டன.

ஆனால், தற்போது 10 ஆயிரம் கோழிகள் மாத்திரமே சந்தைக்கு விநியோகிக்கப்படுகின்றன. கோழி இறைச்சியின் விலை அதிகரிப்பால் பொதுமக்கள் கோழி இறைச்சியை கொள்வனவு செய்வதையும் மட்டுப்படுத்தியுள்ளார்கள்.

இந்தத் தொழிற்துறையின் தற்போதைய நிலைமை கவலைக்குரியது. கோழி மற்றும் பால் உற்பத்தி தொழிற்துறையை மேம்படுத்த போதுமான மானியத்தை ஒதுக்கவேண்டும் என்று நிதியமைச்சரிடம் கோரவுள்ளோம் - என்றார். (எ-இ)

# திரிபோஷா விவகாரத்தில் அமைதி காக்க முடியாது

## உபுல் ரோஹண திட்டவட்டம்

கொழும்பு, செப்.25




திரிபோஷாவில் அளவுக்கதிகமான எப்லொடொக்சின் அடங்கியுள்ளமை தொடர்பில் வெளிப்படுத்தியமைக்காக என்னை இந்த விடயத்தில் மௌனமடையச் செய்வதற்கு முயற்சிக்கப்பட்டால் அதற்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்குத் தயார்.

இவ்வாறு இலங்கை பொது சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண தெரிவித்தார்.

உபுல் ரோஹண சுகாதார அமைச்சின் விசேட சுற்றிவளைப்பு பிரிவுக்கு அழைக்கப்பட்டு விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டார். விசாரணைகளின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தாவது:

எவரேனுமொருவரின் கவனக்குறைவால் பொது மக்களுக்குப் பாதிப்பு ஏற்பட்டிருக்குமாயின், அது தொடர்பில் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று எதிர்பார்க்கின்றோம்.

தொடர்ச்சியாக என்னை அமைதிப்படுத்துவதற்கோ அல்லது என்னை அசௌகரியத்துக்கு உள்ளாக்கி இந்தப் பிரச்சினையிலிருந்து என்னை நீக்குவதற்காக விசாரணைகள் முன்னெடுக்கப்படுமானால் அதற்குரிய நடவடிக்கைகளை எடுப்பதற்கும் நாம் தயாராகவே உள்ளோம்.

களுத்துறை தேசிய மருத்துவ ஆய்வுகூட அறிக்கைகள் எட்டின் அடிப்படையிலேயே நான் இந்த விடயத்தை வெளிப்படுத்தினேன். அந்த அறிக்கைகளிலுள்ள கருத்துக்களை நிரூபிக்கவும், கவனக்குறைவாக ஏனைய பகுதிகளுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளமை தொடர்பில் உறுதிப்படுத்துவதற்கும் நான் தயாராகிக் கொண்டிருக்கின்றேன்.

திரிபோஷா நிறுவனம் அதன் தொழிற்சாலையிலிருந்து வழங்கிய திரிபோஷாவிலிருந்தே நாம் மாதிரிகளைப் பெற்றுக்கொண்டோம். தற்போது களுத்துறைக்கு வழங்கப்பட்டுள்ள திரிபோஷா மாதிரிகளை மாத்திரமே பெற்றுக் கொண்டுள்ளோம். அந்தப் பகுதியில் 150 திரிபோஷா மூடைகள் காணப்பட்டன.

இவற்றைவிட அதிகமாகத் தயாரிக்கப்படுகிறது என்பதை நாம் அறிவோம். எஞ்சிய தொகையை எந்தெந்த பகுதிகளுக்கு விநியோகித்துள்ளனர் என்பது எமக்குத் தெரியாது. இது தொடர்பில் நாம் ஆராய்ந்து வருகின்றோம்- என்றார். (எ -இ)

# வடிகானில் மீட்கப்பட்ட பச்சிளம் சிசு

கொழும்பு, செப்.25

வடிகானில் இருந்து சிசு ஒன்று உயிருடன் நேற்று அதிகாலை மீட்கப்பட்டுள்ளது. தலவாக்கலைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஸ்டேசன் வட்டகொட பகுதியிலுள்ள வடிகான் ஒன்றிலிருந்தே சிசு மீட்கப்பட்டுள்ளது.

வீதியூடாகச் சென்ற சிலர் வடிகானில் சிசுவொன்று இருப்பதை அவதானித்து பொலிஸாருக்குத் தகவலை வழங்கியுள்ளனர். சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார், சிசுவை மீட்டு லிந்துலை பிரதேச மருத்துவமனையில் சேர்ப்பித்தனர்.

சிசுவை நுவரெலியா மாவட்ட மருத்துவமனைக்கு கொண்டு செல்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும், சிசு ஆரோக்கியமாக உள்ளது என்றும் மருத்துவமனையின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய தாய் இனம் காணப்பட்டுள்ளார் என்று தெரிவித்த பொலிஸார், அவர் திருமணமாகாத 21 வயதுடைய பெண் என்று தெரிவித்துள்ளனர். சிகிச்சைகளுக்காக அந்தப் பெண் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று கோட்டக்கலை பிரதேச பொது சுகாதார மருத்துவ அதிகாரி தெரிவித்தார்.(எ-இ)

# வனப் பாதுகாப்பு வலயமாக மாற்றப்படவுள்ள நந்திக்கடல்

கொழும்பு, செப்.25

நந்திக்கடல், சாம்பல்தீவு, நாயாறு ஆகிய பகுதிகளை வனப்பாதுகாப்பு வலயங்களாக நியமிப்பதற்கு அரசாங்கம் அங்கீகாரம் வழங்கியுள்ளது என்று விவசாய, வனஜீவராசிகள் மற்றும் வனவளங்கள் பாதுகாப்பு அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் தெரிவித்ததாவது:

அமைச்சில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடலை அடுத்து இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மாசடைந்த குளங்களைச் சுத்தம் செய்வதற்கான வழிமுறைகள் தொடர்பாக விவாதிக்கப்பட்டன.

இதற்கு அமைச்சரவை ஏற்கனவே அனுமதி வழங்கியுள்ள நிலையில், பணிகளைத் துரிதப்படுத்த வேண்டும் என்று வனஜீவராசிகள் பணிப்பாளர் நாயகத்துக்கு ஆலோசனை வழங்கப்பட்டது. பல்வேறு மனித நடவடிக்கைகளால் நாயாறு மற்றும் நந்திக்கடல் குளங்கள் மாசுபடுகின்றன என்றும், ஏராளமான கழிவுகள் அகற்றப்படாததால் சதுப்பு நிலங்கள் மற்றும் குளத்தை சார்ந்த உயிரினங்கள் அழியும் அபாயத்தில் உள்ள ஒன்றும் கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டது. இரு நீர்நிலைகளையும் பாதுகாப்பதற்கான ஆய்வு செய்வதற்காக விசேட குழுவொன்றை நியமிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது- என்றார். (எ-இ)

# டெங்குக் கட்டுப்பாட்டு வாரத்தில் யாழில் களப் பரிசோதனைகள்!

யாழ்ப்பாணம், செப். 25

தேசிய டெங்குக் கட்டுப்பாட்டு வாரமான எதிர்வரும் 28ஆம் திகதி தொடக்கம் 30ஆம் திகதிவரை யாழ்.மாவட்டத்தில் களப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படவுள்ளன என யாழ்.மாநகரசபை சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனை அறிவித்துள்ளது.

இதன்போது வழிபாட்டிடங்கள், சமய நிறுவனங்கள், அரச, தனியார் நிறுவனங்கள், பொதுச்சந்தைகள், மயானங்கள், வீடுகள், பாடசாலைகள் ஆகியவற்றில் களப்பரிசோதனை மேற்கொண்டு டெங்கு பெருக்கத்துக்கான சாதகமான இடங்கள் காணப்படுமாயின் கடும் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

எதிர்வரும் 28ஆம் திகதி ஜே/87 பிரிவுக்குட்பட்ட பகுதிகளிலும் எதிர்வரும் 29ஆம் திகதி ஜே/102 பிரிவுக்குட்பட்ட பகுதிகளிலும், 30ஆம் திகதி ஜே/62 பிரிவுக்குட்பட்ட பகுதிகளிலும் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம் 22 - 04 - 1995



மறைவு 24 - 09 - 2022

## சுந்தரலிங்கம் யதுசா

மணல்தறை லேன், கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும் வெங்கடேஸ்வரா வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட சுந்தரலிங்கம் யதுசா நேற்று (24.09.2022) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் சுந்தரலிங்கம் (முன்னாள் மனேச்சர் பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் - கைதடி, மனேச்சர், யா/ அரசடி விநாயகர ஆலயம்) சாந்தினி தம்பதிகளின் பாசமிகு மகளும், தனுசா, கம்சா ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.09.2022) ஞாயிற்றுக்கிழமை இல. 15, வெங்கடேஸ்வரா வீதியில் உள்ள அன்னாரது இல்லத்தில் முற்பகல் 11.00 மணியளவில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பையன் மணல் இந்து மயானத் திற்குச் எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல. 15, வெங்கடேஸ்வரா வீதி,
யாழ்ப்பாணம்.
076 734 7963
076 480 5372
தகவல்: குடும்பத்தினர்
(CS 20956) (3/6)

# மரண அறிவித்தல்




## காசிநாதர் ஜெயரவீந்திரன் (பவா)

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.09.2022) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். இந்த அறிவித் தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தோற்றம் : 18.06.1953
மறைவு : 21.09.2022
தகவல் :குடும்பத்தினர்
ஏழாலை கிழக்கு, ஏழாலை.
0094 75 9583771, 0094 753283773, 0044 7478771560

# அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவில்லும்



தோற்றம்: 05.07.1946
மறைவு: 29.08.2022

கடந்த 29.08.2022 திங்கட்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

## அமரர் நல்லையா பத்மநாதன்

(ஓய்வுநிலை அதிபர் யா/ வேலணை கிழக்கு ம.வி.)

அவர்களின் சிவபதப்பேறு குறித்த அந்தியேட்டிக் கிரியைகள் 26.09.2022 திங்கட்கிழமை காலை 6 மணிக்கு கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் 28.09.2022 புதன் கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் நடைபெறவிருப்பதால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் பிரிவுச் செய்திகேட்டு நேரில் வருகை தந்தும் தொலைபேசி மூலம் ஆறுதல் கூறியவர்களுக்கும் ஏனைய பல வழிகளில் உதவியவர்களுக்கும் எமது இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இல. 56/3, கலட்டி அம்மன் வீதி,
யாழ்ப்பாணம்.
0773614630/ 0212221792
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

தோற்றம் 24 . 03 . 1943



மறைவு 23 . 09 . 2022

காரைநகர், மணற்காடு

## திருமதி பரமேஸ்வரி சாம்பசிவஐயர்

கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் ஆவரங்கால், மணற்காடு, பதுளை, ஹற்றனை வசிப்பிட மாகக் கொண்ட திருமதி **பரமேஸ்வரி சாம்பசிவஐயர்** (23.09.2022) வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சாமிஐயா கோகிலாம்பாள் தம்பதியரின் அன்பு மகளும் சோமசுந்தரக் குருக்கள்- விசாலாட்சி தம்பதியரின் அன்பு மருமகளும் சாம்பசிவஐயரின் அன்பு மனைவியும் ஆவார். ஸ்ரீதரக்குருக்களின் (எசன்.ஜேர்மனி) பாசமிகு தாயாரும், சாந்தினியின் (ஜேர்மனி) அன்பு மாமியாரும் ஷாண்மாதுரசர்மா (ஜேர்மனி), ஸந்தியா (ஜேர்மனி) ஆகியோரின் பேர்த்தியாரும் அமரர் குமாரசாமிக்குருக்கள் மற்றும் சிவானந்தசர்மா (இணுவில்) பரமேஸ்வரசர்மா (இந்தியா) தயாபரை (கனடா) சிற்சபேசசர்மா (உடுவில்), இராஜேஸ்வரி (நெல்லியடி), சர்வேஸ்வரி (கொழும்பு), சோமசபேசக்குருக்கள் (இணுவில்) ஆகியோரின் சிறிய தாயாருமாவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.09.2022) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணியளவில் இணுவில் கிழக்கு காரைக்கால் வீதி, 'பவாநிவாசம்' இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

'பவாநிவாசம்'
காரைக்கால்வீதி, இணுவில் கிழக்கு.
தகவல்: குடும்பத்தினர்
021 224 1781, 00491713150877

# நினைவழியாத ஓராண்டு

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து, வானுறையும் தெய்வத்துள் உறைந்திட்ட- பெருமகன்- அமரத்திரு

மண்மகிழ 05 . 10 . 1937



விண்மகிழ 06 . 10 . 2021

பொறியியலாளர்

## கதிரவேலு சத்தியமூர்த்தி

(இளைப்பாறிய நீர்ப்பாசனப் பொறியியலாளரும்- பிரபல கணித, ஆங்கில ஆசிரியரும்- நியூ பிக்கோன் அக்கடமி தாபகரும், நிர்வாக இயக்குநரும்)

**திதி: புரட்டாதி அமாவாசை**

இறையாகி எம் நெஞ்சத்துள் உறைவீர்கள், ஐயன்மீர்
என்றும் பெருஞ்சுடராகி- எம் இருள் வழிகளில்
கூடவே முன்நடப்பீர்கள், கண்கண்ட தெய்வமே!!
'கல்வியே – இனமீட்பின் ஒரே வழி' என்ற
உங்கள் தாரக மந்திரம் – எப்போதும் மறக்காமல்
எம் செவிகளில், நிரந்தரம்!!

அன்பினிய எமது ஆசானின் ஓராண்டு நினைவு வழிபாடுகள் எதிர்வரும்(30.09.2022) வெள்ளிக்கிழமை தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயத்தில் இடம்பெறுவதோடு, தொடர்ந்து மதியபோசன உபசாரம் ஆலய வடக்கு வீதி, வைத்திலிங்கம் மடத்தில் (முற்பகல் 11 மணிமுதல் - பிற்பகல் 2 மணிவரை) இடம்பெறும். ஆசானின், உற்றார், உறவினர், நண்பர்கள் மாணவர்கள் **இவ்வழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று** நிகழ்வில் கலந்து சிறப்பிக்குமாறு அன்புரிமையோடு அழைக்கின்றோம்.

அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி
நினைவோடு தொழும் மாணவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாடாளுமன்றைக்...

நாட்டு மக்களுக்கு தற்போதைய நாடாளுமன்றம் மீது நன்மதிப்புக் கிடையாது. ஆகவே நாடாளுமன்றத்தைக் கலைத்து பொதுத்தேர்தலுக்குச் செல்ல ஆதரவு வழங்குவோம் என ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

சமகால அரசியல் நிலைவரம் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாடாளுமன்றில் அங்கம் வகிக்கும் அனைத்து அரசியல் கட்சிகளின் இணக்கப்பாட்டுடன் தேசிய அரசாங்கத்தை அமைப்பதைத் தடுக்க பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்ச எடுத்த முயற்சிகள் வெற்றி பெற்றுள்ளன. பொதுஜன பெரமுனவை நாட்டு மக்கள் கடுமையாக வெறுக்கும் பின்னணியில் பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கம் தோற்றம் பெற்றுள்ளது.

பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காணும் நோக்கம் இந்த அரசாங்கத்துக்குக் கிடையாது. பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்களின் கடுமையான அழுத்தத்தினால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் 38 இராஜாங்க அமைச்சுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன.

எதிர்வரும் நாள்களில் அமைச்சரவையையும் விரிவாக்க அவதானம் செலுத்தப்பட்டுள்ளமை வெறுக்கத்தக்கதாகும். அரசியல் நெருக்கடிக்கு தீர்வு காணப்படவில்லை. பொருளாதாரம் மற்றும் அரசியல் நெருக்கடிக்கு தீர்வு காண்பதாக குறிப்பிட்டுக்கொண்டு தேசிய சபை என்ற நாடாளுமன்றக் குழுவை அமைக்க அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. தேசிய சபையின் செயற்பாடுகள் குறித்து தெளிவற்றதன்மை காணப்படுகிறது.

உள்ளூராட்சிமன்றத் தேர்தலை நடத்துமாறு அரசியல் கட்சிகள் குறிப்பிட்டுள்ள நிலையில் நாடாளுமன்றத்தைக் கலைத்து பொதுத்தேர்தலை நடத்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவதானம் செலுத்தியுள்ளார் - என்றார். (ம)

(மற்றொரு செய்தி உள்ளே)

## அரசாங்கத்துக்கு...

மாளிகை, அலரிமாளிகை, பிரதமர் அலுவலகம், இலங்கை இராணுவம், கடற்படை, வான்படை மற்றும் பொலிஸ் தலைமையகம் உள்ளிட்ட பகுதிகளை கொழும்பு மாவட்டத்தில் உயர் பாதுகாப்பு வலயங்களாகப் பிரகடனப்படுத்தும் அதி விசேட வர்த்தமானி அறிவித்தலை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்றுமுன்தினம் வெளியிட்டிருந்தார்.

இந்தப் பிரகடனத்தின்படி, பொலிஸ்மா அதிபரின் அனுமதியின்றி, அத்தகைய உயர் பாதுகாப்பு வலயங்களுக்குள் அமைந்துள்ள வீதி, மைதானம் அல்லது ஏனைய திறந்தவெளி பிரதேசங்களில் பொதுக்கூட்டங்கள் அல்லது பேரணிகள் யாவும் தடைசெய்யப்பட்டுள்ளன. இதற்கு எதிராகவே நேற்று அங்கு பெருமளவான மக்களின் பங்கேற்புடன் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. (அ-ம-22)

## மாணவர்கள்...

ஒப்படைக்கப்பட்டனர் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று நண்பகல் யாழ்ப்பாணம் பிறவுன் வீதி, ஆலய கேணியடியில் மாணவர்கள் போதைப்பொருள் பயன்பாட்டில் ஈடுபட்டுள்ளனர் என்று பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்குத் தகவல் கிடைத்துள்ளது. இதையடுத்து அங்கு சென்ற பொலிஸ் புலனாய்வுப் பிரிவினர் மாணவர் ஒருவர் மாவா போதைப்பொருளை உடைமையில் வைத்திருந்த நிலையில் கைது செய்தனர். ஏனைய மூவரும் மது பானம் அருந்தியவாறு இருந்தனர். அவர்கள் நால்வரும் மூத்த பொலிஸ் அத்தியட்சகரின் முன்னிலையில் முற்படுத்தப்பட்டனர். தனியார் கல்வி நிலையம் ஒன்றுக்கு வருகை தந்ததாகவும் நண்பனின் பிறந்தநாள் கொண்டாட்டத்தில் மதுபானம் அருந்தியதாகவும் மாணவர்கள் விசாரணையில் தெரிவித்தனர். அவர்கள் க.பொ.த. சாதாரணதரத்தை முடித்து தற்போது உயர்தரத்தில் கல்வி பயிலும் 17, 18 வயதுடையவர்கள் என்றும் விசாரணையில் கண்டறியப்பட்டது. இதையடுத்து மாணவர்களின் பெற்றோரை அழைத்த மூத்த பொலிஸ் அத்தியட்சகர், குறித்த பெற்றோரையும் மாணவர்களையும் கடுமையாக எச்சரித்து அனுப்பியுள்ளார். (அ-ம-27-26-20)

## திலீபனை...

குச்செல்வதைத்தவிர்க்கவேண்டுமென்று மீனவர்களுக்கு அழைப்புவிடுத்துள்ளார் யாழ்ப்பாணம் மாவட்டக் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனத் தலைவர் அ.அன்னராசா.

தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு உடனடித் தீர்வுகோரி இந்திய அரசிடம் ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து தியாக தீபம் திலீபன் உணவு தவிர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்து உயிர்க்கொடை வழங்கிய 35ஆவது ஆண்டு நிறைவு நாளையாகும். இதையடுத்தே நாளை இடம்பெறும் நிகழ்வுகளுக்கு ஆதரவளிக்கும் வகையில் கடற்றொழிலுக்குச் செல்வதைத் தவிர்க்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ம-27-26)

## உளவள...

நிலையத்தில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்படுகின்றனர். இவர்களில் உயிர்கொல்லிப் போதைப்பொருளான ஹெரோய்னுக்கு அடிமையானவர்களும் உள்ளடங்குகின்றனர் என்று தேசிய அபாயகர ஔடதங்கள் அதிகார சபையின் யாழ். மாவட்ட இணைப்பாளர் அஜந்தன் சியாமினி தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பாடசாலை மட்டங்களிலிருந்தே போதைப்பொருள் தொடர்பான விழிப்புணர்வு மற்றும் போதைக்கு எதிரான செயற்றிட்டங்களை முன்னெடுக்க வேண்டும். அந்தவகையில் ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவில் இருந்தும் இரண்டு பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர்களை இணைத்து தற்பொழுது பயிற்சிகளை வழங்கி வருகின்றோம். கிராம மட்டங்கள் ரீதியாகவும் பாடசாலைகளை மையப்படுத்தியதாகவே இந்தச் செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. அந்தவகையில் தென்மராட்சி கல்வி வலயத்தில் 53 அதிபர்கள் மற்றும் 57 உளவளத் துணை ஆசிரியர்களுக்கான பயிற்சிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இந்தச் செயற்றிட்டத்தை அடுத்து, பல அதிபர்கள் ஆசிரியர்கள் போதைப்பொருளுக்கு அடிமையாகும் மாணவர்களை சிகிச்சைக்காக ஒப்படைத்து வருகின்றார்கள் - என்றார். (அ-ம-125)

## இலங்கையில்...

கிடைத்தே ஆக வேண்டும். எனவே, நாட்டில் இன ரீதியில், மத ரீதியில் எழுந்துள்ள அனைத்துப் பிரச்சினைகளுக்கும் சகல தரப்பினருடனும் சுமுகமாகப் பேசி விரைவில் தீர்வு காண்போம்' இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

குருந்தூர்மலை விவகாரம் மற்றும் திருக்கோணேஸ்வரம் விவகாரம் தொடர்பில் தமிழ் அரசியல்வாதிகளுக்கும் சிங்கள அரசியல்வாதிகளுக்கும் இடையில் எழுந்துள்ள கருத்து மோதல்கள் தொடர்பில் கருத்துரைக்கும்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

'இனவாத, மதவாத ரீதியில் கருத்துக்களை வெளியிடுவோர் நாட்டின் இன நல்லிணக்கத்தையும் மத நல்லிணக்கத்தையும் கவனத்தில் கொள்ளவேண்டும். ஒவ்வொரு இனத்தவர்களும் தங்களுக்குரிய முழுமையான உரிமைகளைக் கோரி நிற்பார்கள். அதேவேளை, ஒவ்வொரு மதத்தவர்களும் தங்கள் மத உரிமைகளை விட்டுக்கொடுக்கமாட்டார்கள்.

எனவே, இன, மத ரீதியில் எழும் பிரச்சினைகளுக்குப் பேச்சு மூலமே தீர்வுகாண வேண்டும். அதைவிடுத்து இனவாதத்தையும் மதவாதத்தையும் தூண்டும் வகையில் கருத்துக்களை வெளியிட்டு பிரச்சினைகளைப் பெரிதுபடுத்த எந்தத் தரப்பினரும் முயலக்கூடாது - என்றார். (அ-ம-22)

## சிகிச்சை...

தேசிய அபாயகர ஔடதங்கள் அதிகார சபையின் யாழ். மாவட்ட இணைப்பாளர் அஜந்தன் சியாமினி இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:-

போதைப்பொருளுக்கு அடிமையாகிய 21 வயதுக்கு உட்பட்டவர்கள் சிகிச்சை பெறுவதற்கு கண்டியிலும், 21 தொடக்கம் 32 வயதுக்கு இடைப்பட்டவர்கள் சிகிச்சை பெறுவதற்கு கம்பஹாவிலும், 32 வயதுக்கு மேற்பட்டவர்கள் சிகிச்சை பெறுவதற்கு காலியிலும் சிகிச்சை மறுவாழ்வு மையங்கள் உள்ளன. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இவ்வாறான சிகிச்சை மறுவாழ்வு மையங்கள் இல்லை. இந்த நிலை மாற்றப்பட வேண்டும். வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிலும் போதைப் பொருளுக்கு எதிரான சிகிச்சை மறுவாழ்வு மையங்கள் அமைக்கப்படவேண்டும் - என்றார். (அ-ம-125)

## ஹெரோய்னை...

கடந்த சில தினங்களுக்கு முன்பாக மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வீடு திரும்பிய அவர் ஹெரோய்ன் போதைப்பொருளைப் பயன்படுத்தியதால் உயிரிழந்தார். மருத்துவப் பரிசோதனையிலும் அவரது உயிரிழப்புக்கு ஹெரோயின் போதைப்பொருளை எடுத்துக்கொண்டமையே காரணம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-27-26-20-125)

## பட்டத்தை...

திரும்பத் தங்கள் கல்வி நடவடிக்கைகளைப் பிற்போடும் மாணவர்கள்மீது பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு கவனம் செலுத்தத் தொடங்கியுள்ளது.

இவ்வாறு பதிவு செய்து நீண்டகாலமாகப் பட்டம் பெறாமல் பல்கலைக்கழகங்களில் இருக்கும் மாணவர்களின் விவரங்களைப் பாதுகாப்பு அமைச்சு, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிடம் கோரியிருக்கிறது.

இது தொடர்பில் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரினால் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்தில்,

"எமது பல்கலைக்கழகங்களினது பல்வேறு பீடங்களையும் சேர்ந்த உள்வாரி மாணவர்கள் அரசுக்கு எதிராக இடம்பெற்ற போராட்டங்கள் மற்றும் எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளமை அண்மைக் காலமாக அவதானிக்கப்பட்டுள்ளது.

மாணவர் மன்றங்களின் செயற்பாடுகளுக்கு அரசாங்கம் ஒருபோதும் தடையாக இருக்காது. எனினும் கடந்த காலங்களில் அரசுக்கு எதிராக இடம்பெற்ற போராட்டங்கள் மற்றும் எதிர்ப்பு நடவடிக்கைகளின்போது ஒரு சில அரசியல் கட்சிகள் தமது தவறான அரசியல் நோக்கங்களைச் செயற்படுத்துவதற்கு பல்கலைக்கழக மாணவர்களைப் பயன்படுத்துகின்றன என்பதை உணர முடிகிறது.

இதனால் பல்கலைக்கழகங்களில் உள்வாரி மாணவர்களாகப் பதிவுசெய்துவிட்டு, உரிய காலத்தினுள் பட்டம் பெற்று வெளியேறாமல், திரும்பத் திரும்ப தங்கள் கல்வி நடவடிக்கைகளைப் பிற்போடும் மாணவர்கள் மற்றும் மீள் பரீட்சார்த்திகளின் விவரங்களை பல்கலைக்கழகங்களிடம் கோரி, பெற்றுத் தரவேண்டும் என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிடம் கேட்டுள்ளார். (அ-ஒ-5)


# மரண அறிவித்தல்

தோற்றம் 06 . 05 . 1941



மறைவு 23 . 09 . 2022

**அமரர் சின்னையா சிவபாதம்**

(பிரபல புகையிலை வியாபாரியும், பிரபல இசை நாடக நடிகரும்)

முருகன் கோவிலடி புலோலி வடமேற்கை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் சின்னையா சிவபாதம் (பிரபல புகையிலை வியாபாரியும், பிரபல இசை நாடக நடிகரும்) அவர்கள் கடந்த (23.09.2022) வெள்ளிக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.09.2022)ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று தகனக்கிரியைகள் கருகம்பன் இந்து மயானத்தில் இடம்பெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்

(CS 938) (3/6)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூற்றாண்டு புலமைப் பகிர்வு

யாழ்ப்பாணம், செப்.25

பண்டிதர் க.வீரகத்தி நூற்றாண்டுப் புலமைப் பகிர்வு நிகழ்வு கொழும்புத் தமிழ்ச் சங்கத் தலைவர் சட்டத்தரணி நடராஜர் காண்டீபன் தலைமையில் ஆனைப் பந்தி குருகுல மண்டபத்தில் எதிர்வரும் 2ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி.ப.3.30 மணிக்கு நடைபெறவுள்ளது. (ய)

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ, 42 வயது, சொந்த தொழில் செய்யும் மணமகனுக்கு மணமகள் தேவை.

077 905 8615 (வைபர்&வாட்ஸ்ஆப்)

## மணமகன் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1992 இல் பிறந்த, பூரட்டாதி 4 பாதம் மீன இராசி கிரகபாவம் 25. கொழும்பில் அரச வங்கியொன்றில் உயர் பதவி வகிக்கும் பட்டதாரி மணமகளுக்கு தகுந்த மணமகன் தேவை. (cs 46690) (2.6)

071 580 5613, 076 561 4313

## கார் விற்பனைக்கு

*TOYOTA COROLLA AE 110*
கார் விற்பனைக்கு.

T.P 0771792577

## வேலையாள்கள் தேவை

யாழ். பல்கலைக்கழகத்திற்கு முன்பாக இயங்கும் மினி சுப்பர் மாக்கெட்டில் பணிபுரிய பெண் வேலையாள்கள் தேவை.

- வயதெல்லை: 20 - 30
- தகைமை: கணினி அறிவு

(cs 20910) (2.6) 077 2808962

## வீடு வாடகைக்குத் தேவை

யாழ் நகரில் இருந்து 10Km இற்குள் வீடு வாடகைக்குத் தேவை.
தரகர் தேவையில்லை

தொடர்புகட்கு - 076 157 5323

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் கைதடி சந்திக்கு அருகாமையில் 02 பரப்பு (நிலபரப்பு) காணி விற்பனைக்கு உண்டு.**

- இரண்டு பரப்பாக பிரிக்கப் பட்ட நிலையில்.
- கைதடி சந்தியிலிருந்து 750 M தூரத்தில்
- A09 வீதியில் இருந்து இரண்டாவது காணி.
- நல்ல தண்ணீர் ஊற்று நிலம்.
- குடியிருப்புகள் சூழ உள்ள காணி.
- 20 அடிப் பாதையுடன்

076 755 8606

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் தெல்லிப்பளையில் 24 பரப்பு (நிலபரப்பு) காணி விற்பனைக்கு உண்டு.**

- மல்லாகம் சந்தியிலிருந்து பலாலி விமானநிலையம் செல்லும் பிரதான வீதிக்கு அருகாமை
- தெல்லிப்பளை வைத்தியசாலையிலிருந்து 750 M தூரத்தில்
- K.K.S வீதியில் இருந்து 1KM தூரத்தில்
- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில

077 874 8135 / 077 408 2649

## காணி தேவை

கொக்குவில் கிழக்கு பகுதியில் வீடு கட்டக்கூடிய 1 பரப்புக்கு மேற்பட்ட காணி விலைக்குத் தேவை.

(CS 20935) (3/6) T.P 071 450 9450

## மருந்தாளர் (Pharmacist) தேவை

சாவகச்சேரியில் உள்ள City Medicals மருந்தகத்திற்கு. இலங்கை மருத்துவ சங்கத்தில் பதிவு செய்யப்பட்ட சான்றிதழ் வைத்திருக்கும் மருந்தாளர் தேவை. சம்பளம் நேரில் பேசி தீர்மானிக்கப்படும். யாழ்ப்பாணத்தில் இருப்பவர்களும் விண்ணப்பிக்கலாம்.

077 734 7578 (CS 20931B) (3/6)

## வேலை வாய்ப்பு (City Medicals)

1. **Counter Staff** (விற்பனை உதவியாளர்கள்) மருந்து தொடர்பான முன்னனுபவம் இருப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
2. **Data Entry Operator** க.பொ.த உயர்தரம் சித்தியடைந்திருத்தல், கணினி அறிவு சம்பளம் பேசி தீர்மானிக்கப்படும்.

(CS 20931A) (3/6) 077 734 7578

## வேலை வாய்ப்பு

யாழ்ப்பாணம் மண்டைதீவுப் பகுதியில் உள்ள பண்ணை ஒன்றிற்கு முழு நேர உதவி முகாமையாளர் தேவை. கணக்கியல் தெரிந்தவராகவும், கணினி சார்ந்த அறிவு உள்ளவராகவும், சாரதி அனுமதி உள்ளவராகவும், பண்ணையில் தங்கி நிற்கக் கூடியவராகவும், நிரந்தரமாக வேலை செய்யக் கூடியவராகவும் இருக்கவேண்டும். அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். தகைமையுடையோர் சுயவிபரக்கோவையை பெயர் மற்றும் வதிவிட விபரங்களுடன் **0777845566** எனும் இலக்கத்திற்கு whatsup மூலம் அனுப்பவும். (CS 20945) (3/6)

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் இருபாலையில் 06 பரப்பு (நிலப்பரப்பு) காணி விற்பனைக்கு உண்டு.**

- பருத்தித்துறை வீதியில் இருந்து 1KM தூரத்தில்
- 2 பரப்பாக (நிலப்பரப்பு) பிரிக்கப்பட்ட நிலையில்.
- **BH Lane** விக்கினேஸ்வரா சனசமூக நிலையம் அருகாமையில்
- 18 அடி பாதையுடன் நல்லசூழல் நன்னீர் ஊற்று நிலம்
- யாழ்.நகரிலிருந்து 4Km தூரம்
- 1 பரப்பின் விலை (600000/=) ரூபா ஆறு லட்சம்
- பார்வையிடும் நேரம் காலை 9.00 தொடக்கம் 6.00 மணி வரை

0772880152
0771488348

## பணியாளர் தேவை

உதிரிப்பாக வியாபார நிலையத்திற்கு சாரதி, விற்பனையாளர், கணக்காளர் (பெண்) தேவை. 20 முதல் 35 வயதுக்கு உட்பட்டவர்கள் விரும்பத்தக்கது. மானிப்பாய் பிரதேசத்தை அண்டியவர்கள் விரும்பத்தக்கது. (cs20868) (2.6)

071 058 1725

## காரைநகர் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம் வருடாந்த பொதுக்கூட்டமும் புதிய நிர்வாக தெரிவும்

காரைநகர் இந்துக்கல்லூரி பழையமாணவர் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டமும் புதிய நிர்வாக தெரிவும் **எதிர்வரும் (09.10.2022) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு காரைநகர் இந்துக்கல்லூரி நடராசா ஞாபகார்த்த மண்டபத்தில் இடம்பெறவுள்ளது**. அனைத்து பழைய மாணவர் சங்க அங்கத்தவர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

செயலாளர்,
பழைய மாணவர் சங்கம்,
காரைநகர் இந்துக் கல்லூரி.
(cs 20879) (2.6)

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டையில் 09 பரப்பு (நிலப்பரப்பு) காணி விற்பனைக்கு.**

- நான்கு பரப்பாகவும், இரண்டு பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
- யாழ்ப்பாணம் காரைநகர் செல்லும் பிரதான வீதி (காப்பெற் வீதி) முகப்புடன்.
- 784 இலக்க பாதை போக்கு வரத்து பேரூந்துகள் அதிகம் செல்லும் வீதி.
- பொன்னாலை ரவுண்டப் போட் சந்தியிலிருந்து 1 KM தூரத்தில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாண கல்லூரி (Jaffna College) இருந்து 1 KM தூரத்தில்.
- ஒரு பரப்பின் (நிலபரப்பு) விலை $1\frac{1}{2}$ லட்சம் 150,000/= மட்டும்.
- 20 அடிப் பாதையுடன்

தொடர்பு: 077 911 6983
074 272 0028

## காணி விற்பனைக்கு

நாவலர் வீதியில் உள்ள தேசிய சேமிப்பு வங்கிக்கு முன்னால் உள்ள ஒழுங்கை (மனோகரா சந்திக்கும் கஸ்தூரியார் நாவலர் வீதி சந்திகும் இடையில்) அமைந்துள்ள 01 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. (cs20868) (2.6)

077 956 0005, 075 506 9638

## காணி விற்பனைக்கு உண்டு

**நாவற்குழி புகையிரத நிலையத்தில் இருந்து யாழ்ப்பாணம் செல்லும் வீதியில் இருந்து வடக்குப்பக்கமாக 300M தூரத்தில் வீடு கட்டக்கூடியதும், தியான இல்லம் அமைக்க ஏற்றதுமான அமைதியான சூழலில் காணி விற்ப்பனைக்கு உண்டு.**

**12 அடிப்பாதையுடன்**

தொடர்பு- 077 602 1799

## வேலை வாய்ப்பு

நெல்லியடி வண்ணமயில் புடைவைக் கடைக்கு ஆண் / பெண் விற்பனை உதவியாளர்கள் தேவை. சுயவிபரக் கோவையுடன் நேரில் வரவும். (CS 937) (3/6)

**வண்ணமயில்**
**மத்திய மகா வித்தியாலய வீதி**
**நெல்லியடி. 077 805 2735**

## பணியாளர்கள் தேவை

**யாழ்நகரில் இயங்கும் பிரபல முன்னணி நகைவியாபார** நிலையத்திற்கு பின்வரும் பணியாளர்கள் தேவை.

- **கணக்காளர்:**
  A/L வர்த்தக துறையில் படித்த கணினி அறிவுடைய ஆண்/பெண், முன் அனுபவம் விரும்பத்தக்கது.
- **கணினி தரவு பதிவாளர்** (Data Entry Operator):
  (ஆண் / பெண்)
- **விற்பனை உதவியாளர்** : (ஆண் / பெண்)
- **சிட்டை எழுதுனர்:**
  வடிவான கையெழுத்து உடையவராக (ஆண் / பெண்)

சுயவிபரக் கோவையுடன் திங்கள் முதல் சனிக்கிழமை வரை மு.ப. 10.00 மணிமுதல் பி.ப. 4.00 மணிவரை நேரில்வரவும்.

**நியூ லலிதாஸ் ஜுவல்லறி**
**இல.30,32, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**
**077 224 5511**

## வீட்டுடன் காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் பெருமாள் கோயிலடிக்கு அண்மையில் யாழ்.பாடி வீதியில் அமைந்துள்ள 2 1/4 பரப்புக்காணியுடன் வீடும் விற்பனைக்கு உண்டு. (CS 46719) (3/6)

077 900 3780

## தேவை

கொழும்பில் உள்ள மருத்துவர் வீடொன்றில் தங்கியிருந்து குழந்தைகளை பராமரிப்பதற்கும் சமையல் செய்வதற்கும் அனுபவமுள்ள பெண் தேவை. சம்பளம் பேசி தீர்மானிக்கப்படும். (cr.38119) (2.6)

076 128 3990

## காணி விற்பனைக்கு

யாழ். மாநகரசபை எல்லைக்குள் யாழ்நகரில் இருந்து 2 km தொலைவில் அராலி வீதியில் காணிகள் விற்பனைக்கு உள்ளன. (cs.20907) (2.6)

077 379 1633

## விற்பனைக்கு

கண்டியில் முதிரை மரக்குற்றிகள் விற்பனைக்குண்டு.
உடன் தொடர்புகொள்ளவும்.

(cs 20889) (2.6) 071 254 9955

## விற்பனைக்கு

பாவித்த கூரை தகரம் அமானா சீற் (மொத்தம்) விற்பனைக்கு 6 அடியிலிருந்து 20 அடிவரை

077 336 3766 யாழ்ப்பாணம்

## நீர்க்கசிவு பிரச்சினைகளுக்கு நிரந்தர தீர்வு

- மழை காலங்களில் உங்கள் கட்டடங்கள், வீடுகள், கோவில்களில் ஏற்படும் நீர்க்கசிவினைத் தடுப்பதற்கு.
- வட மாகாணத்தில் முதன் முதலில் 12 வருடங்களுக்கு முன் அறிமுகம் செய்தவர்கள்
- 10 வருட உத்தவாதத்துடன் நிரந்தரமாக சீர்செய்யப்படும்.
- உத்தரவாதம் தரும் பொழுது நிறுவனத்தின் நம்பகத்தன்மையை ஆராய்ந்து பார்க்கவும்

1 சதுர அடி 150/= இல் இருந்து

FINEX
இரசாயனப் பொருள்களை விலைக்கழிவுடன் பெற்றுக்கொள்ளலாம்

**North and East Engineering**
**55 Stanly Road, Jaffna, Srilanka.**
**021 222 2363, 077 524 4177, 077 232 3000** (cs 20921) (2.6)

## பணிப்பெண் தேவை

யாழ். திருநெல்வேலியில் அமைந்துள்ள சிறிய நடுத்தர குடும்பம் ஒன்றிற்கு வீட்டில் தங்கியிருந்து பணிபுரிய பணிப்பெண் தேவை. (CS 20932) (3/6)

தொடர்புகளுக்கு : 077 232 0354

## வேலையாள்கள் தேவை

தோட்டம், பண்ணை பராமரிப்பாளர்-1, காவலாளி - 1, சமையலாளர் - 2, கொத்து ரொட்டி, பிறைட்ரைஸ், சிற்றுண்டி தயாரிப்பாளர் 1 வேலை செய்யக்கூடிய முதியவர்களும் விண்ணப்பிக்கமுடியும். (CS 20932) (3/6)

வாருங்கோ விருந்தகம், A9 வீதி, முகமாலை.
077 711 0329, 074 070 5066



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 25.09.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Registered as a Newspaper

நல்லூரின் வீதியில் நடந்தது யாகம்
நாலுநாள் ஆனதும் சுருண்டது தேகம்
தியாகத்தின் எல்லையை மீறிய பிள்ளை
திலீபனைப் பாடிட வார்த்தைகள் இல்லை

# சஞ்சீவி

மலை 33: வள்ளுவர் ஆண்டு : 2053 புரட்டாதி 8 ஞாயிற்றுக்கிழமை (25.09.2022) சிகரம் : 117



குரலெடுத்ததோர் குயில் படுத்தது
குமுறி நின்றதோர் புயல்படுத்தது
தரமறுத்திடும் உரிமை பெற்றிட
தன்வயிற்றிலே போர் தொடுத்தது

உரம் எழுந்தனி தடை உடைக்குமா?
உயிர் விரயமும் இது நடக்குமா?
வரமறுப்பவர் வருகை கூடுமா?
வலைவிரித்தவர் படைகள் ஓடுமா?

அரிசி கொண்டொரு படகு வந்தது
அதைத் தொடர்ந்து செஞ்சிலுவை வந்தது
வரிசை வரிசையாய் கவசவாகனம்
வந்து வந்தெமை உரிசை பார்த்தது

படகு வந்து வாய்க்கரிசி போட்டது

நெஞ்சில் ஆடிடும் கனவு மாளுமா?
நினைவு இழந்திடும் பிஞ்சு வீழுமா?
அஞ்சி வாழ்ந்தவர் அரசில் ஏறவா?
அனலில் ஆடிய வேங்கை சாகவா?
நஞ்சு தின்றிட அஞ்சிடாதவன்
நல்லை வீதியில் பாடை ஏறவா?

இங்கு ஓர் மலர் வாடுகின்றதே
இதயநாடி ஒடுங்குகின்றதே
தங்கமேனியைச் சாவு தின்னுதே
தணலில் ஆடிய மேனி சோருதே

பொங்கி நின்றவன் பேச்சடங்குதே
பொழுது காயுதே பொழுது காயுதே
வந்து பாரடா வந்து பாரடா
வாட முன்னொரு சேதி கூறடா

**- புதுவை இரத்தினதுரை**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

**புதுமையும் எழிலும் பொலிவும் பல்சுவை வார இதழ்**

சஞ்சீவி
25 செப்ரெம்பர் 2022



# திலீபனுக்குள் ஒரு பார்த்தீபம்

எவராலும் நினைத்தே பார்க்க முடியாத, ஒரு துளி நீர் கூட அருந்தாது தம்மை வருத்தி, அகிம்சைப் போரை முன்னெடுத்து ஆகுதியான திலீபனை எல்லோருக்கும் ஒரு போராளியாகவே தெரியும். ஆனால் திலீபனுடன் நெருங்கிப் பழகிய மூத்த ஊடகவியலாளர் ஒருவர், அதே திலீபனுக்குள் ஒளிந்திருந்த பார்த்தீபன் என்ற சிறுவனை வெளிக்கொணர்கின்றார்.

○ அனஜித்

அது அறிமுகமற்ற ஒருவருடனான புதியதும், முதலாவதுமான சந்திப்பாக இருக்கவில்லை என்பது எனக்கு நன்றாக நினைவில் உள்ளது. வீணான கதைகளோ,விமர்சனங்களோ,எதுவுமன்றி ஒரு அதீத தேடல் உணர்வுடன் பல விடயங்களையும் அறிந்துகொள்ள விரையும் ஆர்வம் அவனிடம் இருந்தது.

பல விடயங்கள் பற்றியும் பேசினான்.

“அண்ணா உங்களைச் சந்தித்தது சந்தோஷம்... அடிக்கடி வந்து தொந்தரவு செய்வேன்” என்று சிரித்தபடியே கூறியவன். “தேவையில்லாமல் வந்து கரைச்சல் தரமாட்டேன்” என்றான். மேசையில் கிடந்த புத்தகக் குவியலைப் பார்த்துவிட்டு “புத்தகங்களைப் பார்க்கலாமா?”என்றான். நான் தலையாட்டினேன். அவன் புத்தங்களுடன் உறவாட ஆரம்பித்து விட்டான்.

புறப்படும் போது கேட்டான் “அண்ணா உங்களிடம் ராணி கொமிக்ஸ் இல்லையா?”என்று.

அந்தக் கணத்தில் தீலிபனுள் மறைந்திருந்த ‘‘பார்த்தீபன்’’என்ற சிறுவனை நான் இனம் கண்டு கொண்டேன்.

★★★★

அதன்பிறகு எத்தனை சந்திப்புக்கள் ,எவ்வளவு உடையாடல்கள், எத்தனை பிரச்சினைகள்.

திலீபனுக்கும் எனக்குமான உணர்வுபூர்வமான கருத்துப் பரிமாற்றங்கள் மரியாதையுடன் கூடிய முதல் அறிமுகம், உரிமையுடன் கூடிய ஒரு உறவாக இறுதிவரை தொடர்ந்தது. பல தடவைகள் திலீபனாகவும் சில தடவைகள் பார்த்தீபனாகவும் அவன் எனக்குத் தன்னை அடையாளப்படுத்தியே வந்துள்ளான்.

‘ராணி’ கொமிக்ஸ் படிப்பதில் பெருவிருப்புடன் இருந்தவன் பார்த்தீபன். ஆனால் திலீபன் அதற்கு நேர்மாறான இன்னொரு வடிவமாக இருந்தான். போராட்டம் அரசியல்,விடுதலை,சுதந்திரம் என்ற விடயங்கள் குறித்த அனைத்து நூல்களையும் துழாவுவான். அதற்குள் ஊடுருவுவான். அவை தொடர்பான அவன் கேட்கும் கேள்விகள் அவனது சுய தேடலை இனங்காட்டின. இது அவனுக்கும் எனக்குமான ஒரு உரையாடல்.. ‘‘திலீபன்... நீ ராணி கொமிக்ஸையும் விழுந்து விழுந்து படிக்கிறாய்,சேகுவேராவையும் படிக்கிறாய்.. இது பெரிய முரணாக இருக்கவில்லையா?” “ஏன் அண்ணா.... ராணி கொமிக்ஸ் சிறுவர் புத்தகம் என்று பார்க்கிறீர்களா?அதைப் படிக்கேக்கை மனம் உற்சாகமாகிறது. சோம்பல் பறந்து போகிறது. ஏதாவது புத்திசாலித்தனமாகச் சாதிக்கத் தோன்றுகிறது. மற்றவை ஆழமாக சிந்திக்க வைக்கின்றன.”

★★★★

திலீபத் தீபம் சுடர்விடத் தொடங்கி மூன்று தசாப்தங்களுக்கு மேலாகிவிட்டது. அது அணையாத, எவராலும் என்றைக்குமே அணைக்க முடியாத, எவராலும் அருகே அணுகவும் முடியாத தமிழினத்தின் ஆத்ம தீபம் என்பதை அறிவிலிகளும் உணர்விலிகளும் உணரார்.

அது தன்னைத் தானே சுயம்புவாக, எரியூட்டி ஒளிரச் செய்துகொண்ட தீபம். அது தமிழினத்தின் அடிமை இருள் விலகும்வரை, சுதந்திர ஒளி பரவும் வரை ஒளிர்ந்துகொண்டே இருக்கும். அதனை அதிகார வெறித்தனத்தால் மறைக்க முற்படுவது சூரியஒளியை கைகளால் மறைக்க நினைக்கும் செயற்பாடாகவே அமையும்.

‘திலீபன்’, சகாப்தத்தில் அதிகார வெறிகொண்டு பதவிக் கதிரைகளில் அமர்ந்தபடி, ஆர்ப்பரித்து ஆரவாரம் செய்து கொண்டிருந்த உள்நாட்டவரும் சரி,அயலகத்தவர்களும் சரி முகவரி இழந்தவர்களாக மறக்கப்பட்டு தேடுவாரற்றும் போய் விட்ட நிலையில் திலீப தீபம் மட்டும் திக்கெட்டும் ஒளிர்கின்றதே...!

சட்டத்தாலும், அதிகார ஆணைகளாலும், திலீபன் நினைவுகளுடன் தீபமேற்றி அஞ்சலிப்போரை மட்டுமே மிரட்டவும் தடுக்கவும் முடியலாம். ஆனால் தன்னைத்தானே விடுதலைக்கான வழிகாட்டும் தீபமாக ஒளிவிட்டுக்கொண்டு , அணையா விளக்காக சுடரும் ‘பார்த்தீபம்’வல்லாதிக்க மேலாதிக்க சக்திகளுக்கு ஒரு போதுமே கட்டுப்படாது.

ஒவ்வொரு மனிதநேயனும், சுதந்திரப்பிரியரும் ,விடுதலைப் பயணியும் தமிழ் உணர்வாளனும் கண்களை மூடினால் அவனுள்ளே திலீபச் சுடர் ஒளிர்ந்து கொண்டே இருக்கும்.

ஒரு சில அதிகார சக்திகளால் ஒரு தனிமனிதனின் ஆன்ம பலத்தை அடக்கி விடமுடியவே முடியாது. அது ‘பாரொடு விண்ணாக’பரந்த சோதிப்பிழம்பைப் போன்றது.

அது தமிழினத்துக்கு காலம் கையளித்த அணையா ஒளி விளக்கு.....

அந்த மகத்தான சக்தியை - திலீப தீபத்தை நினைக்கும் போதெல்லாம் அவன் குறித்த ‘பார்த்தீப’ பதிவுகள் மனதில் எழவே செய்கின்றன.

அந்த மகா ஆத்மாவுள் மறைந்திருந்த. மனித ஆத்மா பதிந்து விட்டுச் சென்ற எவ்வளவோ செய்திகள் மேலெழும்போது, திலீபனை நினைவில் வைத்துவிட்டு பார்த்தீபனை மறந்துவிட்டீர்களா என்று அவன் கேட்பது போலிருக்கிறது.

அவனோடு பார்த்து ,பேசி ,பணியாற்றி ,பழகிய நாள்கள் வெறுமனே மூன்றாண்டு காலப்பகுதிக்குள்ளே அடங்கும். அந்தக் காலப்பகுதியானது எவ்வளவு வேகமாகவும், இலக்கு நோக்கியும் , அதே சமயம் அர்த்தமுள்ளதாகவும், மறக்கவே முடியாததாகவும் அமைந்திருந்தது என்பதை இப்போது நினைக்கப் பிரமிப்பாக இருக்கிறது.

★★★★

*1985 களின் நடுப்பகுதி .*

ஒருநாள் எனக்குத் தெரிந்த ஒரு இளைஞர் , ஒழுங்காகச் சீவி விடப்படாத அடர்ந்த தலைமுடி, அகன்ற ‘பிரேமுடன்’கண்ணாடி அணிந்த, முகம், மெலிந்து உயர்ந்த தோற்றம், தொளதொளப்பாக அரைக்கை வரையும் மடித்திருந்த சட்டை, எதனையோ தீவிரமாகத் தேடும் கண்கள் போன்ற அம்சங்களுடன் தோன்றிய இன்னொரு இளைஞனை அழைந்து வந்து ‘‘அண்ணா இவர்தான் நான் சொன்ன திலீபன்”என எனக்கு அறிமுகப்படுத்திவிட்டு, “ அண்ணாவுடன் கதைச்சுக்கொண் [illegible] விடு [illegible] டார்.

எனக்கு அருகில் வந்த அந்த இளைஞர் “ஏதோ எழுதிக்கொண்டிருக்கிறீர்கள்...நாங்கள் குழப்பிவிட்டோமா தெரியவில்லை. மன்னிக்கவும்”என்றார்.

“.... இல்லை .... நீங்கள் செல்லுங்கோ தம்பி”என்றேன்.

அவர் உடனே....“நான் திலீபன்..”என்றே தன்னை அறிமுகப்படுத்திவிட்டு, என் மூலமான தங்கள் தேவைகளையும் விபரித்தான். நான் மௌனமாக அவன் செல்வதைக் கேட்டுவிட்டு “ திலீபன் என்பது தான் உங்கள் சொந்தப் பெயரா?”என்றேன்.

“இல்லை அண்ணா, எனது சொந்தப் பெயர் பார்த்தீபன்..ஏன் திலீபன் நல்ல பெயரில்லையா?” என்றான் சிரித்தபடி. ‘‘இல்லை எனக்கு பிடித்த பெயர்..குமுதத்தில் வெளி வந்த ஜாவர் சீத்தா ராமனின் தொடர்கதையான ‘உடல் பொருள் ஆனந்தி ‘ என்ற கதையின் நாயகன் பெயர் திலீபன். அதைவிடவும் நம் நாட்டுக் கவிஞர் சில்லையூர் செல்வராசன் எழுத்தாளர்-மல்லிகை டொம்னிக் ஜீவா ஆகியோரின் பிள்ளைகளுக்கும் பெயர் திலீபன் தான்..”என்றேன்.

அவன் சிரித்துக்கொண்டே “எல்லாத்தையும் ஞாபகத்தில் வைத்திருக்கிறீர்களே...!” என்றவன் தொடர்ந்து பல விடயங்களைப் பற்றி பேசினான். தர்க்கித்தான். விளக்கம் கேட்டான். அவை குறித்த தனது எண்ணங்களையும் பரிமாறினான்.

“கொமிக்ஸ் உடலைப் பலப்படுத்துகிறது. பெரிய புத்தகங்கள் அறிவை பலப்படுத்துகின்றன என்று தான் நான் நினைக்கிறேன்...” என்று தன் விளக்கத்தையும் சொன்னான் திலீபன்.

எப்படி ஒருவனால் பார்த்தீபனாகவும் அதே சமயம் திலீபனாகவும் இயங்க முடிகிறது என்பதை அவன் சுலபமாக இனங்காட்டிய சம்பவம் இது.

★★★

மருத்துவமனையில் ஒரு சிறு சத்திர சிகிச்சைக் குள்ளாகியிருந்த சமயம் அவனைப் பார்க்கச் சென்றிருந்தேன். கையில் பழவகைகள் அடங்கிய ஒரு பை. கட்டிலில் படுத்திருந்தான் . என்னைக் கண்டதும் வழமையான அதே சிரிப்புடன் வரவேற்றான் ... பையை அருகே வைத்தேன்.

“என்னண்ணா கொண்டு வந்திருக்கிறாய்?”

“கொஞ்சம் பழங்கள் இருக்கு”

“சீ!விசரே எனக்கேன் பழங்கள்? கொஞ்சம் கண்டொஸ்... கொண்டுவந்திருக்கலாமே....”

நான் அதிர்ந்து போனேன்..

நான் திலீபனைத் தான் பார்க்கச் சென்றேன். ஆனால் அங்கு என்னோடு பேசியது..ராணி கொமிக்ஸ் வாசகனான சிறுவன் பார்த்தீபன்தான். புரிந்து கொண்டேன். உடனே வெளியே போய், ‘‘கண்டொஸ்’களுடன் திரும்பினேன்.

★★★★

ஒரு சமயம் என் வீட்டுக்கு, ஏதையோ பற்றிக் கதைக்க வந்திருந்தான் . வாசலில் எனது பிள்ளைகள் இருவரும் விளையாடிக்கொண்டிருந்தனர். வந்திறங்கியவன் வாசலில் இருந்த அவர்களுடன் தானும் ஒருவனாக அமர்ந்து விளையாட ஆரம்பித்து விட்டான்.


எனது மகன் கீழே கிடந்த விளையாட்டுத் துப்பாக்கியை எடுத்து திலீபனிடம் கொடுத்து அங்கே கிடந்த ‘நாய் பொம்மை ஒன்றைக்காட்டி”மாமா.. அதைச் சுடு’’என்றான்.

உடனே திலீபன் “நாய்க்குட்டி பாவம் .அதைச் சுடக்கூடாது..”என்ற படி துப்பாக்கியைக் கீழே போட்டுவிட்டு நாய்க்குட்டிப் பொம்மையை தடவிக்காட்டினான்.

அந்தச் சமயத்தில் தீலிபனை அங்கு நான் காணவில்லை பார்த்தீபனையே என்னால் தரிசிக்க முடிந்தது. ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திலீபனின் கனவு காத்திருக்கிறது



○ ராஜன்



அவரை முதன் முதலில் சந்தித்து உரையாடியது சுபாஸ் வீட்டில் தான்.

அன்று திலீபன் என்னை அழைத்து சென்று சுபாஸ் வீட்டு தலைவாசலில் இருந்த சாய்மனைக் கதிரையில் இருந்து கொண்டு, செய்யப் படவேண்டிய வேலைகளை எப்படிச் செய்ய வேண்டும் என்று சொல்லித் தந்ததும், பின்னர், நண்பர்கள் சுபாஸ், நவம், சுகு, விக்கினா, நகுலேஸ், அஜித், குட்டி சிறி என்று எங்கள் நண்பர்கள் வட்டம் பெரிதாகி திலீபனுடன் வேலை செய்யத் தொடங்கியதுமாக நாட்கள் நகர்ந்தன.

திலீபன் எப்போ எங்களை இந்தியா பயிற்சிக்கு அனுப்புவார் என்ற எண்ணத்துடன் திலீபன் வரவை எதிர்பார்த்து மேஜர் சுபாஸ் வீட்டு தலைவாசலில் எல்லோரும் காத்திருப்போம். தலைமறைவாக அரசியல் பணி செய்த காலம் அது. திலீபன் நினைத்த நேரம் தான் சந்திப்பு நிகழும்.

அமைப்பில் இணையும் தவிப்பில் இருந்த நண்பர்களாக எங்களுக்குள் சில விடயங்களைக் கதைப்போம். அவற்றில் ஒன்று இந்தியா சென்று பயிற்சி பெற்று, செல்லக்கிளி அம்மான் வீரமரணத்தின் பின் ஒட்டிய போஸ்டரில் நின்றது போல் எஸ்.எம்.ஜி துப்பாக்கியுடன் நின்று நாங்களும் படம் எடுக்க வேண்டும், மற்றது மானிப்பாயில் ஜூலை மாதத்தில் திருப்பதி புத்தக சாலையின் வாசலில் இராணுவத்தால் படுகொலை செய்யப்பட்ட மக்களுக்கும், எங்கள் நண்பர்களுக்காகவும் அதே இராணுவத்தை திருப்பி அடிக்க வேணும். இவையே அப்போதைய எங்களின் உள்ளக்கிடக்கைகளாக இருந்தன.

திலீபன் "இந்தியாவுக்கு இந்தக் கிழமை அனுப்புகிறேன்" என்று கூறி பல மாதங்கள் கடந்து விட்டன. ஒரு நாள் அவர் வரவை எதிர்பார்த்து சுபாஸ் வீட்டில் எல்லோரும் காத்திருந்தோம் . வழமை போல் அன்றும் வந்து சாய்மனைக் கதிரையில் அமர்ந்த திலீபனை நோக்கி, "எப்போ என்னை அனுப்ப போகிறியள்?" என்று அஜித் கேட்டான். கேட்ட கையோடு மேசையில் இருந்த கத்திரிக்கோலை எடுத்துக் கொண்டு சாய்மனை கதிரையில் படுத்திருந்த திலீபனை பார்த்து "இந்தமுறை பேய்க்காட்டினால் குத்துவன்" என்று கோபமாக கிட்ட வந்தான். நாங்கள் எல்லோரும் பாய்ந்து அவனைப் பிடித்து கத்தரிக்கோலைப் பறித்துக் கொண்டோம். அடுத்து என்ன நடக்குமோ என்று தெரியாத மயான அமைதி தலைவாசலில் குடி கொண்டது.

அமைதியாக அஜித்தை அழைத்து புத்திமதி கூறிவிட்டு "அடுத்த்முறை கட்டாயம் அனுப்புவேன். யோசிக்க வேண்டாம். உங்கள் உணர்வு எனக்குப் புரிகிறது" என்று ஆறுதல் கூறி விடைபெற்றார் திலீபன் . அதன் பின் நாங்கள் அஜித்தை "நீ மொக்கு வேலை பார்த்து விட்டாய் "என்று வாய்க்கு வந்தபடி ஏசினோம். ஆனால் அடுத்த முறை தலைவாசல் சந்திப்பில் அஜித்தை காணவில்லை. திலீபன் எங்கள் குழுவில் அவனை மாத்திரம் இந்தியா அனுப்பி விட்டார்.

எங்கள் குழுவுடன் கருத்து முரண்பட்டுக் கொண்ட நண்பன் விக்கினா ரெலி என்ற இயக்கத்தில் இணைந்து விட்டான். சுகு அதிரடிப் படை என்று ஒரு இயக்கத்தை ஆரம்பித்து விட்டான். குட்டிச்சிறி, நான் ,சுபாஸ் ஆகியோரே திலீபன் பின்னால் நம்பிக்கையோடு திரிந்தோம். நவம் ரெலோ இயக்கத்துக்குச் சென்று விட்டார். எங்கள் நண்பர்கள் வட்டம் சுருங்கத் தொடங்கியது நகுலேஸ் வெளிநாடு சென்று விட்டான். அந்த நாட்களில் நவாலியில் களையோடை அம்மன் கோவிலில் இருந்த ஐயாவுடன் கதைத்து விட்டு சாப்பாடும் வேண்டி சாப்பிடுவதும் வழக்கம். இப்படி ஒரு நாள் அங்கிருந்து சைக்கிளில் வெளிக்கிட்டு ,சிறு கறுப்பு சூட்கேஸ் ஒன்றுடன் வட்டுக்கோட்டை வீதியில் ஏறி நவாலி சேர்ச்சடி என்ற இடத்துக்கு நான், சுபாஸ், நவம், மற்றும் திலீபனும் அங்குள்ள நண்பர்களான செல்லக்கிளி, மற்றும் ரவியை சந்திப்பதற்காகச் சென்றோம். சேர்ச் வாசலில் உள்ள பஸ் தரிப்பிடத்தில் வைத்து அவர்களுடன் திலீபன் கதைத்துக் கொண்டு நின்றார். எதிர்பாராமல் அந்த இடத்துக்குச் சமீபமாக வந்தது ஒரு பொலிஸ் ஜீப் . ஜீப்பைத் தூரத்தில் கண்டதுமே மெதுவாகக் கலைந்து செல்லுமாறு எங்களுக்குக் கூறிவிட்டு தான் பஸ்ஸுக்குக் காத்திருக்கும் பயணிமாதிரி நின்று கொண்டார் திலீபன் . நானும் சுபாசும் எதிரில் உள்ள ஒழுங்கை ஒன்றில் ஒளிந்திருந்து பார்த்துக் கொண்டிருந்தோம்.

ஜீப் வண்டி சொல்லி வைத்தமாதிரி பஸ் தரிப்பிடத்தின் அருகில் வந்து நின்றது. பொலிஸார் இறங்கி வந்து திலீபனுடன் கதைத்துக் கொண்டு நின்றார்கள். திடீர் என்று தீலிபன் தனது கையிலிருந்த சூட்கேஸால் சுழற்றி அடிப்பது தெரிந்தது. தொடர்ந்து துப்பாக்கிச் சத்தம் கேட்டது.

நாங்கள் இருவரும் ஒழுங்கையால் ஓடி விட்டோம். அன்று கண்முன்னால் அந்த அமைதியான திலீபனின் துணிவையும், தந்திரத்தையும் கண்டோம். பொறுமை, செயல்திறன், வீரம், சமயோசித புத்தி என பல திறன்களை ஒருங்கே கொண்ட திலீபன், தன் இனத்தின் உறுதியை உணர்த்த உண்ணாநோன்பிருந்து,உயிர் துறந்தான்.

திலீபனின் வழங்கிய பயிற்சி மற்றும் வழிகாட்டலுடன் வளர்ந்த பலர், 35 ஆண்டுகளின் பின்னரும் உலகெங்கும் சிதறிக் கிடக்க திலீபனின் கனவும், சொந்த மண்ணும் இன்னமும் அந்த மக்கள் புரட்சிக்காகக் காத்திருக்கிறது! ■

## வயிற்றில் தீ வளர்த்த வலியனே...

விடுதலைக்காய் நாம் கொடுத்த விலை அதிகம்
தியாகத்தின் உயரத்தில் நீ இமயம்
அஞ்சாமல் நல்லூரில் பசித்தீ வளர்த்தாய் அன்று_நீ
எங்கள் விடுதலைக்காய் வீசி நின்ற புயல் காற்று

வைகறை எழுந்தாய்
குளித்தாய்.
குறிப்பெழுதினாய்

சாவுக்கு தானா?
அண்ணா அன்று_நீ
சண்டையிட்டாய்

நல்லூரின் வெள்ளை மணல்வீதியிலே
கூட்டி வந்தோர் உன்னை கொலுவிருத்தினர்

புல்லரித்துப்போனதெம்பூமி

நீ படுத்தாய்
எழுந்தாய்

பக்கத்திருந்தோரைபார்த்து -ஏதோ
சொல்லிச்சரிந்தாய்.

வயிற்றில் தீ வளர்த்த வலியனே...
அன்று கயிற்றுக்கொடிபோல
கருகிக்கிடந்தாயே
மறப்போமா அந்த நாட்களை அண்ணா...
ஆ..வென்று வந்துன்னை சாவு
விழுங்கியபோது இந்தபாவிகளும்பார்த்துக்கொண்டிருந்தன

உந்தன் "நாவு" அன்னத்தில் ஒட்டிய போது
வெள்ளை மணல் வீதி விம்மியது
சூழ்ந்திருந்த சுற்றம் தேம்பியது

இமயத்தின் மாயவலை நீ
கிழித்தாய்
எங்கள் இதயங்கள் மீது தடம் நீ பதித்தாய்
இளஞ்சந்ததிக்கு உணர்வேற்றி
அன்று நீ சரிந்தாய்
தமிழ உணர்வுடன் இருக்கும்வரை நீ உயிர்ப்பாவாய்..


யோ.சாதுரியன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவு நாட்களுக்கு உரிமை கோருதல்

○ நிலாந்தன்



நினைவு கூர்தலுக்கான ஒரு பொதுக்கட்டமைப்பை குறித்த உரையாடல்கள் பல ஆண்டுகளுக்கு முன்னரே தொடங்கிவிட்டன. ஆனால் ஒரு பொதுவான கட்டமைப்பை உருவாக்கும் விடயத்தில் தமிழ்ப்பரப்பில் இருக்கும் அரசியல் செயற்பாட்டாளர்கள் பொருத்தமான வெற்றிகளை இதுவரை பெற்றிருக்கவில்லை. அனைத்து நினைவு கூர்தல்களுக்குமான ஒரு பொதுக் கட்டமைப்பை ஏன் உருவாக்க முடியவில்லை?

ஏனென்றால் ஒரு பொதுவான நினைவு தினம், தமிழ்மக்கள் மத்தியில் இல்லை. ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்ட ஒவ்வொரு அமைப்பும் தனக்கென்று தனித் தனியாக நினைவு தினங்களை வைத்திருக்கின்றன. இதில் ஒரு இயக்கம் தியாகி என்று கூறுபவரை மற்றொரு இயக்கம் துரோகி என்று கூறும் நிலைமையும் உண்டு. ஒரு இயக்கத்தால் தியாகியாக கொண்டாடப்படுகிறவர் மற்றொரு இயக்கத்தால் கொலைகாரராக பார்க்கப்படுகிறார். எனவே இயக்கங்களுக்கிடையிலான ஒரு பொதுவான தியாகிகளுக்கான நாளை இன்றுவரை கண்டுபிடிக்க முடியவில்லை. அதை என்றோ ஒரு நாள் கண்டுபிடிக்கும் பொழுதுதான் தமிழ்த் தேசியத்தின் ஜனநாயக இதயம் அதன் முழுமையான செழிப்பை அடையும்.

தியாகிகளுக்கான நாள் மட்டுமல்ல, இனப்படுகொலை நாளில் கூட சர்ச்சைகள் உள்ளன. மே 18 எனப்படுவது தமிழ்மக்களின் ஆயுதப் போராட்டம் முடிவுக்கு கொண்டுவரப்பட்ட நாள். எனவே அந்த நாளை இனப்படுகொலை நாளாக அனுஷ்டிக்கவேண்டும் என்று தமிழ் மக்களில் ஒரு பகுதியினர் கருதுகிறார்கள். ஒரு குறுகிய காலகட்டத்தில் ஒரு குறுகிய நிலப்பரப்புக்குள் அதிக தொகையினர் கொல்லப்பட்டதன்மூலம் ஆயுதப் போராட்டம் தோற்கடிக்கப்பட்ட ஒரு நாள் என்ற அடிப்படையில் அந்த நாளை இனப்படுகொலை நினைவு நாளாக அனுஷ்டிக்கலாம் என்று கருதுபவர்கள் உண்டு. ஆனால் அங்கேயும் சர்ச்சைகள் உள்ளன. அந்த நாளில் புலிகள் இயக்கத்தின் பிரதானிகள் பலர் தம் உயிர்களைத் துறந்தனர் என்ற அடிப்படையில் அதுவும்கூட புலிகள் இயக்கத்தின் நினைவு நாட்களில் ஒன்றுதான் என்று ஒரு வாதம் முன்வைக்கப்படுகிறது.

இந்த அடிப்படையில் பார்த்தால் தமிழ் மக்கள் மத்தியில் உள்ள எல்லாத் தரப்புகளினாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு பொதுவான நினைவு நாளைக் கண்டுபிடிப்பது இப்போதைக்குச் சாத்தியமில்லை. அவ்வாறு ஒரு பொதுவான நினைவு நாள் இல்லாத ஒரு சமூகத்தில், நினைவு கூர்தலுக்காக ஒரு பொதுவான கட்டமைப்பை உருவாக்குவதும் சாத்தியமில்லை. பதிலாக அவரவர் அவரவருடைய தியாகிகளுக்கான நாளை அனுஷ்டிப்பது என்ற அடிப்படையில் நினைவு கூர்தலில் பல்வகைமையை ஏற்றுக் கொள்வதுதான் உடனடிக்கு சாத்தியமான ஒன்று.

மேலும், கடந்த 13ஆண்டுகளாக நினைவுகூர்தல் தொடர்பாக ஏற்பட்ட சர்ச்சைகள் யாவும் விடுதலைப்புலிகள் இயக்கத்தோடு சம்பந்தப்பட்ட நினைவு நாட்கள்தான். விடுதலைப்புலிகள் அல்லாத இயக்கங்களின் நினைவு நாட்களைப் பொறுத்து பெரியளவில் சர்ச்சைகள் இல்லை.

இது எதைக் காட்டுகின்றது என்றால், புலிகள் இயக்கத்தின் மெய்யான வாரிசு யார் என்ற ஒரு போட்டிதான். அல்லது அந்த இயக்கத்தின் வீரத்துக்கும் தியாகங்களுக்கும் யார் உரிமை கோரலாம் என்ற ஒரு போட்டிதான். இந்தப் போட்டி காரணமாகத்தான் கடந்த 13ஆண்டுகளாக நினைவுகூர்தல் தொடர்பாக சர்ச்சைகள் எழுகின்றன.

இதில் பொதுக் கட்டமைப்பை உருவாக்கும் முயற்சிகளில் பெரும்பாலானவை விடுதலைப்புலிகள் இயக்கத்தோடு சம்பந்தப்பட்ட நினைவு நாட்களை அனுஷ்டிப்பதற்கானவைதான். அவ்வாறான ஒரு பொதுக் கட்டமைப்பு இல்லாத ஒரு பின்னணியில்தான் இப்பொழுது மறுபடியும் திலீபனின் நினைவு நாளை முன்னிட்டு அரசியல்வாதிகள் தங்களுக்கிடையே பிடுங்குப்படத் தொடங்கியிருக்கிறார்கள்.

இப்படி ஒரு சர்ச்சை வரும் என்பதனை ஏற்கனவே எதிர்பார்த்த அரசியற் செயற்பாட்டாளர்கள் சிலர் இதில் சம்பந்தப்பட்ட எல்லாக் கட்சிகளையும் அணுகினார்கள். குறிப்பாக இந்த சர்ச்சைகளின் மையமாகக் காணப்படும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் இரண்டு அணிகளையும் அணுகினார்கள். புலிகள் இயக்கத்தின் மூத்த உறுப்பினரான பஷீர் காக்கா இது தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரனோடு உரையாடினார். தான் மட்டக்களப்புக்குச் சென்று கொண்டிருப்பதாகவும் தமது அமைப்பின் பேச்சாளர் சுகாஸுடன் உரையாடும்படியும் கஜேந்திரன் சொன்னார். எனினும், இது தொடர்பாக அக்கட்சியின் உறுப்பினரும் திலீபனோடு நேரடியாகப் பழகியவருமான பொன் மாஸ்டரோடு உரையாடுவது அதிகம் பொருத்தமாக இருக்கும் என்று பஷீர் காக்கா கருதினார் போலும். எனவே அவர் பொன் மாஸ்டரிடம் இது தொடர்பாக உரையாடியிருக்கிறார். எனினும் தமிழ்த் தேசிய மக்கள் முன்ன்ணிக்குள் ஏற்பட்ட உடைவு, நினைவு கூர்தலில் பிரதிபலிப்பதை அவரைப் போன்ற செயற்பாட்டாளர்களால் தடுக்க முடியவில்லை. மாறாக அரசியல்வாதிகள் பஷீர் காக்காவை போன்ற மூத்த செயற்பாட்டாளர்களை அவமதிக்கும் ஒரு நிலைமைதான் உருவாகியது.

முரண்பாடு பொதுவெளியில் வந்த பின்னர்தான் மணிவண்ணன் ஒரு பொதுக் கட்டமைப்பை உருவாக்கினார். முரண்பாட்டின் பின் உருவாக்கப்பட்டபடியால் அது முரண்பாட்டின் ஒரு விளைவாகவே பார்க்கப்படும். மாநகர முதல்வர் என்ற அடிப்படையில் மணிவண்ணன் அதனை உருவாக்கிய போதிலும், அந்தப்பொதுக் கட்டமைப்பு சுயாதீனமானது என்று அதைச் சேர்ந்தவர்கள் கூறுகிறார்கள். அது திலீபன் நினைவு நாட்களை சுயாதீனமாக நினைவு கூரும் என்றும் அவர்கள் கூறுகிறார்கள்.

ஆனால் கஜேந்திரகுமார் அணியைச் சேர்ந்த பொன் மாஸ்டர் ஊடகங்களுக்கு தெரிவித்த கருத்துக்களை வைத்துப்பார்த்தால், தமிழ்த்தேசிய மக்கள் முன்னணிக்குள் ஏற்பட்ட பிளவு திலீபனின் நினைவு நாட்களில் பிரதிபலிக்கிறது என்றே தெரிகிறது. அது மட்டுமல்ல கடந்த 13 ஆண்டுகளில் தமிழ்மக்கள் ஒரு பொதுவான நினைவுகூரும் கட்டமைப்பை உருவாக்குவது எத்துணை சவால்கள் மிகுந்தது என்பதனை நிரூபிப்பதாகவும் அது காணப்படுகிறது. ஆயுத மோதல்களுக்குப் பின்னரான கடந்த 13 ஆண்டுகளில் தமிழ்ச் சமூகமும் அதன் அரசியலும் பண்புருமாற்றம் transformation ஒன்றுக்கு போகமுடியாதியங்குவதையும் அது காட்டுகிறது.

தமிழ்மக்கள் முழு உலகத்தையும் திரும்பிப் பார்க்க வைக்கும் ஓர் ஆயுதப் போராட்டத்தை நடத்திய மக்கள். ஆயுதப் போராட்டம் என்று சொன்னால் சம்பந்தப்பட்ட எல்லாருடைய கைகளிலும் இரத்தம் இருக்கும். ஆயுதம் ஏந்தியவர்கள் மட்டுமல்ல, அந்தப் போராட்டத்தை ஏதோ ஒரு விதத்தில் ஆதரித்தவர்கள் எல்லாருக்கும் அதில் கூட்டுப் பொறுப்பு உண்டு. இதில் என்னுடைய கை சுத்தம், உன்னுடைய கையில் இருப்பது ரத்தம் என்று சொல்லிக் கொண்டிருக்க முடியாது. தியாகி - துரோகி என்ற அளவுகோல்கள் ஊடாக அரசியலைத் தொடர்ந்தும் அணுக முடியாது. நான் தியாகி, நீ துரோகி என்று வகிடுபிரிக்க வெளிக்கிட்டால் சமூகம் என்றைக்குமே ஒரு திரட்சியாக இருக்கமுடியாது. அதாவது தமிழ்மக்களை ஒரு தேசமாக கட்டியெழுப்பவே முடியாது.

இதில் தங்களை தியாகிகளாக காட்டிக் கொள்பவர்கள் அல்லது கடந்த காலத் தியாகங்களுக்கும் வீரத்துக்கும் உரித்து கொண்டாடுபவர்கள் முதலில் அந்த வீரத்தின் தொடர்ச்சியும் தியாகத்தின் தொடர்ச்சியும் தாங்களே என்பதனை நிரூபித்துக் காட்டவேண்டும். அதை நிரூபிக்கும் இடம் நினைவு கூர்தல் அல்ல. மாறாக கடந்த 13 ஆண்டு கால அரசியலில் தமது சொத்துக்களை இழப்பதற்கும் 'ரிஸ்க்' எடுப்பதற்கும் எத்தனை பேர் தயாராக இருந்தார்கள் என்பதிலிருந்துதான் அதை மதிப்பிடலாம். திலீபனை நினைவு கூர்வது என்பது நல்லூரில் இருக்கும் நினைவுத்தூபியில் சிவப்பு, மஞ்சள் கொடியை கட்டுவது மட்டுமல்ல, விளக்குகளை ஏற்றுவது மட்டும் அல்ல, அது அதைவிட ஆழமானது. திலீபனைப்போல தமது அரசியல் இலக்கை அடைவதற்காக உயிரைத் துறக்கத் தயாரான எத்தனை அரசியல்வாதிகள் தமிழ் மக்கள் மத்தியில் உள்ளனர்? ஒருவர் முன்வரட்டும் பார்க்கலாம்? இதுதான் பிரச்சினை. தியாகத்துக்கும் வீரத்துக்கும் உரிமை கோரும் அரசியல்வாதிகள் கடந்த 13ஆண்டுகளாக எத்தனை தியாகங்களைச் செய்திருக்கிறார்கள்? எத்தனை பேர் சட்ட மறுப்பாகப் போராடி சிறை சென்றிருக்கிறார்கள்? எத்தனை பேர் சொத்துக்களை துறந்திருக்கிறார்கள்?

கடந்த 13 ஆண்டுகளில் காணாமல் போனவர்களின் அம்மாக்கள் உண்ணாவிரதம் இருந்திருக்கிறார்கள். அரசியல் கைதிகள் உண்ணாவிரதம் இருந்திருக்கிறார்கள். ஆனால் அவர்களை அரசியல் செயற்பாட்டாளர்கள் சாக விடவில்லை. இவைதவிர அரசியல்வாதிகள் என்று பார்த்தால் யாருமே அந்தளவுக்கு துணியவில்லை.

அதற்காக அரசியல்வாதிகள் சாக வேண்டும் என்று இந்தக்கட்டுரை கேட்கவில்லை. உயிரைக் கொடுத்தது போதும். இனி உயிர்களைப் பாதுகாக்க வேண்டிய காலம். எனவே ஆயுதப் போராட்டத்துக்கு பின்னரான ஓர் அரசியலுக்குரிய பண்புருமாற்றத்துக்கு தமிழ்மக்கள் தயாராக வேண்டும். 'நான் வண்ணாத்து பூச்சி, நீ மசுக்குட்டி (மயிர்க்கொட்டி)' என்று சொல்லிக் கொண்டிருக்க முடியாது. ஏனென்றால் எல்லா வண்ணாத்துப் பூச்சிகளும் ஒரு காலம் மயிர்க்கொட்டிகளாக இருந்தவைதான்.

இந்த விடயத்தில் தமிழ்மக்கள் தென்னாபிரிக்காவிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டும். தென்னாபிரிக்காவில் வெவ்வேறு ஆயுத அமைப்புகளைச் சேர்ந்தவர்கள் மாறி மாறி ஒருவர் மற்றவரை கொன்றிருக்கிறார்கள். பாதிக்கப்பட்டவர்கள் பழிவாங்கும் உணர்ச்சியோடு ஒருவர் மற்றவரைத் தண்டிக்க முற்பட்டிருந்திருந்தால் தென்னாபிரிக்கா தொடர்ந்தும் இறந்த காலத்திலேயே வாழ வேண்டியிருந்திருக்கும். ஒரு புதிய காலத்துக்கு வந்திருக்கவே முடியாது. இதுவிடயத்தில் தென்னாபிரிக்காவை இறந்த காலத்திலிருந்து புதிய காலத்துக்கு அழைத்து வரத் தேவையான பண்புருமாற்றத்துக்கு மண்டேலா தலைமை தாங்கினார்.

ஈழத்தமிழ் அரசியலிலும் இறந்த காலத்தில் இருந்து ஒரு புதிய காலத்தை நோக்கிச் செல்வதற்கான பண்புருமாற்றம் தேவை. தனது அரசியல் எதிரியை துரோகி ஆக்குவதும் எதிரியின் கையாள் என்று கூறுவதும் தமிழ்ச் சமூகம் பண்புருமாற்றத்துக்கு தயாரில்லை என்பதைத்தான் காட்டுகின்றன. பண்புருமாற்றத்துக்கு தயாரில்லை என்று சொன்னால் கூட்டுக் காயங்களோடும் பிணங்களோடும் இறந்த காலத்திலேயே வாழ வேண்டியதுதான். பழிவாங்கும் உணர்ச்சியால் பிளவுண்டு ஒரு தேசமாக திரட்சியுறாமல் சிதறிப் போவதுதான்.

கடந்த 13 ஆண்டுகளில் ஒரு பொதுவான நினைவு நாளையோ அல்லது நினைவு கூர்தலுக்கான ஒரு பொதுக் கட்டமைப்பையோ ஈழத்தமிழர்களால் உருவாக்க முடியவில்லை என்பது தமிழ் அரசியல் தொடர்ந்து பண்புருமாற்றத்துக்கு தயாராக இல்லை என்பதைத்தான் காட்டுகின்றது. இப்பொழுது திலீபனின் நினைவு நாளை முன்னிட்டு உருவாக்கப்பட்டிருக்கும் பொதுக் கட்டமைப்பானது ஒரு கட்சிக்குள் ஏற்பட்ட உடைவைப் பிரதி பதிக்குமா? அல்லது ஒரு புதிய காலத்தை நோக்கிய பண்புருமாற்றத்தைப் பிரதிபலிக்குமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெனிவா



## அறிக்கையோடு முற்றுப் பெறுமா தமிழர் விவகாரம்?

அ.நிக்ஸன்

காலிமுகத்திடலில் நடைபெற்ற பொருளாதார நெருக்கடிக்கு எதிரான போராட்டங்களில் சிங்கள மக்களுடன் தமிழ் - முஸ்லிம் மக்கள் ஒன்றிணைந்து பங்குபற்றியதன் மூலம் எதிர்காலத்தில் இலங்கைத் தீவில் மாற்றங்கள் ஏற்படுமென ஜெனிவா மனித உரிமைகள் பேரவையின் பூச்சிய வரைவில் (zero draft) நம்பிக்கை வெளியிடப்பட்டுள்ளது. ஆனால் இந்தக் கருத்தின் ஊடாக, ஈழத்தமிழர்களுடைய பிரதான அரசியல் நியாயப்பாடுகள் புறம் தள்ளப்பட்டுள்ளன. ஆணையாளர் மிச்சல் பச்லெட் பதவி விலகியுள்ள சூழலில். இந்த அறிக்கை ஜெனிவா மனித உரிமைகள் பேரவையின் பணியாளர்கள் மட்டத்திலேயே தயாரிக்கப்பட்டுள்ளது. குறித்த அறிக்கையில் தமிழ்- முஸ்லிம் மக்களின் நீண்டகாலப் பிரச்சினை என்று கூறப்படுகின்றதே தவிர தமிழர்களுடைய அரசியல் பிரச்சினையின் ஆழம் அறிக்கையில் தெளிவாக இல்லை. இஸ்ரேல், சீனா ஆகிய நாடுகள் பற்றிய விவகாரங்களினால் அமெரிக்காவின் வெறுப்புக்கு உள்ளாகிய மிச்சல் பச்லெட் , ஆணையாளர் பதவியில் இருந்து விலகிய பின்னர் தயாரிக்கப்பட்டுள்ள இந்தப் பூச்சிய வரைவு, மேலும் சரிபார்க்கப்பட்டு இறுதி வடிமைப்புச் செய்யப்படுகின்றது. இலங்கை விவகாரம் தொடர்பான உறுப்பு நாடுகளின் பிரதிநிதிகள் இறுதி வரைவைச் சரிபார்க்கின்றனர்.

ஆணையாளர் விலகியுள்ள நிலையில் இந்தப் பூச்சிய வரைவு கொழும்பில் இந்து செயற்படும் உறுப்பு நாடுகளின் பிரதிநிதி களுடன் உரையாடப்பட்டு ஜெனிவா மனித உரிமைகள் பேரவை அலுவலகப் பணியாளர்களினாலேயே தயாரிக்கப்பட்டிருக்கின்றது என்பதை அறிய முடிகின்றது. போர்க்குற்றம், மனித குலத்துக்கு எதிரான படுகொலைகள், மற்றும் சித்தரவதைகள் குறித்த சர்வதேச விசாரணை அதற்கான சாட்சியங்களைச் சேரித்தல் ஆகிய விசாரணைப் பொறிமுறைகள் பூச்சிய வரைவில் மிக நுட்பமாக நீக்கம் செய்யப்பட்டுள்ளன. பூச்சிய வரைவை ஆணையாளர் மிச்செல் பச்லெட் தயாரித்தாகவே கணக்குக் காண்பிக்கப்படுகின்றது. ஆனால் அவர் வெளியேறிய பின்னரான சூழலில் இலங்கைக்கு ஏற்ற முறையிலும் அமெரிக்கா போன்ற மேற்குலக நாடுகளின் புவிசார் அரசியல் தேவைக்கு ஏற்றதாகவும், இந்தப் பூச்சிய வரைவு தயாரிக்கப்பட்டுள்ளதை அதன் உள்ளடக்கம் காண்பிக்கிறது.

மிச்சல் பச்லெட் ஆணையாளராக இருந்தபோது வெளியான அறிக்கைகளில் ஈழத்தமிழர் பிரச்சினை பற்றிய பல விடயங்கள் குறைந்த பட்சம் 'நல்ல வீச்சாக' அமைந்திருந்தன. சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றத்துக்கு இலங்கையைப் பாரப்படுத்த வேண்டும் என மனித உரிமைகள் பேரவையின் இலங்கை தொடர்பான கருக்குழு நாடுகளின் (Core Group) பிரநிதிநிதிகளிடம் மிச்சல் பச்லெட் கோரியுமிருந்தார். ஆகவே கடந்த அமர்வின் போது அவ்வாறான அறிக்கைகள் வெளிவந்திருந்த நிலையில், இந்த ஆண்டு வரையப்பட்ட பூச்சிய வரைவில் ஈழத்தமிழர்களின் அரசியல் விடுதலைக் கோரிக்கைகள், குறிப்பாக போர்க்குற்ற விசாரணை மற்றும் இன அழிப்புக்கான கோரிக்கைகள் அனைத்தும் புறம்தள்ளப்பட்டு முழு இலங்கைத்தீவுக்கும் உரிய மனித உரிமைப் பிரச்சினைகள் மற்றும் அனைத்து மக்களின் ஜனநாயகத்துக்கான போராட்டமாகவும் சித்தரிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பூச்சியவரைவின் இறுதி வடிவத்தில் மேலும் சில விடயங்கள் சேர்க்கப்படலாம். குறிப்பாகப் புவிசார் அரசியல் - பொருளாதா நோக்கில் இலங்கை அரசாங்கத்தை தங்கள் பக்கம் ஈர்ப்பதற்கான அரசியல் அழுத்தங்கள் முன்வைக்கப்படலாம். ஆகவே இந்தப் பூச்சிய வரைவு மேலும் மென்படுத்தப்பட்டு மேலும் இலங்கைக்குச் சார்பான தீர்மானங்கள் நிறைவேறக்கூடிய ஏது நிலைகளே அதிகமாகக் காணப்படுகின்றன. ஆகவே சர்வதேச நீதி என்பது மறுக்கப்பட்டு, இலங்கையின் உள்ளக விசாரணைப் பொறிமுறையை ஊக்கப்படுத்தி, வேண்டுமானால் உள்ளக விசாரணைக்குரிய சர்வதேசத் தொழில் நுட்ப உதவிகளை மாத்திரம் வழங்குகின்ற ஒரு திட்டத்துக்கு ஜெனிவா மனித உரிமைகள் பேரவை முன்வரக்கூடிய ஏற்பாடுகளே பூச்சிய வரைவில் அதிகமாக வெளிப்படுகின்றன. ஆணையாளர் மிச்செல் பச்லெட் பரிந்துரைத்த சர்வதேச விசாரணைக்குரிய சாட்சியங்களைத் திரட்டும் பொறி முறைக்குப் போதிய நிதிவசதி ஜெனிவாவிடம் இல்லை. இதனாலேயே போர்க்குற்றங்கள், மனிதப் படுகொலைகளுக்கான உரிய சாட்சியங்களைத் திரட்டும் நடவடிக்கைகளை ஜெனிவா முன்னெடுக்கவில்லை. அதற்கான நிதி இந்த ஆண்டுதான் கிடைத்திருக்கின்றது.

ஆகவே மேற்கொள்ளப்படவிருந்த உரிய பணிகள் உரிய நிதி இல்லாமையினால் தடைப்பட்டமை தொடர்பாகப் பூச்சிய வரைவில் எதுவுமே கூறப்படவில்லை. மாறாகத் தங்கள் பக்கத்துப் பலவீனங்களையும், ஜெனிவா தீர்மானத்தின் பிரகாரம் இலங்கையைக் கட்டுப்படுத்த முடியாத தங்கள் இயலாமைகளையும் மூடி மறைத்துப் பூச்சிய வரைவு தயாரிக்கப்பட்டிருக்கின்றது.

வடக்கு- கிழக்கில் இலங்கை இராணுவத்தின் பிரசன்னம் பற்றிக் கூறப்பட்டபோதும், தமிழர்கள் எதிர்நோக்கும் விரிவான பாதிப்புகள் தொடர்பாக எதுவுமே கூறப்படவில்லை. எல்லாமே மேலோட்டமான கூற்றுகள். இதன் காரணமாகவே இலங்கையின் போர்க்குற்றவாளிகள் என ஜெனிவாவினால் அடையாளமிடப்பட்டுள்ள இலங்கை இராணுவத் தளபதிகள், மூத்த படை உயர் அதிகாரிகள் வெளிநாடுகளுக்குச் செல்லும் போது விசாரணை நடத்தப்படும் யுனிவேர்சல் யூறிஸ்டிக்சன் (Universal Jurisdiction) என்ற புதிய பொறி முறை பரிந்துரைக்கப்பட்டிருக்கிறது போல் தெரிகின்றது. ஆனாலும் இந்த யுனிவேர்சல் யூறிஸ்டிக்சன் விசாரணைப் பொறிமுறையைக்கூட இலங்கை விரும்பவில்லை. ஜெனிவாவுடன் இலங்கை முரண்படுவதற்கும் அதுவும் ஒரு காரணம். அத்துடன் இந்தியாவும் இந்த விசாரணைப் பொறிமுறையை ஏற்கவில்லை. (இது குறித்து இப் பத்தியில் ஏற்கனவே சுட்டிக்காட்டப்பட்டிருந்தது) ஆனாலும் யுனிவேர்சல் யூறிஸ்டிக்சன் விசாரணைப் பொறிமுறையை அமுல்படுத்தக்கூடிய நிலைமைதான் காணப்படுகின்றது. ஆனால் இது சர்வதேச விசாரணை அல்ல. அந்த விசாரணைப் பொறிமுறை தமிழர்கள் எதிர் பார்த்ததுமல்ல. இருந்தாலும் இதனைச் சர்வதேச விசாரணைப் பொறிமுறையாகவே ஜெனிவா காண்பிக்கின்றது. இந்தப் பூச்சிய வரைவு ஒட்டுமொத்தமாக உள்நாட்டுப் பொறிமுறையைத் தான் வலியுறுத்துகின்றது. அத்துடன் இந்த ஆண்டு ஏப்ரல் மாதம் இலங்கையில் இடம்பெற்ற பொருளாதார நெருக்கடிகளுக்கு எதிரான மக்கள் போராட்டங்களினால், இலங்கையின் பொருளாதாரக் குற்றங்கள் என்ற புதிய விவகாரம் ஒன்றும் வரைவில் புகுத்தப்பட்டுள்ளது.

பொருளாதாரக் குற்றங்களை விசாரணை செய்யும் பரிந்துரை ஊடாக ஜெனிவாவை எதிர்க்கும் பௌத்த - சிங்கள மக்களைத் திருப்திப்படுத்தும் நோக்கம், உறுப்பு நாடுகளிடம் இருக்கலாம். இதனைப் பிரதானமாகக் கொண்டு உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் விசாரணைகள், பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குதல் போன்ற விடயங்களும் வரைவில் உள்ளடங்கியிருக்கின்றன. இதன் மூலம் இலங்கை மக்களின் ஒட்டுமொத்த ஜனநாயகப் பாதுகாப்பு, மனித உரிமைப் பாதுகாப்பு போன்ற விடயங்களுக்கு மாத்திரமே பூச்சிய வரைவு முக்கியத்துவம் கொடுத்துள்ளது.

இறுதித் தீர்மானம் எடுக்கப்படும் வரையும் பரிசீலிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் இந்தப் பூச்சியவரைவின் உள்ளடக்கங்கள் தொடர்பாக அமெரிக்கா வேறாகவும் இந்தியா மற்றொரு பகுதியாகவும் சற்று மாறுபட்ட கோணங்களில் நின்றே ஆலோசனைகளை முன்வைத்திருக்கின்றன. குறிப்பாக வரைவு தயாரிப்பில் கடந்த முறைபோலல்லாது, இம்முறை அமெரிக்க - இந்திய அரசுகளுக்கிடையில் சற்று இடைவெளி காணப்படுவதை அவதானிக்க முடிகின்றது.

ஏனெனில் இறுதி வரைவு செய்யப்பட்டுக் கொண்டிருக்கும் பூச்சிய வரைவில், அரசியல் தீர்வு 13 ஆவது திருத்தச் சட்டம் பற்றி [illegible] ஆனாலும் இறுதிநாள் அமர்வில் இந்தியா 13 ஐ வலியுறுத்தக்கூடிய சந்தர்ப்பங்கள் உண்டு. ஏனெனில், மேற்குலக நாடுகளைவிடத் தமிழர்களைச் சமாளிக்க வேண்டியது இந்தியாவின் கடமை. இம்முறை ஏனைய நாடுகளைவிடவும் இந்தியா மாத்திரமே அரசியல் தீர்வு பற்றி வலியுறுத்தியிருக்கிறது. ஆனால் தமிழ்த் தரப்பினால் நிராகரிக்கப்பட்ட 13 ஐ மாத்திரம் அடிப்படையாகக் கொண்டுதான் இந்தப் பரிந்துரை வெளிப்படுகின்றது. இந்தப் பின்புலத்தில் ஒவ்வொரு ஆண்டும் வெளியிடப்படும் அறிக்கையில் 13 ஆவது திருத்தச் சட்டம் புகுத்தப்பட்டிருந்த நிலையில், இந்த ஆண்டு அறிக்கையில் மாத்திரம் 13 தவிர்க்கப்பட்டு ,இலங்கையின் ஒருமைப்பாடு பற்றிய அழுத்தங்களை முன்னிலைப்படுத்தி இலங்கையைத் திருப்திப்படுத்தியிருக்கிறது ஜெனிவா அலுவலகம். ஆனாலும் இறுதி வரைவை அமெரிக்கவும் பிரித்தானியா தலைமையிலான கருக்குழு நாடுகளும் மற்றும் இந்தியாவும் சேர்ந்து பூர்த்தி செய்யப்போகின்றனவா? அல்லது அமெரிக்காவினதும் கருக்குழு நாடுகளினதும் பரிந்துரைகளோடு மட்டும் வரைவு முழுமை பெறுமா? என்பது கூடக் கேள்வியாகவே உண்டு. இருந்தாலும் மனித குலத்துக்கு எதிரான படுகொலைகள் பற்றிய சர்வதேச விசாரணைக்குச் சாட்சியங்களைத் திரட்டும் பொறிமுறைகள் தேவையில்லை என்ற இந்திய நிலைப்பாட்டை அமெரிக்கா போன்ற மேற்குலகமும், பிரித்தானியவை மையமாகக் கொண்ட கருக்குழு நாடுகளும் ஏற்கும் நிலைமை வரலாம்.

அதாவது போர்க்குற்ற விசாரணைகளில் இலங்கையின் இறைமைக்குள் வேறு நாடுகள் தலையிடக் கூடாது என்ற இந்திய நிலைப்பாட்டை இம்முறை ஜெனிவா அறிக்கையில் முழுமைப்படுத்தக்கூடிய சந்தர்ப்பங்கள் இல்லாமல் இல்லை. பொருளாதார நெருக்கடியின் பின்னர் இலங்கையில் சிறுவர் நிலை தொடர்பாகச் சர்வதேச மட்டத்தில் பல குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன. ஜெனிவாவில் அது பற்றிப் பேசப்பட்டிருக்கிறது. இதனால் முன்னாள் சிறுவர் போராளிகள் மற்றும் முன்னாள் போராளிகள் விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்ற அல்லது கைது செய்யப்படக்கூடிய ஏற்பாடுகளும் கொண்டு வரப்பட்டுச் சிங்கள ஆட்சியாளர்களைத் திருப்திப்படுத்தும் ஆபத்துக்களும் உண்டு.

ஆகவே தமிழ்த்தேசியக் கட்சிகள் ஒன்றிணைந்து 2009 க்குப் பின்னரான சூழலில் வடக்கு - கிழக்கு தாயகப் பிரதேசங்களில், என்ன நடந்தது நடந்து கொண்டிருப்பது என்ன? என்ற விபரங்களைச் சர்வதேசத்துக்கு வெளிப்படுந்தவில்லை என்பது இங்கே பட்டவர்த்தனமாகிறது.

அதாவது சர்வதேச நீதியைக் கோருவதில், 2099 க்குப் பின்னரான பதின்மூன்று ஆண்டுகளிலும் ஒருமித்த குரலுடன் கூடிய திட்டங்கள் எதுவுமின்றி, அங்கொன்றும் இங்கொன்றுமாகச் செயற்பட்டிருக்கின்றனர் என்பதையே பகிரங்கப்படுத்தியுள்ளது. கட்சிகளாகப் பிரிந்து செயற்பட்டாலும் தனிப்பட்ட நபர்கள் அல்லது கட்சிகளாகக் கூட, சர்வதேச மட்டத்தில் செய்ய முற்பட்ட பல வேலைத் திட்டங்கள், வேறு சில தமிழ்த்தேசியக் கட்சிகளினால் அல்லது தமிழ்த் தேசியம் பேசுகின்ற சில தனி நபர்களினால் குழப்பப்பட்டிருப்பதாகவும் அறிய முடிகின்றது.

ஆகவே தமிழர்கள் மத்தியில் உள்ள கட்சி அரசியலும், தனி நபர் அரசியல் வேலைத்திட்டங்களும், அதன் பலவீனங்களும், இலங்கை ஒற்றையாட்சி அரசின் தமிழர்களுக்கு எதிரான சர்வதேச வலைப் பின்னல் நகர்வுகளுக்கே வாய்ப்பாக அமைந்துள்ளன. அத்துடன் 2009 க்குப் பின்னரான அரசியல் சூழலில் இலங்கை அரசை மட்டும் கையாண்டால் போதுமென்ற அமெரிக்க - இந்திய அரசுகளின் புவிசார் அரசியல் தேவைக்கும் அது வசதியாக அமைந்துள்ளதெனலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொற்சிலம்பம் போட்டி 102

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | 3 | | ■ | 4 | 5 |
| | ■ | 6 | | ■ | 7 | | |
| 8 | 9 | | | 10 | | | ■ |
| 11 | | ■ | 12 | | | ■ | 13 |
| 14 | | | ■ | | ■ | 15 | |
| 16 | | ■ | 17 | | 18 | ■ | |
| 19 | | 20 | | ■ | 21 | 22 | |
| | ■ | 23 | | | ■ | | |

அனுப்புபவர் பெயர்:..............................................

முழுமையான தபால் விலாசம்: ..............................

..............................................................

கையொப்பம்:..............................................

ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருகின்றமையால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

## இடமிருந்து வலம்

1.தகுதியான பருவநிலை 4. தோழன் 6. சிவன் கையில் உள்ள ஆயுதம் 7. தீயின் வடிவம் 8. வன்னிப்பெருநிலப்பரப்பு இதுபோன்று இருந்தது. 11. கழுத்தில் சூட்டுவது 12. கரம் கொடுத்தல் 14. நீர்த்தன்மையான ஊடகம் 15. பிழைஅல்ல 16. இணங்க 17. விருந்தினர் 19. இவன் மகாகவி 21. வைதீக சமயங்களில் ஒன்றைப் பின்பற்றுபவன் 23. சிறிய பெண் 24. கர்ப்பம்

## மேலிருந்து கீழ்

1. பொய், களவு, கள்ளுண்ணுதல், குருநிந்தை, கொலை ஆகிய தவறுகள் 2. திருமணம் செய்யாத இளம்பெண் 3. தலையில் பலருக்கு இருப்பது 4. உயிரற்ற உடல் 5. ஆவணி, புரட்டாதிப் பருவம் 7. முறம் 9. இலங்கையின் மத்திய பிரதேசத்தை இப்படி அழைப்பர் 10. பல்கலைக்கழகம் கொடுக்கும் பட்டம் 13. மூத்த தாய் 17. இன்று அல்ல 18. திக்கு 20. இது வந்திடப் பத்தும் பறக்கும். 22. வாழ்

### சொற்சிலம்பம் போட்டி 101 க்கான விடைகள்

**இடமிருந்து வலம்**

1. பிரமாதம் 4. சானம் 6. தரி 7. கயல் 8. சாமர்த்தியம் 11. சிரசு 12. திறமை 14. குரல் 15. கரு 16. சுடும் 17. துணைவி 18.யாகம் 19. பலா 20. தும்பிக்கை 21.பசை

**மேலிருந்து கீழ்**

1. பிரசாதம் 2. மாதர் 3. தரித்திரம் 4. சாயம் 5. மைல் 7. கயமை 9. மலை 10. திறல் 13. குருவிச்சை 14. குடும்பி 15. கணை 16. சுகம் 17. துலா 18. யாது 19. பகை

**சொற்சிலம்பம் போட்டி இல.102**

பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்

உதயன் சஞ்சீவி

இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

என்னும் முகவரிக்கு

30.09.2022 இற்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

## போட்டி விதிகள்

- வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
- ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்.
- சஞ்சீவியில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
- போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
- வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே

ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா 150/= ரூபா 100/=

பரிசாக வழங்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டியில் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக்கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.

**போட்டி இலக்கம் 101 இல் வெற்றி பெற்றோர் விவரம்**

**1 ஆம் பரிசு**
**ஸ்ரீ.லக்சன்**
மாணவன், ஆண்டு 13 b
யாழ் மத்திய கல்லூரி

**2 ஆம் பரிசு**
**சி.தியாகேஸ்வரி**
டச்சு வீதி, கோப்பாய்

**3 ஆம் பரிசு**
**நீ.ஷன்ரோ**
79/6 புங்கன்குளம் வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்

**4 ஆம் பரிசு**
**கு.இரத்தினதேவி**
17/3 கலட்டி முந்தல் வீதி,
கொக்குவில் கிழக்கு

**5 ஆம் பரிசு**
**ஐ.தயாபரன்**
கைதடி தெற்கு,
கைதடி



# ஊர்ப்புதினம்

○ இராகவன்



போனமுறை எனக்குக் கறண்ட் அடிச்சதைப் பற்றிச் சொன்னன். தொடர்ந்து என்ன நடந்ததெண்டு பாப்பம்.

நான் வாளியைப்போட்ட சத்தங் கேட்டுச் சிவா அங்கையோடி வந்திட்டான். பிள்ளையார் பிடிக்கப்போய் குரங்கானதில் எனக்குச் சரியான மொக்கயீனக்கேடாப் போச்சு.

'என்னடா கறண்ட் அடிச்சிட்டுதே? வெருளி! வெங்காயம்! எர்த்துக்குத் தண்ணியூத்தப் போகேக்க செருப்பில்லாமல் போறதே? 'எண்டு அவன் கேட்டாப்போல எனக்கு இன்னும் வெக்கக்கேடாப் போச்சு. அவனொரு விசயம் விளங்கின வட்டாரம்தான். அமசடக்கி. எல்லாத்தையும் பேயன் மாதிரி நிண்டு வேடிக்கை பாப்பான். அடுத்தவனை மட்டந்தட்டிப் பாக்கிறதில அவனுக்கு அந்தளவு ஆர்வம்.

சரி! அதுபோகட்டும். இந்த அசம்பாவிதம் நடந்த கையோட இளையண்ணாவும் வந்து சேர்ந்திட்டான். சிவா அவனிட்ட நடந்ததைச் சொல்லிச் சிரிக்க, படுபாவி இளையண்ணா என்ன சொன்னான் தெரியுமே?

"அப்பு! ராசா! பேரறிவுக் கொழுந்து! என்ற உடன்பிறந்த நொடுநொடுத் தவல்லி! நான் ஏர்த் 'பிட்'பண்ணினதே உனக்காகத்தானடி என்ர குஞ்சு! எனக்குத் தெரியும் நீ கையக் காலவைச்சுக் கொண்டு ஒரு கொஞ்சநேரமும் சும்மாயிருக்கமாட்டாய். ஏதும் சொறி வேலை பாப்பாய். அதால கறண்ட்போடையும் சொறியத்தான் போறாய். கறண்ட் எப்படியடிக்கும்? எண்டு உனக்குத் தெரிஞ்சால் பிறகு மறந்தும் அதோட சொறியமாட்டாய் எண்டதுக்காகத்தான் இந்த ஏற்பாட்டைச் செய்து உனக்குத் தண்ணியையும் ஊத்திக்காட்டிப்போட்டுச் செருப்பையும் எடுத்து ஒளிச்சுவைச்சிட்டுப் போனனான். இனிப்பிரச்சினையில்லை. இப்ப உனக்குக் கறண்ட் அடிக்கிறதெண்டா என்னெண்டு வடிவாத் தெரிஞ்சிட்டுது.

**58**

இனிக் கனவிலயும் கறண்டோட சொறியமாட்டாய்" எண்டு அவன் சொல்லி முடிக்க, சிவா 'கெக்கேபிக்கே' எண்டு விழுந்து விழுந்து சிரிச்சான். இதைத்தான் பொல்லைக் கொடுத்து அடிவாங்கிறது என்று சொல்லுறது. எனக்கிப்ப அவங்கள் ரண்டு பேருக்கும் கன்னத்தைப் பொத்தி வெளுக்கோணும் போலையிருந்திச்சுது. என்னிலதான் முழுப் பிழை எண்டதால பேசாமலிருந்திட்டன.

ஆனால் இளையண்ணாவின்ர திட்டம் பிறகும் ஒருக்கால் பிழைச்சுத்தான் போச்சு. ம்... நான் அதுக்குப் பிறகுமொருக்கால் கறண்ட்டோ சொறிஞ்சிருக்கிறன். அண்டைக்கொருநாள் கையில ஒரு புத்தம்புது 'பேர்மா ஷார்ப்' பிளேட் கிடைச்சாப்போல என்ர சிந்தனை கரைபுரண்டோடிச்சுது. சுவிச் போட்டிருந்தாத்தானே வயறுக்குள்ளால கறண்ட் ஓடும். சுவிச் நிப்பாட்டியிருந்தால் கறண்ட் வயறுக்குள்ளால ஓடாதுதானே? எண்டு நினைச்சன். அதைப் பரிசோதிச்சுப் பாப்பம் எண்டிட்டு அந்தப் பிளேட்டை எடுத்துக் கொண்டு போய் சுவிச் நிப்பாட்டியிருக்கோ? எண்டு ஒண்டுக்கு மூண்டு தரம் ரெஸ்ற் பண்ணிப்போட்டுச் சுவிச்சுக்கு வெளியில வாற வயறை லேசா வெட்டினன். ஆரோ பின்னால நிண்டு பிடரியில 'மொங்கின' மாதிரியிருந்திச்சுது. இளையண்ணாதான் 'மொங்கியிருக்கிறான்' எண்டு திரும்பிச் சுத்தும்முத்தும் பாத்தான். ஒருத்தருமில்ல. அப்பதான் எனக்குக் கறண்ட்தான் 'மொங்கியிருக்கெண்டும்' சுவிச் நிப்பாட்டியிருந்தாலும் வயறுக்குள்ளால கறண்ட் ஓடும் எண்டும் கிளியறாச்சுது. அதுக்குப் பிறகும் ஒருக்கால் கறண்டோட சொறிஞ்சு சாத்து வாங்கியிருக்கிறன். நானொருக்கால் காலமை பள்ளிக்கூடம் போகேக்குள்ள எங்கட பெரியாம்பியண்ணையின்ர கடைக்கு முன்னால கறண்ட் கம்பியொண்டு அறுந்து நிலத்தில விழுந்து கிடந்திச்சுது. அதைப் பாத்தாப்போல கறண்ட் வருகுதோ எண்டு தூக்கிப் பாக்க வெளிக்கிட்டன. பிறகு ஒரு விரலால தொட்டுப் பாத்திட்டுத் தூக்குவம் எண்டிட்டுச் சாதுவா விரலை வைச்சுப் பாத்தன். பிடரியில செமையான 'மொங்கல்' விழுந்திச்சு.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சேடம் இழுக்கும் ஸ்ரீலங்கா; ஒட்சிசன் கொடுப்பாரா ரணில்?



**தற்போது இடம்பெற்றுவரும் சம்பவங்களை வைத்து பார்க்கும்போது அடுத்த இரண்டு வருட காலப்பகுதிக்குள் சேடம் இழுக்கும் ஸ்ரீலங்காவுக்கு ஒட்சிசன் வழங்க ரணிலால் முடியும் என்று கூறலாம்.**

ந.பரமேஸ்வரன்

சேடம் இழுக்கும் ஸ்ரீலங்காவுக்கு ஒட்சிசன் வழங்க ரணிலால் முடியுமா? என்று கேட்டால் , அதற்கு ஆம் என்பதே பதிலாக இருக்கும். 'என்னடா இவன் கடந்த வாரம் எழுதியதற்கு மாறாக இவ்வாரம் இப்படி எழுதுகிறானே' என வாசகர்கள் குழப்பமடையத்தேவையில்லை.

கடந்த வாரம், இலங்கை சீனாவின் கடன் பொறியில் இருந்து சர்வதேச நாணய நிதியத்தின் கடன் பொறியில் சிக்கியுள்ளது என எழுதியிருந்தேன். சீனாவின் கடன் பொறியில் இருந்து சர்வதேச நாணய நிதி யத்தின் கடன் பொறியில் சிக்கியுள்ளதன் காரணமாக ஸ்ரீலங்கா மூச்சு விடுவதற்கான அல்லது தப்பிப்பிழைப்பதற்கான ஒரு சிறிய ஒளிக்கீற்று தென்படுகிறது என்று சொல்லலாம் போலிருக்கிறது.

இலங்கை, சீனாவின் கடன்பொறியில் இருந்து சர்வதேச நாணய நிதியத்தின் கடன் பொறியில் சிக்கியுள்ளதால், மேற்குலகத்தின் கதவுகள் அகல திறக்கப்பட்டுள்ளன. இதன் காரணமாக ராஜபக்சக்களின் காலத்தில் சீனாவுடன் மட்டுப்படுத்தப்பட்டிருந்த வர்த்தக நடவடிக்கைகள் இப்போது மேற்குலகுக்கும் திறந்து விட்டுள்ளன. இது சீனாவின் கடன்பொறியில் இருந்து இலங்கை மீள்வதற்கான முதற்படி.

ஐக்கிய தேசியக்கட்சி, ஆரம்பிக்கப்பட்ட நாள் முதலாக, மேற்குலகம் சார்ந்த முதலாளித்துவக் கட்சியாகவே செயற்பட்டு வருகிறது. அத்துடன் மாமா ஜே.ஆர், மருமகன் ரணில் இருவருமே மேற்குலகின் செல்லப்பிள்ளைகள் . இதன் காரணமாகவே சர்வதேச நாணய நிதியத்துடன் இணக்கப்பாடு ஏற்பட்டதும், சமந்தா பவர், ஐரோப்பிய ஒன்றியம், ஜப்பான் என எல்லோரும் விழுந்தடித்து ஓடி வருகின்றனர்.

தற்போது இடம்பெற்று வரும் சம்பவங்களை வைத்து பார்க்கும் போது அடுத்த இரண்டு வருட காலப்பகுதிக்குள் சேடம் இழுக்கும் ஸ்ரீலங்காவுக்கு ஒட்சிசன் வழங்க ரணிலால் முடியும் என்று கூறலாம். இலங்கைக்கு பொருத்தமான ஜனாதிபதி ரணிலே என காலஞ்சென்ற முன்னாள் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர ஒரு முறை கூறியி ருந்தார். மங்கள சமரவீரவின் கூற்றை நிரூபிக்கும் வகையிலேயே ரணில் செயற்பட்டு வருகிறார்.

இலங்கையில் இதுவரை காலமும் இடம்பெற்று வந்த இரு கட்சி ஆட்சி முறை இப்போது இல்லை. மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி இல்லை; 134 எம்.பி.க்களால் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி ஆட்சியே இப்போது நடைபெறுகிறது. வீழ்ச்சியடைந்துள்ள பொருளாதாரத்தை மீளக்கட்டி எழுப்புவதற்கு பூரண ஒத்துழைப்பு வழங்குவதாக சகல அரசியல் கட்சிகளும் கூறியுள்ளன. சகல அரசியல் கடசிகளும் ஒத்துழைப்பு வழங்கும் பட்சத்தில்அதலபாதாளத்தில் வீழ்ச்சியடைந்துள்ள நாட்டை ஓரளவுக்கேனும் ரணில் நிமிர்த்தலாம்.

இப்போது ரணில் தனியார் துறையினருக்கு கதவுகளை திறந்து விட்டுள்ளார். மூலப்பொருள்களுக்கான இறக்குமதித் தடை நீக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் உற்பத்தித் துறை மீண்டும் புத்துயிர் பெற வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. அத்துடன் கிராமிய உணவு பாதுகாப்பை மேம்படுத்தும் நோக்குடன் ஏழு குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன.

உல்லாசப் பயணத்துறையும் மீளக் கட்டியெழுப்பப்படவுள்ளது. இலங்கையை தெற்காசியாவின் சுற்றுலா மையமாக மேம்படுத்தும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதன் முதற்கட்டமாக கசினோவுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஜோன் கீல்ஸ் நிறுவனம் சினமன் கிராண்ட் ஹோட்டலில் கசினோ ஆரம்பிப்பதற்கான பூர்வாங்க நடவடிக்கைளை இப்போதே ஆரம்பித்து விட்டது. இதேவேளை பங்குச்சந்தையில் வெளிநாட்டு முதலீடும் அதிகரித்துள்ளது; வெள்ளிக்கிழமை பங்குச்சந்தையில் வெளிநாட்டு முதலீடு 70.3 மில்லியனாக காணப்படுகிறது; இது முந்தைய வாரத்துடன் ஒப்பிடுகையில் 12% அதிகரிப்பு. இதே போல் திறைசேரி உண்டியல் விற்பனையும் அதிகரித்துள்ளது. கடந்த வாரம் திறைசேரி உண்டியல் விற்பனை 16.250 பில்லியன் ரூபாவாக அதிகரித்துள்ளது. இதே போல் டொலருக்கு எதிரான ரூபாவின் பெறுமதியும் 365.00 ரூபாவிலிருந்து 359.00 ரூபாவாக உயர்ந்துள்ளது. சுயநல அரசியல்வாதிகள் குழப்பாவிட்டால் ரணிலால் ஓரளவுக்கேனும் நாட்டை முன்னோக்கி கொண்டு செல்லமுடியும் என்றே பொருளாதார நிபுணர்கள் கருதுகின்றனர். ■



# எனது ஊரிலும்தான்.. 05



சி.கதிர்காமநாதன்

நாளைக்கு உங்களுக்கு வேலை இல்லாவிட்டால் என்னோட வரமுடியுமா?"

"எங்க போகணும்?"

"வானதி பதிப்பகத்துக்கு. என்னோட அண்ணை சொல்லிவிட்டவர். கொஞ்சப் புத்தகங்கள் வாங்க வேணும்"

"போகலாம். நான் அழைச்சிட்டுப்போறன்"

"எனக்குப் பல இடங்களுக்குப் போகப் பாதை தெரியாது. அதையும் காட்டித்தாங்கோ"

அவர் உடனே என்னை அறைக்கு அழைத்துக் கொண்டு வந்து வெள்ளைத்தாளிலே இடங்களையும் செல்லும் பாதைகளையும் வரைந்து காட்டினார்.

மாம்பலம் பஸ் ஸ்ராண்ட், பஸ் இலக்கங்கள், பாண்டி பஜார், மவுண்ட்ரோட், தியேட்டர்கள்.

"இப்ப இவ்வளவும்போதும். நீங்க இங்கதானே தங்கப் போறீங்க. மெல்ல மெல்லக் கத்துக்குவீங்க"

அவர் சொன்னமாதிரியே இடங்கள் கொஞ்சம் கொஞ்சமாகப் புரியத் தொடங்கின. மற்ற இருப்பிடங்களில உள்ளவர்கள் புன்னகையிலே தொடங்கி என்னுடன் பேசத் தொடங்கினார்கள். எல்லோரும் பொதுவாக ஒன்றையே கூறினார்கள்.

"சிலோனிலை இப்பவும் பிரச்சினை தீர்ந்தபாடில்லை"

இரவில் நாகலிங்கமரத்தடியில் நானும் ஸ்ரீராமும் கதைத்துக் கொண்டு இருந்தோம். நான் இங்கு வந்தநோக்கம், எனது குடும்பம், ஊர்ப்பிரச்சினை அனைத்தையும் அறிந்துகொண்டார். எல்லாவற்றையும் சொல்லிக் கொண்டு போகும்போது மனதிலே பெரியபாரம் குறைந்தமாதிரி இருந்தது.

"ஏன் ஸ்ரீராம் கனபேருக்கு எங்களைப் பற்றிச் சரியா விளங்கேல்லை? எங்கட இனப்பிரச்சினை பற்றிப் பலபேருக்கு ஒண்டுமே தெரியாது. ஏதோ சண்டை பிடிக்கினமாம். சனம் அகதிகளா இங்க வருகுது. உங்களாலை எவ்வளவு காசு செலவு எண்டு கதைக்கினம்"

ஸ்ரீராமுக்கு சிரிப்பு வந்தது.

"உங்களுக்கு எங்கட சஞ்சிகைகள் வந்துசேருது. இதனால நீங்க இந்தியாவில இருக்கிறவங்களோட நிலையைப் பத்தி அறிஞ்சிக்கிறீங்க். ஆனால் அங்க இருந்து இங்க சஞ்சிகைகள் வர்றது குறைவு. இதனால உங்கட பிரச்சினைகளை இங்க இருக்கிறவங்க எல்லோரும் அறியறதில்லை"

"என்னோட கதைச்ச ஆக்கள் சிலபேருக்கு விடயங்களை விளக்கமாகச் சொல்லியிருக்கிறன். அதுக்குப் பிறகுதான் கொஞ்சம் யோசிச்சுப்பாக்கினம். சில பேர் இப்ப நடக்கிற சம்பவங்களைக் சொன்னால் நம்பக் கஷ்டப்படுகினம்"

ஸ்ரீராம் அர்த்தத்துடன் என்னைப் பார்த்தார்.

"எல்லோருக்கும் தங்கள் தங்கள் நாட்டில நம்பிக்கை. அதுதான்..."

"நான் சிலவேளைகளிலை உணர்ச்சிவசப்பட்டுக் கதைச்சுப் போடுறன். பிறகு பயமா இருக்கும்"

"இப்படி உணர்ச்சிவசப்பட்டு பேசிடாதீங்க. தனிய இருக்கப் போறீங்க. இங்க இருக்கிற சனங்க உங்களிட சந்தேகப்பட்டா அப்புறம் பிரச்சினைதான். நான் இரண்டொரு நாளிலை டெல்லிக்குப் போயிடுவேன். கவனமா இருந்துக்கோங்க"

"நீங்க சொல்றதும் சரிதான். சிலவேளை நான் கையிலை கொண்டு போற பார்சலைக் கூடச் சந்தேகமாகப் பார்க்கினம். கொஞ்சம் கவனமாகத்தான் இருக்கவேணும்"

"இங்க இருக்கிற ஆக்களில நீங்க மட்டும்தான் சிலோன். உங்களுக்கு ரொம்பப் புரிய வைக்கத் தேவையில்லை. அளவோடு பேசிக்கொள்ளுங்க"

✦ ✦ ✦

ஸ்ரீராம் டெல்லிக்குப் போனது கஷ்டமா இருந்தது. என் மனதைப் புரிந்த முதல் நண்பர். ஸ்ரீராமோடு அவரது அம்மாவும் அப்பாவும் எல்லோரும் நெருக்கமாகிவிட்டார்கள். ஸ்ரீராமின் அப்பா இடையிடையே கதைத்துவிட்டுப் போவார். நான் என் எண்ணப்படி எங்கும் தனியாகப் போய்வர ஆரம்பித்துவிட்டேன். எனது பேச்சுமுறையும் கொஞ்சமாக மாறிக்கொண்டு வந்தது.

காலமும் விரைவாக ஓடியது. கதைகளிலே படித்த விடயங்களை நேரிலே பார்க்கும்போது சந்தோசமாக இருந்தது. காலையிலே 'பால்கவர்' கொண்டுவரும் ஆயா எனக்குப் பழக்கமாகிவிட்டாள்.

"பாவம் அம்மா, சகோதரர்களை விட்டிட்டு வந்து இங்க இருந்து கஷ்டப்படற. நீ நல்லா இருப்பாய்"

அவள் அடிக்கடி இவ்வாறு சொல்வாள். மனதுக்கு ஆறுதலாக இருக்கும். ஒருநாள் சுரேஷ் வந்து தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டார்.

"நீங்கள் பி 'ஃப்ளோரில்' இருக்கிறீங்கள். நான் பாத்திருக்கிறன்" என்றேன். அவர் தலையசைத்துச் சிரித்தார்.

"நீங்கள் தமிழும் கதைக்கிறீங்கள். ஹிந்தியும் கதைக்கிறீங்கள். ஏன் அப்படி?" என்றேன்.

"எங்களை 'சேட்' எண்டு சொல்வாங்க. வட்டிக்குப் பணம் கொடுக்கிறது எங்க தொழில். நாங்க ஊர்விட்டு ஊர் வந்திருக்கிறோம்" என்றார். பின் தனது குடும்பத்தைப் பற்றிச் சொன்னார். உடம்பு சரியில்லாத தனது அப்பா, சகோதரர்களோடு இருப்பதாகவும் சொன்னார்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தங்கம்

# யாழ்ப்பாண வரலாறு

1505-1948 வரை

ந.பரமேஸ்வரன்

தங்கம் எமது பாடசாலைக்கு வந்துவிட்டு செல்லும் வேளைகளில் அவளை , குளித்த பின்னரே வீட்டினுள் பெற்றோர் அனுமதிப்பார்கள். அவர்கள் தங்கம் பாடசாலையில் யாராவது ஒடுக்கப்பட்ட சாதி மாணவர்ளை தொட்டிருப்பாளோ என அஞ்சுவதே இதற்குக் காரணம். ஒரு நாள் அவளது ஆசிரியையிடம் "எனது பெற்றோர் என்னைக் கைவிட்டால் கடவுள் என்னை ஏற்றுக்கொள்வாரா?" என்று கேட்டாள். பாவம் விபரம் தெரியாத சிறுமி . எவ்வளவு பெரிய சவால் அவளின் முன்னால், என்ன செய்வாள்? தங்கம் கிறிஸ்தவ வீடு ஒன்றுக்குச் செல்வதை தங்கத்தின் தந்தை கண்டுவிட்டார். உடனே போய் படலையில் நின்று 'தங்கம் இங்கே வா' என்று கூப்பிட்டிருக்கிறார். தங்கம் வெளியே வந்தபோது, அவளது தந்தை கடும் கோபத்துடன் காணப்பட்டுள்ளார்.

ஆசிரியை தந்தையிடம் சென்று "அவளை ஒன்றும் செய்ய வேண்டாம்" எனக் கேட்டுள்ளார். ஆனால் அவர் அதைக் காதில் விழுத்தவில்லை. வீதியில் வைத்து அடித்துள்ளார். அக்கம் பக்கத்திலுள்ளவர்களும் பரிதாபத்துடன் பார்த்துக்கொண்டு நின்றனரே ஒழிய ஒருவரும் ஒன்றும் செய்யவில்லை.

ஒரு மாதமாக தங்கத்தின் பெற்றோர் தங்கத்தை வீட்டை விட்டு வெளியேற அனுமதிக்கவில்லை. எமக்கு தங்கத்தை நினைக்கப் பாவமாக இருந்தது . நாங்கள் போனால் அவளுக்கு தான் பிரச்சினை. என்ன செய்வது, அவளுக்காக பிரார்த்தனை செய்வது எனத் தீர்மானித்தோம். சிறிது காலத்தின் பின் தங்கத்தின் பெற்றோர் தங்கத்தைப் பாடசாலைக்கு அனுமதித்தனர். அவள் விபூதி பூசிக்கொண்டு தான் வருவாள். அத்துடன் மதம் மாறக்கூடாது என சத்தியம் செய்யவேண்டும் என நிபந்தனை விதித்தனர். தங்கம் சத்தியம் செய்யவில்லை அழுது கொண்டிருந்தாள். அவளது பெற்றோர் "எதற்காக எமது ஒரேயொரு பிள்ளையை இப்படிச் செய்கிறீர்கள்?" எனப் பரிதாபமாக கேட்டுவிட்டு சென்று விட்டனர்.

சில நாட்கள் அவளது முகம் வாடி காணப்பட்டது; சிறிது காலத்தின் பின் தங்கம் ஒரு ஆரம்பப் பாடசாலை ஆசிரியராகி விட்டாள். அவளுக்காக பிரார்த்தனை செய்யாவிட்டால் அவள் கண்ணை மூடிக்கொண்டு சாத்தானை வழிபடும் பெற்றோரிடம் கெஞ்ச வேண்டி இருந்திருக்கும்.

**மானிப்பாய் . மே 10 ,1882**

மருதடித் திருவிழா. இரண்டாம் வருடம்.

நாங்கள் காலை வேளையிலேயே எமது புத்தக இறாக்கைகள் மற்றும் தளபாடங்களை வைத்து கோயிலுக்கு அண்மையாக ஒரு கொட்டகை அமைத்து எல்லா இடத்தையும் மண்டபம் ஆக்கினோம். ஒன்பது மணிக்கு இருபது கிறிஸ்தவர்கள் வெவ்வேறு பாதைகளில் ஒரு மைல் தூரத்தில் பைபிள் துண்டுப்பிரசுரங்களுடன் கடமையில் ஈடுபட்டோம். உதவியாளர்கள் பலர் நூல் தாங்கிகளை (book stand) கொண்டு வந்தனர். என்னுடைய சகோதரியும் மூன்று பேச்சாளர்களும் கொட்டகையைத் தூக்கிக்கொண்டு வந்தனர். ஏனைய பாடகர்கள் என்னுடன் மருத்துவ விறாந்தைக்கு வந்தனர்.

சில நிமிடங்களில் (ஒன்பது மணியைத் தாண்டியவுடன்) இரண்டு வாசலையும் திறந்து விட்டு மக்களின் வருகையை எதிர்பார்த்து காத்திருந்தோம். இரு பாதைகளாலும் ஐம்பது, நூறு பேர் வரையில் வந்தனர். நாங்கள் அவர்களுடன் ஒன்றும் பேசவில்லை. நீண்டநேரமாகப் பாடிக்கொண்டிருந்தோம். வீதியில் பரப்பு ஏற்பட்டது. இரு வாயில்களாலும் சிலர் உரத்து பாடிக்கொண்டு சத்தமிட்டவாறு உள்ளே வந்தனர்.

ஆனால் எமது வளாகத்தினுள் வரவில்லை. என்னுடைய பக்கம் கொஞ்சப் பேர் அமர்ந்திருந்தனர் . மறுபுறம் கூச்சலிட்டுக்கொண்டு கொஞ்சப்பேர் அமர்ந்திருந்தனர். நாங்கள் எமது கூலியாட்களிடம் ஆறு வாயில்களையும் திறந்து விடச்சொன்னோம். பெருமளவு மக்கள் வந்து சுடுமணலில் அமர்ந்திருந்தனர். அந்தநேரம் பார்த்து பாடவும் பேசவும் முற்பட்டோம்.

இருநூறு தொடக்கம் நானூறு பேர் வரையில் நீண்டநேரமாக அமைதியாக செவிமடுத்து கொண்டிருந்தனர். கடந்த வருடத்தை விட இம்முறை சிறப்பாக இருந்தது. ஒருவரும் போவதற்கு அவசரப்படவில்லை. இவர்கள் பல்வேறு கிராமங்களிலிருந்தும் வந்தவர்கள். இவர்களை நான் இதற்கு முன்னர் பார்த்ததில்லை. அவர்கள் மர நிழலில் அமர்ந்திருந்து அமைதியாக செவிமடுத்து கொண்டிருந்தனர். மூன்றிலொரு பகுதி மக்கள் கோயிலுக்கு போகாமல் எமது வளாகத்தினுள் எம்முடன் இருந்தனர். இம்முறை கோயில் வருமானம் குறைவாவே இருந்ததாக நான் அறிந்து கொண்டேன். இம்முறை பத்தாயிரம் பேர் கலந்து கொண்டனர் . ஆக 140.00 ரூபா தான் வருமானமாகக் கிடைத்தது. வட்டுக்கோட்டை தேவாலயத்தில் நன்றி செலுத்தும் ஆராதனையின் போது 180.00 ரூபா கிடைத்தது.

(வரலாறு நீளும்)

# சீரழியவில்லை கிளிநொச்சி

கடந்த (04.09.2022) சஞ்சீவி வார இதழில்; '**அதிகரிக்கும் சிறுமிகளின் கர்ப்பவீதம் சிதைந்து செல்கிறதா கிளிநொச்சியின் சமூக கட்டமைப்பு? அதிர்ச்சி ரிப்போர்ட்**' எனும் தலைப்பில் பதின்ம வயது சிறுமி கள் கர்ப்பம் தரிப்பது அதிகரித்துச்செல்கின்றது என்பதாக வெளிவந்த கட்டுரை தொடர்பாக சுகாதாரத் துறையைச் சேர்ந்த அதிகாரிகள் சிலர் அனுப்பி வைத்த சில விளக்கங்களின் **இரண்டாம் பகுதி** பொது நலன் கருதி 'சஞ்சீவியில்' பிரசுரிக்கப்படுகின்றது.

**குடும்ப நல உத்தியோகத்தர்களுக்கான இடமாற்றம்**

அரசு ஊழியர்களுக்கான இடமாற்றம் என்பது குடும்ப நல உத்தியோகத்தர்களுக்கு மட்டுன்றி அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் மேற்கொள்ளப்படுவது வழக்கம் ஆகும். 2018 இலும் அவ்வாறான இடமாற்றமே வழங்கப்பட்டது. வடக்கில், கணக்காய்வுத் திணைக்களத்தினர் உட்பட பத்திரிகைகள் கூட இடமாற்றங்கள் ஒழுங்காக அமுல்படுத்தப்படுவ்தில் அதிக கவனமெடுப்பது இங்கு குறிப்பிடத்தக்கது. ஆனாலும் 2018 மற்றும் 2019 இல் கிளிநொச்சியில் தூர இடங்களுக்கு இடமாற்றம் பெற்ற குடும்ப நல உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் இடமாற்றம் அமுலுக்கு வந்து மூன்று மாதத்தின் பின்னர் அவர்கள் விரும்பிய இடத்துக்கு அல்லது பழைய இடங்களுக்கு ஒத்துமாறல் மூலம் இடமாற்றம் வழங்கப்பட்டது. இது மேற்குறித்த கட்டுரையாளரின் கவனத்தைப் பெறாதமை கவலைக்குரியது.

**குடும்ப நல உத்தியோகத்தர்கள் கடமைப் பகுதியில் வசிக்காமை**

2018 இன் பின்னர் மட்டுமல்ல அதற்கு முன்னர் கூட கிளிநொச்சியில் பெருமளவு குடும்ப நல உத்தியோகத்தர்கள் தமது கடமைப்பகுதிகளில் வசிக்கவில்லை. இதுவே நகரப் பகுதி தவிர்ந்த ஏனைய இடங்களில் யதார்த்தமாக இருந்தது.

**தற்கொலைகளின் அதிகரிப்புத் தொடர்பாக....**

கிளிநொச்சியில் மட்டுமல்ல வடக்கில் தற்கொலைகளின் வீதம் நாட்டின் ஏனைய பகுதிகளை விட அதிகம். குறிப்பாக போரின் பின்னரான காலத்தில் இது அதிகரித்துச் செல்கின்றது. இது தொடர்பாக பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்களும் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரும் பல்வேறு இடங்களுக்கு தரவுகளுடன் தொடர்ந்து எடுத்துச் சொல்லி வருகின்றனர். இதை சுகாதாரப் பணிப்பாளர் நாயகம் வடக்குக்கு வருவதற்கு முன்னர் மத்திய சுகாதார அமைச்சு ஏற்றுக் கொள்ள மறுத்து வந்தது. ஏனெனில் அவர்கள் இதைப் புறக்கணித்து கடந்து போக விரும்பினர். தற்கொலைகளைக் குறைப்பதற்காக 021 222 6666 என்ற உதவித் தொலைபேசிச் சேவையும் வடக்கில் சுகாதாரத் துறையினரால் ஆரம்பிக்கப்பட்டது. இதற்கு இன்று வரை மத்திய சுகாதார அமைச்சு உதவவும் இல்லை. தற்போது மத்திய சுகாதார அமைச்சு இதே போன்ற சேவையை நாடு முழுவதும் ஆரம்பித்துள்ளமையும் குறிப்பிடத்துக்கது.

கிளிநொச்சியில் தற்கொலைகள் அதிகமுள்ளதை கண்ட, 2018 க்குப்பின்னான நிர்வாகம் மாவட்ட மன நலப் பிரிவினர் மூலமாக பெரும் எண்ணிக்கையிலான விழிப்புணர்வுக் கூட்டங்களையும் புலம்பெயர் அமைப்புகளின் உதவியுடன் உளஆற்றுப்படுத்தல் சேவைகளையும் ஆரம்பித்ததும் குறிப்பிடத்தக்கது. மேலும் இலங்கை அரசின் இனவழிப்பின் ஒரு பகுதியாக வடக்கில் நுழைக்கப்பட்ட நுண்நிதி நிறுவனங்களின் கடன்களே பெருமளவு தற்கொலைகளுக்கு காரணமாக அமைந்தமை அறியப்பட்டு மத்திய வங்கி அதிகாரிகளுடனும் கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டன.

சஞ்சீவியில் வெளியான கட்டுரையில் 2018 இன் முன்னர் கிளிநொச்சியில் சுகாதார சேவை உன்னதமாக இருந்ததாகவும், தற்போதே அது சீர ழிந்துள்ளதாகவும் வலிந்து காட்ட முற்பட்டுள்ளார் கட்டுரையாளர். உண்மையில் 2018 க்கு முன்னர் தான் பல சீத்துவக்கேடுகள் கிளிநொச்சி சுகாதாரத் துறையில் அரங்கேறியிருந்தன.

**தொற்று நோய் அறிவித்தல்**

2018 க்கு முன்னர் கிளிநொச்சி மாவட்டத்தில் அறிவிக்கப்பட வேண்டிய தொற்று நோய்கள் (Notifiable Diseases) தொடர்பான அறிவித்தல்கள் (notfications) குறித்த மருத்துவமனைகளின் மருத்துவர்களால் அறிவிக்கப்படும் நடைமுறை இருக்கவில்லை. கிளிநொச்சி மாவட்ட பொது மருத்துவமனையில் மட்டும் ஒரு பொதுச் சுகாதாரப் பரிசோதகர் நோயாளர் தங்கியிருந்த விடுதி விடுதியாக சென்று காய்ச்சல் உள்ளவர்களின் பெயர்களை தருமாறு கேட்டுப்பெற்று அதன் மூலமே தொற்று நோய்கள் தொடர்பான தரவுகள் பெறப்பட்டு அதன் பின்னான தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வந்தன. குறிப்பாக டெங்கு தொடர்பான தரவுகள் அவ்வாறே பெறப்பட்டன.

2018 க்கு பின்னர் இந்தத் தவறான நடைமுறை மாற்றப்பட்டு இலங்கை முழுவதும் உள்ளது போன்று சகல மருத்துவர்களும் தொற்று நோய் தொடர்பான அறிவித்தலை அனுப்புவதற்கு பயிற்சிகள் வழங்கப்பட்டு நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டது. இந்த நடைமுறையை கிளிநொச்சி மாவட்ட பொது மருத்துவமனையில் அமுல்படுத்துவதற்கு, முன்னர் அதிகாரத்தில் இருந்தவர்கள் பெரும் இடையூறுகளை ஏற்படுத்தினர். குறிப்பாக தகவல்களைத் தொகுத்து அனுப்புவதற்காக புதிதாக நியமிக்கப்பட்ட தொற்றுக்கட்டுப்பாட்டு தாதிய உத்தியோகத்தர் அச்சுறுத்தப்பட்டதுடன் விடுதித்தாதிய உத்தியோகத்தர்களுக்கு தகவல்களை வழங்க வேண்டாம் எனவும் எச்சரிக்கப்பட்டது. இத்தகைய இடைஞ்சல்களை அகற்ற புதிய நிர்வாகத்துக்கு மூன்று மாதங்களுக்கு மேல் சென்றதும் குறிப்பிடத்தக்கது. அது மட்டுமல்லாது புதிய, சரியான நடைமுறை அமுலுக்கு வந்ததன் மூலமாக கிளிநொச்சியில் டெங்கு அபாயம் ஏற்பட்டுள்ளதாக இதே கட்டுரையாளர், வடக்கின் நாளிதழ் ஒன்றில் செய்திக்கட்டுரை ஒன்றை வரைந்திருந்தார் என்பதையும் அதற்கான தெளிவான பதிலை அப்போதைய கிளிநொச்சி மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் உத்தியோகபூர்வமாக அந்த நாளிதழுக்கு வழங்கி அது பிரசுரமானதும் குறிப்பிடத்தக்கது.

**தவறான நிதிக் கையாள்கை**

இதேபோல் கிளிநொச்சி மாவட்டப் பொது மருத்துவமனைக்கு மத்திய அரசிடமிருந்து அபிவிருத்திக்காக கிடைத்த ரூபா பத்து மில்லியனையும் பொருத்தமான நடவடிக்கைகளுக்கு செலவழிக்காமல் இருந்துவிட்டு கடைசி நேரத்தில் நன்றாக இருந்த சகல மலசலகூட இருக்கைகளுக்கு (commode) பதிலாக, தரங் குறைந்த மலசல கூட இருக்கைகளை மாற்றியும், நன்றாக வேலைசெய்து கொண்டிருந்த தரமான கூரை மின்விசிறிகளை கழற்றி எறிந்துவிட்டு தரங்குறைந்த புதிய மின்விசிறிகளைக் கொள்வனவு செய்து மாற்றுவதற்குமாக அந்த நிதி செலவிட்டு முடிக்கப்பட்டிருந்தது. இந்தக்கட்டுரையாளர் ஏன் அந்த விடயத்தை வெளிக்கொணரவில்லை?

**தவறாக வழி நடத்தப்பட்ட மக்களும் ஊழியர்களும்**

நெதர்லாந்து அரசின் நிதி உதவி மற்றும் கடனில் பல ஆயிரம் மில்லியனில் கிளிநொச்சி மாவட்டப் பொது மருத்துவமனைக்கு விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவு அமைக்க வந்த வாய்ப்பை குழப்பியதிலும் முன்னைய நிர்வாகத்துக்கு பங்குள்ளதை கிளிநொச்சி மருத்துவமனையின் நேர்மையான அதிகாரிகள் இன்றும் நினைவு கூருவர். வடக்கின் மத்தியிலும் ஏ-9 வீதியின் நடுவிலும் உள்ள மிக அதிக விபத்துகள் நடைபெறுகின்ற பகுதியான கிளிநொச்சிக்கு மிகவும் முக்கியமான விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவை அமைக்காமல் பெண்களுக்கான பிரசவ மற்றும் பெண் நோயியல் விடுதி, பிரசவ அறைகள் என்பவற்றுக்கும் செயற்கைக் கருத்தரிப்பு நிலையத்துக்கான ஆய்வு கூடமான தொகுதியாக முற்றாக மடைமாற்றியதும் வீணடித்ததும் குறிப்பிடத்தக்கது. அரச மருத்துவமனைகளில் குறிப்பாக 04 வருடங்களுக்கு ஒரு தடவை கட்டாயமாக பிரசவ மருத்துவ நிபுணர்களுட்பட அனைத்து மருத்துவர்களும் இடமாற்றத்துக்கு உட்பட வேண்டிய ஒரு மாவட்டப் பொது மருத்துவமனையில் நிலைபேறாக கொண்டு நடத்த முடியாத செயற்கைக் கருத்தரிப்பு நிலையத்தை உருவாக்கும் திட்டத்துக்கு பெருமளவு நிதியை முன்னைய நிர்வாகம் விரயமாக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அது மட்டுமல்லாது விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவுக் கட்டடத்தைத்தான் கட்டப்போகின்றோம் என 2018 ஆரம்பம் வரை மக்களையும் ஊழியர்களையும் மட்டுமல்லாது நோயாளர் நலன் புரிச்சங்கத்தையும் மருத்துவர்களையும் முன்னையவர்கள் நம்ப வைத்திருந்ததும் குறிப்பிடத்தக்கது. உண்மை வெளிவந்து 04 வருடங்களின் பின்னரும் கூட சிலர் இன்றுவரை அதே பொய்யை மீள மீளச் சொல்லி வருவதும் ஏன் என்பது புரியவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org